
கல்கி

KALKI 16-8-81 ரூ. 1.20



"நான் ஆர்க்கிடெக்ட்
அதனால் நான் கட்டும் உடையிலும் கற்பனை இருக்க வேண்டுமே."






உங்கள் அந்தஸ்தே தனி
அதற்கேற்ற துணி

மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்

மஃபத்லால் இண்டஸ்ட்ரீஸ் மஃபத்லால் ஃபைன்

MF-311AM



ADWAVE/IB/1704

பொன்மனச் செம்மலும்

வித்துவான்
வே. லட்சுமணன்—

தமிழ்பேசும் திரைப்படம் பொன் விழாக் காணும் இந்தப் பொன்னான நேரத்தில் பொன்மனச் செம்மலை நினைப்பதோடு போற்றவும் கடமைப்பட்டிருக்கிறது திரை உலகம்.

நிகரற்ற நடிப்பு,

நுண்புலனோடு காட்சிகளை இயக்கும் திறன்,

கதையைத் தேர்ந்தெடுக்கும் மதியூகம்,

பாட்டுக்கள், உரையாடல் இவற்றை அமைத்துக் கொள்ளும் பக்குவம்,

காட்சிகளைத் தொகுக்கின்ற கூரிய அறிவு,

எல்லோரையும் வசீகரம் செய்கின்ற ஆற்றல்—

இப்படி அடுக்கிக் கொண்டே போகக்கூடிய அளவுக்கு எண்ணற்ற தகுதிகளைத் தன்னகத்தே கொண்டவர் பொன்மனச் செம்மல்.

'கலை கலைக்காகவே' என்ற கொள்கைக் குரியவர்களின் இடையில் ''கலை வாழ்க்கைக் காகவே'' என்று முரசு கொட்டி, மக்களுக்கு விழிப்பூட்டி, மறு மலர்ச்சியைத் தோற்றுவித்தவர் மக்கள் திலகம்.

அவரால் தமிழ்ப் படங்களின் தரம் உயர்ந்தது. நடிப்பவர்கள் நாட்டுக்குச் சேவை செய்கிறவர்கள் என்ற மதிப்பு உருவாயிற்று.

1935ல் சதி லீலாவதியில் முதன் முதலாக நடிக்கத் தொடங்கியவர், அதிலிருந்து நாற்பது ஆண்டுகளுக்கு மேல் இடை விடாது நடித்து வெளிவந்த படங்கள் ஏராளம். காலம் வளர வளரத் தாமும் வளர்ந்தார்; தம் கொள்கையையும் வளரச் செய்தார்.

லட்சக் கணக்கான ரசிகர்களைத் தம்மைப் பின்பற்றுகிறவர்களாக அடையப் பெற்றார். தம் நாவிலிருந்து பிறக்கும் வேண்டுகோளை ஆணையாக ஏற்கும் ஆயிரக் கணக்கான தொண்டர்கள் தம்மைப் பின்தொடரும் வாய்ப்பைப் பெற்றார்.

பொன்மனச் செம்மல் நடித்த படம் என்றால் போதும். அட்சய பாத்திரம்தான்! படமெடுத்தவர்கள், வெளியிட்டவர்கள், காட்சிக் கொட்டகையாளர், மற்றும் சம்பந்தப் பட்ட எல்லோருக்கும் சரியான வேட்டை தான்.

காரணம், எல்லையற்ற ஆர்வத்தோடு மக்கள் திரண்டு வந்து அவருடைய படங்களைப் பார்ப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல், ''மக்கள் திலகம் அவர்களின் முகம் கண்டால் முப்பதாயிரம் வாக்குகள் அதிகமாகும்; அவர் வாய் திறந்து பேசினால் மேலும் பல்லாயிரக் கணக்கான வாக்குகள் கூடும்'' என்ற அளவுக்கு அவரது செல்வாக்கு உயர்ந்தது. அந்தச் செல்வாக்குக்கு உதவியவை திரைப்படங்கள்; திரைப்படங்களில் அவர் கையாண்ட உத்தி முறைகள். மேலும் வாழ்க்கையில் கடைப்பிடித்த கோட்பாடுகளை



✕ சதிலீலாவதியில்

யும் சொல்ல வேண்டும். இவை மிகவும் முக்கியமானவை.

ஆரம்பத்தில் எடுத்த எடுப்பிலேயே அவர் உயர்ந்துவிடவில்லை. நீண்ட போராட்டத்துக்குப் பின் கிடைத்த செல்வாக்கு அது.

கண்ணீரும் இரத்தச் செந்நீரும் உகுத்துப் போட்டி, பொறாமைகளை யெல்லாம் கடந்து, பொறுமையோடும், விடா முயற்சியோடும் அயராது உழைத்ததால் பெற்ற பெரும் பேறு அந்தச் செல்வாக்கு.

வெள்ளித் திரையின் மூலம் மக்களின் உள்ளத் திரையில் தாம் ஒளி வீசுவதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம்.

எத்தனையோ குறைகளுடன், அறியாமை என்கிற திரைக்குள் புதைந்திருந்த பாமரர்களின் எண்ணத்தில் புகுந்து, புதிய சித்தாந்தத்தைத் தோற்றுவித்த சிறப்புக்கு இவர் சொந்தக்காரர்.

சினிமா என்றாலே பார்க்கத் தகாதது என்று கருதிய மேல் மட்டத்தாரும் மனம் மாறும் வகையில், தமிழ்ப் படங்களின் ஸ்தானத்தை உயர்த்திய பெருமைக்கு இவர் உரிமையாளர்; சினிமா என்பது வெறும் பொழுது போக்குச் சாதனம் அன்று என்றும், கருத்துக் கருவூலமாகவும் அறிவுச் சுரங்கமாகவும் அமைந்து, எல்லா நிலையினருக்கும் எல்லா நலங்களையும் பகிர்ந்து அளிக்கும் சீதனம் ஆகும் என்றும் நிலைநாட்டிய சாதனைக்கு உடைமையாளர்.

பொன்விழா ஆண்டும்

பள்ளத்தில் கிடந்தவர்களை மேட்டுக்குக் கொண்டுவந்து, புதிய வானத்தைக் காணச் செய்தார்; புதிய பூமியைப் பார்க்கச் செய்தார்.

சின்னஞ் சிறார்முதற்கொண்டு, தொண்டுக் கிழவர் வரை எல்லோரையும் தட்டி எழுப்பினார்.

கலை நயத்தோடும், கற்பனை வளத்தோடும் இழைத்துக் குழைத்து அற்புதமான போதனை களை அமுதமே போல அள்ளித் தெளித்தார்.

தாய்ப் பாசத்துக்குத் தனி இடம் தந்தார். உடன் பிறப்பின் இரத்த பாசத்தை உணர்ச்சிக் கோளமாக உருவாக்கிக் காட்டினார்.

மனிதாபிமானத்தின் மாண்புகளைச் சித்திரித்தார்.

ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும் என்றார்.

'எல்லோருக்கும் இன்பம் சொந்தம்' என்றார்.

''திருடாதே'' என்றார்.

''தூங்காதே'' என்றார்.

''திருடினால் வாழ்வு கெடும்'' என்பதைக் காட்சி வாயிலாக எடுத்துரைத்தார்.

''தூங்கினால் இழப்பு ஏற்படும்'' என்பதை நிகழ்ச்சி வாயிலாக எடுத்துச் சொன்னார்.

''உழைப்பதிலா, உழைப்பைப் பெறுவதிலா, இன்பம் உண்டாவதெங்கே சொல், என் தோழா!'' என்ற கேள்வியை ஒரு பாட்டிலே கேட்டு, உழைப்பதில்தான் இன்பம் உண்டாகும் என்கிற உண்மையை நெஞ்சில் பதிய வைத்தார்.

''ஒன்றே குலம் என்று பாடுவோம்'' என்று பாடினார்.

சாதி வேற்றுமை கூடாது என்ற படிப்பினைக்கு இது வழிகாட்டிற்று.

''ஒருவனே தேவன் என்றுபோற்றுவோம்'' என்று பாடினார்.

''தெய்வம் என்பது இல்லாமலில்லை; ஆனால் அந்தத் தெய்வம் ஒரே தெய்வம்தான். அந்தத் தெய்வ சக்தியைப் போற்றுவது கடமை'' என்ற கருத்துத் தொனித்தது.

✠ மர்மயோகியில்



''மனிதன் கோழையாக இருக்கக் கூடாது. கோழையாக இருந்தால் மற்றவர்கள் ஏறி மிதித்து விடுவார்கள்'' என்ற கருத்தைச் சொல்ல அவரே ஒரு கோழையாக நடித்துக் காட்டியவர், வீரப் பண்பின் விளைநிலமாகவும் வேடம் தரித்து, எதிரிகளைப் பந்தாடித் தூக்கியெறிந்து, வீர சாகசங்கள் புரிந்து, மக்கள் எல்லோரும் 'எங்க வீட்டுப் பிள்ளை' என்று போற்றுமளவுக்குச் சாதனை செய்தார்.

நடிப்பு ஒரு தொழில் மட்டுந்தான் என்ற எல்லைக் கோட்டைக் கடந்து, அது சமுதாய



தமிழ் பேசும் திரைப்படத்தின் பொன் விழா ஆண்டு

வளர்ச்சிக்கான உயர்ந்த பணி என்பதை எல்லோருக்கும் உணர்த்தினர்.

''தீயவர்கள் திருத்தப்பட வேண்டும்; அல்லது அழிக்கப்பட வேண்டும்; இல்லையேல் நல்லோரின் வாழ்வு நசித்துப் போக நேரும்'' என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகத் தான் நடித்த பெரும்பாலான படங்களிலெல்லாம் தீமைகளின் பிரதிநிதித்துவம் பெற்று ஆர்ப்பாட்டம் செய்த 'வில்லன்'களின் மீதுதாவிப் பாய்ந்து, சாடி மோதித் தாக்கி வெறிந்து வீர விளையாட்டுக்களைப் புரிந்தார்.

இதனால் படம் பார்ப்போரின் உள்ளத்தில் வீரம் ஏற்பட்டது; எழுச்சி பிறந்தது. கிளர்ச்சி உருவாயிற்று.

வீரக் காட்சிகளில் தம் உயிரையே பணயம் வைத்து நடிப்பார் பொன் மனச் செம்மல். காட்சிகள் தத்ரூப்மாக இருக்க வேண்டும் என்பது அடிப்படைக் குறிக்கோள்.

மாடியிலிருந்து கீழே குதிப்பார்; ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு அனாயாசமாகப் பாய்வார்; வாளைச் சுழற்றிக் கொண்டே படிகளில் ஏறுவார்; ஒரே நேரத்தில் நூற்றுக் கணக்கான எதிரிகளைச் சாடுவார்; நெருப்புப் பந்தங்களோடு விளையாடுவார்; பனிப் பாறைகளோடு மோதுவார்...

எல்லாவற்றையும் தாமே செய்வார்! அந்த ஆற்றல் இவரது தனிச் சிறப்பு.

வெளி நாட்டுத் திரைப் படங்களிலும் வீரக் காட்சிகள் உண்டு. அவர்களுக்குப் படப்பிடிப்புச் சாதனங்களின் வசதிகள் ஏராளம். அத்தகைய வசதிகளின் உதவி இல்லாமலேயே தமிழ்ப் படங்களில் அற்புதங்களைச் செய்து காட்டிய பெருமை மக்கள் திலகத்துக்கு உண்டு.

இவர் கதாநாயகனாக நடித்த முதல் படம் இராஜ குமாரி.

இந்தப் படத்தில் ஒரு காட்சி; பயங்கரமான காட்சி.

தூக்கிலே தொங்குவதாக உள்ள காட்சி.

முதன் முறையாகக் கதாநாயகன் பாத்திரம் தரப்பட்ட நிலையில், இக்காட்சியில் தம் திறமையை வெளிக்காட்ட வேண்டிய அவசியக் கட்டுப்பாடு மக்கள் திலகத்துக்கு உண்டாயிற்று.

ஒரு மேடை; மேலே ஓர் உத்தரம்; உத்தரத்தில் கட்டப்பட்ட கயிறு. கீழே ஒரு பலகை. பலகையில் நிற்கும் கதாநாயகன் கழுத்தில் கயிறு மாட்டப்படும். பலகை இழுக்கப்படும்.

உடனே அந்தரத்தில் கதாநாயகன் தொங்குவான், கயிறோ கழுத்தை இறுக்கும்.

கதாநாயகனது பாரம் தாங்காமல் உத்தரம் முறியும். கதாநாயகன் கயிற்றோடு பாதாளப் பள்ளத்தில் விழுவான்.

இப்படிப்பட்ட காட்சி.

ஏதேனும் எங்கேனும் ஒரு இம்மியளவு பிசகு ஏற்பட்டாலும் கதாநாயகனது உயிருக்கு ஆபத்துத்தான்!

வீரத் துடிப்பும், சாதனையில் ஆர்வமும், கதாநாயகன் ஸ்தானத்தை நிலைநிறுத்திக்-கொள்ள வேண்டும் என்கிற கோட்பாடும் பொன்மனச் செம்மலை இக்காட்சிக்கு ஆயத்தமாக்கின.

பலகையில் நின்றார். பலகை இழுக்கப்பட்டது. கயிறு கழுத்தை இறுக்கிற்று. கழுத்தின் குரல்வளை மேல் நோக்கி இழுக்க, உடல் கனம் கீழ் நோக்கி இழுக்க...

கழுத்தில் ஒரு திருப்பம், ஓர் அதிர்ச்சி.

கண நேரம்தான்! ஆனால் கருதிப் பார்க்க முடியாத அளவுக்கு இம்சையின் பாதிப்பு.

உத்தரம் முறிந்து பள்ளத்தில் விழுந்தார். உடைந்த உத்தரத்தின் பகுதிகள் மேலே விழுந்தன. மயக்கம் ஏற்பட்டது. எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள். ''என்ன, என்ன?'' என்று விசாரித்தார்கள்.

''ஒன்றுமில்லை'' என்றார் பொன்மனச் செம்மல்.

ஒன்றும் இல்லையா? இதைவிட வேறு என்ன ஆகவேண்டும்? கலையார்வத்தாலும், சமூகப் பணிக்குத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்கிற கொள்கைப் பிடிப்பாலும் வெளி வந்த வாசகம்தான் ''ஒன்றும் இல்லை'' என்பது.

(தொடரும்)

புகைப்படங்கள்உதவி: பிலிம் நியூஸ் ஆனந்தன்



அருள்வாக்கு

நிறைவேறாத ஆசையின் இரண்டு உருவங்கள்

சாதாரணமாக மனிதர்களுக்கும் பிராணிகளுக்கும் வயிற்றுக்கு ஆகாரம் கொடுத்தால் அப்போதைக்குப் பசி அடங்குகிறது. நெருப்புக்கு மட்டும் நாம் ஓர் ஆகாரத்தைப் போட்டால் அது அடங்குவதே யில்லை. இன்னும் அதிகமாகக் கொழுந்து விட்டு எரிகிறது! மேலும் பல பொருள்களைத் தகித்துக் கபளீகரம் செய்கிறது. நெருப்பு பிரகாசமாக இருந்தாலும் அது தான் ஸ்பரிசித்துவிட்டுச் செல்கிற பண்டங்களை யெல்லாம் கன்னங்கரேல் என்று கறுப்பாக்கிக் கொண்டு போகிறது. காமமும் இப்படிப்பட்டது தான். அது தீயாக எரிகிறது. அதற்கும் பிரியமான வஸ்துவைக் கொடுப்பதால் பசி அடங்காமல் அதிகமாகிக் கொண்டே போகிறது. அது நம் மனசையே கறுப்பாக்கி விடுகிறது. ஓர் இச்சை— பூர்த்தியாகிற போது தற்காலிகமாக ஒரு மகிழ்ச்சி உண்டானாலும் பிற்பாடு அதையே மீண்டும் தேடி அலைந்து அமைதியையும் சந்தோஷத்தையும் குலைத்துக் கொண்டு அழுகையையும் கோபத்தையும் உண்டாக்கிக் கொள்கிறோம். அழுகை துக்கத்தில் உண்டாவது. நிறைவேறாத ஆசையின் இரண்டு உருவங்கள்தாம் துக்கமும், கோபமும்!

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

சக்ரா

'கல்கி'க்காகவே 'சக்ரா' படம் பார்த்த டைரக்டர் துரை சொல்லுகிறார்:

'பசி', 'சக்ரா' இரண்டிலுமே பொதுவாக, தூக்கலாகத் தெரிகிற அம்சம் வறுமை. ஆனால் 'சக்ரா'வில் ஏழைமையால் உண்டாகிற தவறுகளைத்தான் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்; அல்லது மிகைப்படுத்திக் காண்பித்திருக்கிறார்கள். ஒரு வித்தியாசமான கோணத்தில் காட்டியிருக்கிறார்கள் என்பதையும் சொல்லத்தான் வேண்டும்.

'பசி'யில் டெல்லி கணேஷின் பாத்திரம் விட்டேற்றியாக இருக்கும் குடும்பத் தலைவன். பிள்ளை படிக்காமல் கோலி விளையாடிக் கொண்டிருக்கிறானே என்று அவனிடம் சொல்லும்போது 'அவன் படிக்கணும்னு இருந்தா படிப்பான் புள்ளே!' என்று பொறுப்பைத் தட்டிக் கழிக்கிற பாத்திரம். தலைவன் சரியில்லாமல் போகும்போதுதான் குடும்பமே சரியில்லாமல் போகிறது!

'சக்ரா'வில் வாழ்க்கையில் அடிபட்டுச் சேரிக்கு வந்து சேர்கிற 'அம்மா'வை ஒரு கேர்லெஸ் காரக்டராக ஏன் காட்டியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு கேர் ஃப்ரீ ஸ்லம் கேரக்டராகக் காட்டியிருக்கலாமே?

படத்தில் செக்ஸுக்குத்தான் பிரதான இடம் கொடுத்திருக்கிறார்களோ என்று தோன்றுகிறது. 'பசி'யில் அப்படி இருக்கவில்லை.

ஆனால் ஸ்மிதா பாட்டீலின் நடிப்பு இருக்கிறதே, அது நிச்சயமாக வெரி நேச்சுரல் ஆக்டிங். அதிலும் பெரிதாக விளம்பரப்படுத்தப் பட்டுள்ள குளிக்கிற ஸீன். ஒரு சேரிப் பெண் குளிக்கிற சாவகாசம், இயற்கையான பாவம் எல்லாவற்றையும் அப்படியே அப்பட்டமாகச் செய்திருக்கிறார் ஸ்மிதா. நம் ஆர்ட்டிஸ்ட்ஸ் இது மாதிரி சீனை செய்ய ஒப்புக்கொள்ள மாட்டார்கள்! செக்ஸ் கண்ணோட்டத்தோடு பார்த்தாலும் ஸ்மிதா



பாட்டீலின் நடிப்புத்தான் படத்தின் முக்கிய சிறப்பு. அதிலும், டெத் ஸீன் — ஆர்க்யூமெண்ட் ஸீன் — நஸிருத்தீன் ஷா வருகிற ஒரு காட்சி — ஆகிய மூன்று இடங்களில் மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார். அழுத்தமாகச் செய்திருக்கிறார் என்பதுதான் சரி. காரெக்டருடன் இணைந்து ஒன்றிவிடுகிறார் இந்த இடங்களில்.

ஆரம்பத்தில் வெகு அழகாகத் துவங்கியதைப் பார்த்து, நமது தர்மத்தை அடிப்படையாக வைத்துப் பண்ணியிருக்கிறார்கள் என்று நினைத்தேன். கடைசியில் 'தோ ரஹா' பாணியில் பண்ணி விட்டார்களோ என்று சற்று வருத்தமாகக்கூட இருந்தது. அது மாதிரி கொஞ்சம் மிகைப்படுத்திவிட்டார்கள் காரெக்டரை.

'அம்மா' ஹெல்ப்லெஸ் என்று காண்பித்திருக்கிறார்கள் 'சக்ரா'வில். அப்படியிருந்தும்கூட நமக்கு ஏனோ அந்த காரெக்டரிடம் அநுதாபம் தோன்றுவதில்லை. நஸிருத்தீன் ஷாவுக்கு ஆப்பர்சூனிடியே இல்லை தம் திறமையைக் காட்ட.

கடைசியாக—

இந்தப் படத்தில் நடிப்புக்குப் பரிசு பெற்ற ஸ்மிதா-வெர்ஸஸ்-பரிசை நழுவ விட்ட சுஹாசினி:

வாழ்க்கையில் பார்க்கிற இயற்கையான காரக்டரைப் பண்ணுவது. கொஞ்சம் கஷ்டம்தான். சுஹாசினி அவர் பாணி காரக்டரைப் பண்ணியிருக்கிறார் தாம் நடித்த படத்தில். ஆனால் ஸ்மிதா பாட்டீல் அழுத்தமான, இயற்கையான, மிகச் சிறந்த நடிப்பால் மனத்தில் தங்கிவிடுகிறார்.

பேட்டி : சாருகேசி



ஸ்பிக் அளிக்கும் சுதந்திர தின வாழ்த்துக்கள்

பசுமைப் புரட்சியால் பாரதம் ஓங்கிட
வாழ்வு மலர்ந்து மக்கள் மகிழ்ந்திட
உரம் அளித்து வளம் சேர்க்கும்
ஸ்பிக் அளிக்கும் சுதந்திர தின
வாழ்த்துக்கள்.



SPIC

சதர்ன் பெட்ரோகெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
ஸ்பிக் சென்டர், 97, மவுண்ட் ரோடு, சென்னை 32

ADWAVE.SPIC/1710



அலைகள் ஓய்வதில்லை

விழியில் விழுந்து இதயம் நுழைந்து
உயிரில் கலந்த உறவே!

தன் வரவுக்குக் காத்திருந்த மேரி, பார்த்துச் சலித்த பாறைகளை விச்சு ஒவ்வொன்றாய் முத்தமிடும் ஒரு காட்சியிலேயே அவர்கள் காதலின் ஆழம் தெளிவாகிறது. விரல்களின் முதல் ஸ்பரிசத்திலும், பின் கழுத்தில் மெல்லப் பதிக்கும் முத்தத்திலும், விச்சு நளினமாய் மேரியை ஆலிங்கனம் செய்வதிலும் நுணுக்கமான காதல் உணர்வுகள் வெளிப்பட மெல்லச் சிலிர்க்கிறது நம் மனம்.

விழிகளில் வழிகின்ற துளிகளில் இவன்
மனம் தினம் தினம் கரைகின்ற வரையிலும்...

காதல் தெரிந்ததும் கொதித்து எழுகிறான் மேரியின் அண்ணன் டேவிட் (தியாக ராஜன்). மேரியை அடித்துப் புரட்டி மிரட்டுகிறான், பைக்கில் துரத்தி விச்சுவை விளாசித் தள்ளுகிறான். இருந்தும் அடங்கவில்லை அவர்கள் மோகம். அண்ணியும் எச்சரிக்கிறாள் மேரியை. டேவிட் வேலைக்காரியை மானபங்கப்படுத்தியதும் வெறும் களிப்பாட்டமாய்ப் போன கதையில் விழுகிறது சிக்கல் முடிச்சு. டேவிட்டிடம் நியாயம் கேட்டுத் தோற்கும் அண்ணி மேரிக்கு உதவுகிறாள்.

கொத்து மலரே, அமுதம் கொட்டும் மலரே
இங்கு தேனை ஊற்று இது தீயின் ஊற்று

வேலைக்காரன் பதில் சொல்லுமிடத்திலும், அண்ணியிடம் மேரி காதலுக்கு அர்த்தம் சொல்லும் இடத்திலும் மணிவண்ணன் காதைப் பிளக்கும் கைதட்டல்கள் பெறுகிறார். தாளங்களுடன் அலை அசைவுகளையும் மழைச் சிதறல்களையும் இழை இழையாய்ப் பின்னி இருக்கும் எடிட்டர் இயற்கையில் காதலைக்கண்டு வழிபட்டிருக்கிறார். அத்தனை பிரேம்களில் திறமை பேசும் கண்ணனின் கேமரா நம்மை அசர வைக்கிறது. எத்தனை முறை கேட்டாலும் சலிக்காத பாடல்களினூடே வரும் வைரமுத்துவின் கவிதை வரிகளை இன்னும் மனம் அசை போடுகிறது. பின்னணி இசையில் புதிய எல்லைகளை எட்டும் இளையராஜா தம்மையே மிஞ்சுகிறார்.


இரவும் பகலும் உரசிக் கொள்ளும்
அந்திப் பொழுதினில் வந்துவிடு

இதில் வருவது போன்ற பரபரப்பான க்ளைமேக்ஸ் பார்த்து ரொம்ப நாளாகிறது. மேரியும் விச்சுவும் மதங்களைத் துறந்து எதிராளிகளைப் பேச்சிழக்கச் செய்து இணையும் போது துணைவந்த தோழர்கள் முகத்தில் பிரவாகமெடுக்கும் சந்தோஷம் கடைசியில் நம்மிடமும் ஒட்டிக் கொள்கிறது.

காதலைச் சிறப்பித்து பாரதிராஜா தீட்டிய இன்னொரு வண்ண ஓவியம்.

—சிந்து-ஜீவா




இன்று சுதந்திர தினம்...
அரசியல் சுதந்திரம் கிடைத்து விட்டது..
பொருளாதார சுதந்திரத்துக்கு மக்கள்
பாடுபட வேண்டும்!.. நாடு முன்னேற
மக்கள் உழைக்க வேண்டும்....
ஜெய் ஹிந்த்!


நீ ஒன்றும் கவலைப்படாதே! உங்களுக்காகப்
பஞ்சாயத்து தேர்தலில் பதினெட்..ட்..ட்..டு சதவீதம்
இடம் ஒதுக்கி இருக்கோம்!
கூதனார் கிராமத்தில்
ஜாதிப் பூசலில்
அரிஜன காலனி தீக்கிரை
இதர
அரசியல்
கட்சிகள்

சுயநல அரசியலின் சொர்க்க பூமி!

‘சிமெண்ட் பர்மிட்டுக்கு மனு கொடுத்திருக்கிறோம்; நாலு நாளில் இல்லாவிடினும் நாலு மாதத்திலாவது கிடைத்துவிடும்’ என்ற ஆறுதல் இருந்தது. இப்போது அதன் தலையிலும் இடி விழுந்து விட்டது!

சிமெண்ட் பர்மிட்டுக்கு மனுக்களை ஏற்றுக் கொள்வதையே தாலுக்கா ஆபீஸ் நிறுத்திவிட்டது! ‘ஸ்டாக் இல்லை’ என்று கையை விரிக்கிறது.

இதனால் பாதிக்கப்படுவது சராசரிகளான சத்திய சந்தர்கள்தாம். கள்ள மார்க்கெட் சுறாக்கள் சிமெண்ட் வியாபாரத்தில் கொழுக்கிறார்கள். கறுப்புப் பண முதலைகள் 30ரூ மூட்டைக்கு 100ரூ வரை தந்து சிமெண்ட் வாங்குகிறார்கள்; பல மாடி கட்டிடங்களை எழுப்புகிறார்கள். அந்த ‘ஃபிளாட்டு’களை வேறு சில கறுப்புப் பணத் திமிங்கிலங்கள் நோட்டுக்களை எண்ணிக்கொடுத்து வாங்குகிறார்கள். இத்தனை பேருக்கும் உதவி, தங்களுக்கும் கணிசமாக உதவிக் கொள்கிறார்கள் பல்வேறு ஆளும் கட்சிகளைச் சேர்ந்த அரசியல் வாதிகள். பர்மிட் தேவையா? இந்த அரசியல் கரடிகள் கேட்கிற காணிக்கையைச் செலுத்தினால் போதும், கண்ணிமைக்கும் நேரத்தில் ரெடி!

சிமெண்ட் உற்பத்தியாளருக்கு டன்னுக்கு இவ்வளவுதான் பெறலாம் என்று அரசு விலை நிர்ணயம் செய்துள்ளது. இந்த விலை கட்டுப்படியாகாமல் பல சிமெண்ட் ஆலைகள் நஷ்டமடைந்து வருகின்றன. அதே நேரத்தில் அந்த ஆலைகள் உற்பத்தி செய்யும் சிமெண்ட் இரட்டிப்பு விலைக்கும் மும்மடங்கு விலைக்கும் கள்ளச் சந்தையில் விற்கப்படுவதைப் பார்க்கையில் சிமெண்ட் ஆலைகளில் முதலீடு செய்துள்ள ஆயிரக்கணக்கான சிறுசிறு பங்குதாரர்களின் வயிறு பற்றி எரியாமல் என்ன செய்யும்?

இந்த விபரீத நிலைமை மாற வழி இல்லாது போகவில்லை. சிமெண்ட் கண்ட்ரோல்களை நீக்குவதுதான் வழி. சிமெண்ட் அதிகமாக உற்பத்தியாக ஊக்கமளிப்பதுதான் மார்க்கம்.

சென்ற ஆண்டு சிமெண்ட் உற்பத்தி 17.5 மிலியன் டன். ஆனால் 27 மிலியன் டன் வரை உற்பத்தி செய்யக்கூடிய சக்தி நமது ஆலைகளுக்கு இருக்கிறது. அதை முழுவதும் பயன்படுத்த முடியாமலிருப்பதற்குக் காரணங்கள்: 1. மின் வெட்டு 2. ரயில் வாகன்கள் போக்குவரத்து சரியில்லாததால் நிலக்கரி பற்றாக்குறை. இந்த நிலைமையைச் சீராக்கி, இருக்கிற ஆலைகள் உற்பத்தியை அதிகரிக்கவும் புதிய ஆலைகள் தோன்றவும் வழி வகுக்க வேண்டும்.

ஆனால் சுயநலமே உருவான நமது அரசியல்வாதிகள் இதையெல்லாம் செய்யமாட்டார்கள். பற்றாக்குறையை ஈடுகட்ட சிமெண்ட் இறக்குமதி செய்கிறோம், சிமெண்ட் ஆலைகள் கொஞ்சம் விலை உயர்த்திக் கொள்ள அனுமதிக்கிறோம் என்றெல்லாம் கண்துடைப்பு காரியங்களைத்தான் பண்ணுவார்கள். ஏனெனில், பர்மிட் – லைசென்ஸ் – கோட்டா ஆட்சிதான் அரசியல் ஓநாய்களின் சொர்க்க பூமி!

சிமெண்ட் நிறுவனங்கள் நஷ்டப்பட, அதில் முதலீடு செய்த பங்குதாரர்கள் தலையில் கை வைத்துக்கொள்ள, அதே நேரத்தில் கள்ளச்சந்தை வியாபாரமும் கறுப்புப்பணப் பொருளாதாரமும் மொழு மொழுவெனக் கொழுப்பதைப் புனித பாரத நாட்டில் மட்டுமே பார்க்க முடியும்!

நமது அரசியல் வாதிகளுக்கும் அறிவாளிகளான அமைச்சர்களுக்கும் இதுவும் போதவில்லை! கொரியா தேசத்து சிமெண்ட் ஆலை முதலாளிகளையும் பங்குதாரர்களையும் கொழுக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள்! இங்குள்ள சிமெண்ட் ஆலையில் உற்பத்தியாகும் பொருளுக்கு விலை நிர்ணயம் செய்துவிட்டு அதைப்போல் மூன்று நான்கு மடங்கு விலை கொடுத்துக் கொரியாவிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்கிறார்கள்! பற்றாக்குறையை ஈடு செய்கிறார்களாம்!

பற்றாக்குறை சிமெண்ட்டில் அல்ல; புத்தியில்தான்!



1981 ஆகஸ்டு 16
துன்மதி ஆடி 32
மலர்: 40 இதழ்: 3

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

"உங்கள் பெண்ணுக்குக் கல்யாணம் ஆக வேண்டுமா? உடனே வாருங்கள். தெற்கே மாயவரம் அருகே திருமணஞ்சேரியில் உள்ள மணவரமருளும் மணக் கோலநாதர் போல் இங்கே ஒருவர்....!"

சென்னை—மாமல்லை கடற்கரைச் சாலையில் கோவளம் தாண்டிவிட்டால் மூன்று-நான்கு கிலோ மீட்டர்தான்! வங்கக் கடற்கரைக்கும் பக்கிங்ஹாம் கால்வாய்க்கும் இடையே திருவிடவெந்தையில் கோவில் கொண்டருளுகிறார் நித்திய கல்யாணப் பெருமாள்! ஊரின் மறு பெயரே நித்திய கல்யாணபுரி என்றால் இன்னும் என்ன சந்தேகம்?—

கடற்கரையில் ஒரு கல்யாணபுரி!

ஆர்.சி. சாரு



'ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டி' என்பார்களே... ஐந்து...பத்து... நூறல்ல—முக்கோண கு. க. விளம்பரமெல்லாம் இல்லாத—காலம். முந்நூற்றறுபது பெண்களைப் பெற்ற அப்பாவி ஒருவர்... பெண்ணைப் பெற்ற புண்ணியவதியையும் இழந்து தவிக்கையில் அழைத்து வாழ்வித்த அருளாளன் அவர்! ஆம். ஏழை முனிவர் காலவர் கவலை தீர்க்கத் திருமாலே ஓர் இளைஞராக வந்து நாளுக்கு ஒருத்தியாக ஆண்டு முழுதும் மணந்து, முடிவில் முந்நூற்று அறுபது கன்னியரையும் ஒருருவமாக்கி இடப்புறத்தில் ஏந்தி நின்று காட்சி தருகிறார் இடவெந்தை ஈசன்! மூலவர் நிலங்கீண்ட வராக வடிவம்.

கதைத் திருமேனிதான். இடது துடையை மேலுயர்த்தி முந்நூற்றறுபது பேரின்மொத்த வடிவமான அகில வல்லியை அணைத்து ஏந்திய அழகுத் திருக்காட்சி... மடிந்த இடது முழங்காலுக்கும் இடது திருவடிக்கும் அடியில் ஆதிசேஷனும் அவன் மனைவியும்... மற்றொரு திருவடி, நிலம் தோய்ந்த திருவடி. இடக் கரத்தில் சங்கு,வலக் கரத்தில் சக்கரம். மற்றுமிரு கரங்கள் அகிலவல்லியை அணைத்திருந்தாலும், ஒன்று அழகிய அவள் திருக் கமலப் பாதத்தைப் பிடித்திருக்கும் மாட்சி ஆயிரமாயிரம் எண்ணங்களைத் தூண்டும் அற்புதக் காட்சி!

உற்சவர் நித்திய கல்யாணப் பெருமாளோ அழகுக்கு அழகு செய்பவர். எழுத்துக்கும் தூரிகைக்கும் எட்டாத எழில் வடிவம்... தாயார் கோமளவல்லி — முந்நூற்றறுபது கன்னியருள் மூத்தவள். பெருமாளுக்கிணையான பேரழகு. இருவர் தாடையிலும் இயல்பாக அமைந்துள்ள பொட்டுகளுக்கு அளிக்கும் விளக்கம் என்ன அழகான இயல்பான கற்பனை!... 'முத்தமிட்டுக் கன்னம் முத்தமிட்டுப் பின்னும் முத்தமிட்டுக் கன்றிச் சிவந்து' ஏற்பட்ட வடுவாம்!

பத்து அவதாரங்களிலுமே தனிச் சிறப்பு வாய்ந்த அவதாரம் வராக அவதாரம். ஞான மூட்டும் நல்லவதாரம்..

திருவாய்மொழி இறுதியில் அருவப் பரவெளியின் பேரொளியைப் போற்றிப் பரவும் நம்மாழ்வாருக்குக்கூட ஞானப்பிரான் நினைவு நெஞ்சை விட்டு அகலவில்லை. 'கோலமலர்ப் பாவைக்கன்பாகி... நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்' என நினைவுகூர்கிறார்! ''பெருங்கேழலார்'' என்பதும், ''ஞானப் பிரானையல்லால் இல்லை கண்டீர் நான் கண்ட நல்லதுவே'' என்றும் வராக அவதாரத்தைப் பிறவிடங்களில் வழுத்துகிறார். அவன் அருளாலே அவன்தாள் வணங்கும் பெற்றியைப் போற்றும் பெரியாழ்வாரும் ''எயிற்றிடை மண்கொண்ட எந்தை இராப்பகல் ஓதுவித்து என்னைப் பயிற்றிப் பணி செய்யக் கொண்ட'' தாகப் பாடுகிறார்.


பரகாலன் என்று போற்றப்படும் திருமங்கை மன்னனும்கூட, நாராயணா என்னும் நலம் தரும் நாமத்தைக் கண்டு கொண்டமைக்கு ''பன்றியாய் அன்று பாரகம் கீண்ட பாழியான் ஆழியான் அருளே'' காரணம் எனக் குறிப்பிடுகிறார். இவர் திருவிடவெந்தை திருத்தலத்துக்கென்றே ''திவளும் வெண் மதி'' என்று துவங்கும் பத்துப் பாசுரங்கள் பாடியுள்ளார். அவை தனியான அக இலக்கியச் சுவை நிறைந்தவை. மகள் காதலாகிக் கசிந்து கண்ணீர் விடுவதைக் காணப் பொறாத தாய் இறைவனை நோக்கித் தன் மகளை ஆட்கொள்ளக் கோருவதாக அமைந்தவை. ஆழ்வாரின் பெரிய, சிறிய திருமடல்களிலும் இத்திருப்பதி பேசப்படுகிறது.

பல அறக் கொடைகளைப் பற்றிய பழம் பெரும் கல்வெட்டுக்களும் உண்டு.

சோழப் பேரரசன் ராஜ ராஜ சோழன் பிறந்த நாளான ஆவணிச் சதயத்தை ஒட்டிய ஏழு நாள் விழாவுக்கான ஏற்பாடு பற்றிய கி.பி. 1001ம் ஆண்டு கல்வெட்டு, பங்குனி உத்திரத் திருவிழாவுக்கான கல்வெட்டு (கி.பி 1003) கி. பி. 1052ல் திருவிடந்தை கிராமத்தையே பெருமானுக்குக் காணிக்கையாக்கி விட்ட கல்வெட்டு — இப்படிப் பல கல்வெட்டுக்கள் உண்டு.

கடலுக்கும், கால்வாய்க்கும் இடையே கல்யாணப் பெருமான் மட்டுமல்ல... அரங்கனையும் நாயகியுடன் கூட பள்ளி கொள்ள வைத்துள்ளார்கள் பக்தர்கள். ஆரவாரமில்லாத அமைதியான இடம். ஆர அமர தரிசித்துப் போகலாம். ஆனந்த வாழ்வு பெறலாம்...

'நம்பினோர்
கெடுவதில்லை' —
நான்கு மறை
தீர்ப்பு.



மழலைப் பட்டாளம்!

வான வீதியில்
நிலவுப் பெண் வைத்த
கோலப் புள்ளிகள்
மின்னும்
ஒளித்தீவுகள்!
கோடுகள் இல்லாத
புள்ளிக் கோலங்கள்
சுழலும் இந்தத்
'தரைச் சக்கரத்தை'
எட்டி நின்றே
வேடிக்கை பார்க்கும்
மழலைப் பட்டாளம்!

- உலகன்





✖ ராம்ஜி



✖ வி. கோபாலகிருஷ்ணன்



✖ ஜி. பாலகிருஷ்ணதாஸ்

● புதுமை — இதைச் செயலில் காட்ட வேண்டும் என்று ரொம்ப ஆர்வம் ராம்ஜிக்கு. பாருங்களேன்! அவருடைய மெல்லிசைக் குழுவுக்குப் பெயரே 'அபஸ்வரம்'! (பெயரில் தான் அபஸ்வரம். நிகழ்ச்சிகள் இனிமையாகத் தான் இருக்கின்றன.) இவர் தம் மெல்லிசைக் குழு ஆரம்பித்து, 15, 76, 80,000 விநாடிகள் 2,62,800 நிமிடங்கள், 43,800 மணிகள் 1,825 நாட்கள், 260 வாரங்கள் — 60 மாதங்கள் — சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமானல் 5 வருடங்கள் நிறைவடைகின்றன. (அப்படித்தான் அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தார்.) இதை சங்கரதாஸ் கலை அரங்கில் ஆகஸ்ட் இரண்டாம் தேதி, கலா ரசனா சபாவின் சார்பில் கொண்டாடினர். நிகழ்ச்சிக்குத் தலைமை சிவாஜி. சென்னை நகரிலும் வெளியூர்களிலும் தம் நிகழ்ச்சிகளால் ரசிகர்களைக் கவர்ந்துள்ள ஒருசில மெல்லிசைக் குழுக்களுள் 'அபஸ்வரமும்' ஒன்று. இந்தக் குழுவின் ஸ்பெஷலாட்டி ராம்ஜியின் டிரம்ஸ். அபஸ்வரம் முதல் நிகழ்ச்சியை அளித்தபோது வந்திருந்த ரசிகர்கள் அனைவருக்கும் காதுகளில் அடைத்துக்கொள்ளப் பஞ்சு தந்தார்களாம். இந்தக் குழுவின் மக்கள் தொடர்பாளர் யார் தெரியுமா? 'நாடகப் பிரியா' நாடகக் குழுவின் எஸ். வி. சேகர். சரி! எஸ். வி. சேகரின் நாடகக் குழுவுக்கு மக்கள் தொடர்பாளர்? வேறு யாருமில்லை — ராம்ஜி தான்!

— எஸ். சந்திரமௌலி

● சுமார் மூன்றரை லட்ச ரூபாய் விலைமதிப்புடைய தபால் தலைகளைச் சேமித்து வைத்திருக்கும் திரு பாலகிருஷ்ண தாஸ், சமீபத்தில் வெள்ளி விழாக் கொண்டாடிய தென்னிந்திய தபால் தலை சேகரிப்பாளர் சங்கத்தின் செயலாளர். வீட்டில் குஜராத்தியில் பேசினாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசும் திரு பாலகிருஷ்ண தாஸ் தபால் தலை சேகரிப்பு பற்றி பள்ளி—கல்லூரிகளில் பாடம் போதிக்கும்படி அழைப்புக்கள் வந்திருப்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

● யுனைடெட் ரைட்டர்ஸ் அஸோஸியேஷனின் ஆறுவது ஆண்டு விழா மயிலை சீனிவாச சாஸ்திரி ஹாலில் நடைபெற்றபோது, முடிவில் தேசிய கீதம் இசைக்க 'டேப்' போட்டார்கள். விந்திய ஹிமாசல யமுனா கங்காவிலிருந்துதான் பாட்டே துவங்கியது! மத்திய அமைச்சர் துணுக்குற்றார்.

அதே தினம் மாலையில் ஃபிலேடலிஸ்ட்ஸ் வெள்ளி விழாவில் தமிழக அமைச்சர் துணுக்குற, தமிழ்த் தாய் வாழ்த்து டேப்பில் பாதியில் தடங்கலாகி நின்று ஒரு தர்மசங்கடமான இடைவெளிக்குப் பிறகு 'வாழ்த்துவமே!' என்று மட்டும் ஒலித்தது!

இனி தமிழ்த் தாய் வாழ்த்தும் தேசியகீதமும் சீராக ஒலிபரப்பப்பட வேண்டும்; அல்லது இவை இல்லாமல் கூட்டம் நடத்தலாம் என்று அரசு அறிவித்து விட்டால் நல்லது!



✖ துறையூர் எம். ராஜகோபால சர்மா

● சென்னை ஆபட்ஸ்பரியில் ஸ்ரீ சத்யசாய் டிரஸ்ட் ஜூலை மாதக் கடைசியில் ஏற்பாடு செய்திருந்த இலவசக் கண் சிகிச்சை முகாமுக்கு 4300 கண் நோயாளிகள் வந்திருந்தனர். 337 பேருக்கு அங்கேயே தங்க இடம் மட்டுமல்ல, உணவும் கூட அளிக்கப்பட்டது என்று தெரிவித்தார் அமைப்பாளர்களில் ஒருவரான திரு டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி. நவீன கண் சிகிச்சை முறைகளைக் கையாள்வதால், அறுவைச் சிகிச்சை முடிந்த உடனேயே நோயாளியை நடக்க வைத்திருக்கிறார்கள்!



✖ பத்தமடை கிருஷ்ணன்

சென்ற ஆண்டு கோவை சிங்காநல்லூரில் முதல் முகாம். இப்போது சென்னையில். அடுத்தது செங்கல்பட்டில். இனி ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படி முகாமிட்டு, சத்ய சாய் ஊழியர்களும் டாக்டர்களும் டாக்டர் ஜி. வெங்கடசாமியின் தலைமையில் கண் சிகிச்சை அளிப்பார்களாம்.

—படம்- நன்றி: 'எக்ஸ்பிரஸ்' கஜேந்திரன்

● தக்ஷிண பாரத சங்கீத பிரசார சபை ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 3ம் தேதி வரை ஒன்பது நாட்களும் விமரிசையாகச் சங்கீத விழாவை மயிலை சாஸ்திரி ஹாலில் கொண்டாடியது. கச்சேரி மட்டுமின்றி, பண் ஆராய்ச்சி, கருத்தரங்கு என்று சுமார் 60 மணி நேரம் செலவிட்டிருக்கிறார்கள். தமிழகம், கேரளம், ஆந்திரா, கர்நாடகத்திலிருந்து 125 இசைக் கலைஞர்கள் பங்கு

நகர் வலம்

கொண்ட இந்த விழாவை நடத்த, திருவனந்தபுரத்திலிருந்து இதற்கென்றே இங்குவந்து, தங்கி, செலவும் செய்து இசைக்குத் தொண்டாற்றிய பேராசிரியர் முத்துஸ்வாமிக்கு, இங்கே திருவனந்தபுரம் ஆர்.எஸ்.மணியும், விவேகா கல்கரல் சென்டர் குளத்து அவர்களும் தக்க துணையாக உதவியிருக்கிறார்கள்.

இந்த சீரியஸிலே ஓர் உன்னதமான கச்சேரி செய்தார் பெரும்பாவூர் ரவீந்திரநாத் என்ற இளைஞர். ஜேசுதாஸ் 'பாணி...குரல் டிட்டோ. இந்தக் கண்ணாடி அணிந்த, சந்தனக் கீற்று இளைஞரின் கச்சேரி முதல் தரம் என்பதற்குக் கூடிய கூட்டமே சான்று.

— சாருகேசி



கண் சிகிச்சை முகாம்

● ஸ்ரீ செம்மங்குடி சீனிவாசய்யர் அவர்களுடைய ஐம்பதாண்டு கால கர்நாடக இசைச் சேவையைச் சிறப்பிக்கும் விதத்தில் அவருடைய இருபத்து மூன்று சிஷ்யர்கள் சேர்ந்து 1976ல் தம் குருவின் பெயரில், 'ஸ்ரீ செம்மங்குடி சீனிவாசய்யர் பொன் விழா டிரஸ்ட்' என்று ஒரு அமைப்பைத் துவக்கினர். இவ்வமைப்பு ஒவ்வொரு ஆண்டும், ஜூலைமாதம் மூன்றுவது வாரத்தில் கர்நாடகஇசை விழா ஒன்று நடத்துவதோடில்லாமல், மூதிய கர்நாடக இசைக் கலைஞர் ஒருவரையும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து வருகிறது. இவ்வாண்டு அப்படிக்கௌரவிக்கப்பட்ட வித்வான் துறையூர் ஸ்ரீ எம். ராஜகோபால சர்மா. எழுபத்தைந்து வயதானவர். முன்பு சுதேசமித்திரனில் தியாகராஜ கிருதிகள் சுவரக் குறிப்புக்களுடன் வெளிவர உதவியவர். ஸ்ரீவள்ளி, நாம் இருவர் முதலான பல திரைப் படங்களுக்குத் தனித்தும், பாபநாசம் சிவன் போன்றவர்களுடன் இணைந்தும் இசையமைப்பாளராய்ப் பணியாற்றி இருக்கிறார். கலாக்ஷேத்ராவில் இசையாசிரியராய் இருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ள திரு சர்மா, காலையிலும், மாலையிலும் இப்போதும் பாட்டு சொல்லித் தருகிறார்.

● நாதக் கனல் — இது இந்த வருடம் ஜனவரி முதல் தேதியன்று மயிலாப்பூரில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு சபா. ஆரம்பித்தவர் மகா கவி சுப்பிரமணிய பாரதியாரின் வம்சத்தில் வந்தவரான திரு பத்தமடை கிருஷ்ணன். கர்நாடக இசைக்கு மக்களிடையே ஆதரவைப் பெருக்குவதும், மகா கவி பாரதியாருடைய பாடல்களை மக்களிடையே பரப்புவதும் 'நாதக் கனல்' சபாவின் நோக்கங்கள். பாரதி பாடல்களுக்கு, கர்நாடக இசை அமைத்து, முழு நேரக் கச்சேரியாகவே அளித்து, பாரதி அன்பர்களை மகிழ்ச்சியில் திளைக்க வைக்கப் போகிறார்கள், வரும் ஆகஸ்ட் 14 முதல் 19 வரை. இடம்: ஆழ்வார்பேட்டையில் உள்ள ஆஸ்திக சமாஜம். பல இசை விற்பன்னர்கள் பாரதி பாடல்களைப் பாட இருக்கிறார்கள். திரு கிருஷ்ணன் நல்ல ஓவியர். ஜோதிடக் கலையும் அறிவார். இவர் வீட்டில் இவரே வரைந்துள்ள பாரதியின் வண்ண உருவப் படம் கண்ணைக் கவருகிறது.

- எஸ். சந்திரமௌலி

ஐம்பது வயது எட்டிய நாடக, சினிமா நடிகர் வி. கோபாலகிருஷ்ணன் இதுவரை எட்டாயிரத்துக்கு மேல் சினிமா பார்த்திருக்கிறார். அதுமட்டுமல்ல. தாம் பார்த்த தமிழ், ஆங்கில, ஹிந்தி சினிமாக்களை வரிசையாக எழுதி நோட்டுப், புத்தகத்தில் குறித்து பைண்ட் செய்து வைத்திருக்கிறார். இது வரை எட்டு 'வால்யூம்'கள் சேர்ந்துள்ளன. 5-12-1946: ''லிக்பீல்ட் ஃபாலீஸ்'' என்ற ஆங்கிலப் படத்திலிருந்து அண்மையில் வெளியான 'தில்லு முல்லு' வரை இருக்கிறது. ஒவ்வொரு சினிமாவைப் பற்றியும் சிறு குறிப்பு, அப்பட்டமான விமரிசனம்.

யார் எந்தச் சினிமா பற்றிக் கேட்டாலும் அகர வரிசை அட்டவணையைப் பார்த்து டக்கென்று விவரம் கூறிவிடலாம்.

ஒரு சுவாரஸ்யமான விஷயத்தையும் தெரிவித்தார். ''பிரிட்டிஷ் கலைஞர்கள் நம்மை விட மூட நம்பிக்கை உள்ளவர்கள். 'மாக்பெத்' என்ற பெயரையே அவர்கள் உச்சரிக்க மாட்டார்களாம்! 'தட்ஸ் காட்டிஷ் ப்ளே!' என்றுதான் குறிப்பிடுவார்களாம்!

- வாதூலன்

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

3




அது, நூறாவது தடவையா தடாங்கலுக்கு வருங்குகிறெம்னு காமிச்சிருப்பான் அன்னிக்கு. அதான் சிரிக்கறாங்க!
ரீசியுஸ்ஸாச் சொன்னாலும் சிரிப்புத்தான் ஒங்களுக்கு. இது மாதிரி மெஷி நாம்பளும் வாங்கணுமா வாண்டாமா?
ஏன், மெஷி வாங்கிடுத்தான் சிரிப்பு வருமா நமக்கு? அது இல்லாமயே சிரிப்பாச் சிரிக்கறமே?
கிரைண்டர் மெஷி வேணும். ஃபிரிஜ் வேணும். எலக்ட்ரிக் அடுப்பு வேணும். துணி துவைக்கிற மெஷின் வேணும். மிக்ஸி வேணும்.
இவ்வளவும் வச்சுக்கிட்டா மட்டும் போதுமா? இத்தனைக்கும் ஒவ்வொரு மெக்கானிக் வேணும். இவங்களையெல்லாம் அதது ரிப்பேர் ஆச்சுன்னு கூப்பிட போன் வேணும்.
நல்லதா வாங்கிட்டா ரிப்பேர் ஏன் ஆகுது?
இத்தனையும் வச்சுக்கிட்டா நீ என்ன பண்ணுவே? ஏதாவும் ஷோ ரூம் வக்கப் போறியா வீட்டுல?
வேலைக்குப் போயி சம்பாதிக்கிற பொண்ணு மருமக வந்தா, இதெல்லாம் ஒண்ணொண்ணு வருது!
அப்படிச் சொல்லுடி ஆத்தெண்ணும்! நீ கேக்கறதுதான் கெக்கறெ, ஒழுங்கா வரதட்சிணையை கணிசமாக் கேட்டுப்புடு. சரி, இத்தனையும் வாங்கிப் போட்டா வீட்டுலே அப்புறம் கையைக் காலை நீட்ட எடம் இருக்காது போ!
அதது, அதது எடத்துல இருக்கப் போவுது. இல்ல, நீங்கதான் கையைக் காலை ஏன் நீட்டணும்?
நீ சொல்லிட்டா ஆச்சா? உன் புள்ளே யாண்டான் என்ன நெனச்சுக்கிட்டிருக்கானோ? அவன் வரட்டும். கேட்டுப்புடுவம்.
அவனை என்ன கேக்கறது? நான்தான் தீர்மானம் பண்ணிட்டேனே!
தொடரும்



வட்டமேஜை

□ கல்கியை வாங்கியதும் கனமாக இருந்ததை உணர்ந்தேன். பிறகுதான் தெரிந்தது. பக்கம் 112 என்பதுடன், இதில் சினிமா சம்பந்தமாகப் புகைப்படங்களும் 112 வெளியாகியுள்ளன என்பது. அடேயப்பா! எவ்வளவு விஷயங்கள்! இத்தனையையும் எப்படித்தான் சேகரித்தீர்களோ என்று பிரமிக்கிறேன்.

கொடுமுடி — ந. சேதுராமன்

□ 'என்னடா இது, நூற்றிப் பன்னிரண்டு பக்கங்களுக்கு இவ்வளவு வெயிட்டா!' என்று எண்ணிக் கொண்டே உள்ளே புரட்டினேன்! புரிந்தது ''வெயிட்''டின் காரணம். குண்டு கல்யாணமும். மிஸ்டர் மெட்ராஸும் சேர்ந்தால், 'வெயிட்'டுக்கென்ன குறைச்சல்!

பெருங்களத்தூர் — எல். ரவி ஷர்மா

□ வெறும் நடிகர் நடிகைகளின் படங்களையும், பேட்டிகளையும் போட்டு சினிமா சிறப்பிதழ் என்று கூறாமல், திரையுலகின் அனைத்துத் துறையினரையும், அவர்களது திறமைகளையும் வெளிக்காட்டி, ஒரு புதுமையான 'சினிமா சிறப்பிதழ்' வெளியிட்ட கல்கி நிறுவனத்தாரை உளமாறப் பாராட்டுகிறேன்.

கண்ணம் பாளையம் — பொன்ஜெயசிங்

□ சினிமாச் சிறப்பிதழில் லைட் பாய், ஸ்டண்ட் நடிகன், எக்ஸ்ட்ராக்கள் போன்றவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தைப் படித்ததும் மனம் மிகவும் வேதனைப்பட்டது. இத்தொழிலின் மேல் மட்டத்தில் இருப்பவர்கள் லட்சம் லட்சமாகச் சம்பாதிக்கும் போது, ஒவ்வொரு காட்சியிலும் உயிர் கொடுத்துப் பணியாற்றும் கீழ் மட்டத்தில் இருப்பவர்களின் வாழ்க்கைத் தரம் பேசும் திரைப் படம் தோன்றி ஐம்பது ஆண்டுகள் ஆகியும் உயராமலிருப்பது வருத்தத்துக்குரியது.

வேலூர் — வேணுகோபால்

□ அகத்தியர் காவிரியைக் கமண்டலத்தில் அடக்கி விட்டது போல் பழைமையும், புதுமையும் கலந்து ஒரு வார இதழில் சினிமா உலகத்து விஷயங்களை அடக்கிவிட்டீர்களே!

சென்னை-39 — திருமதி நாராயண ராவ்

□ பொன்னும் பித்தளையும் தலையங்கம் வைரம் பாய்ந்தது.

சென்னை-14 — வி. ஷோபனு

□ எங்கே கோவை பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டதைக் கண்டு கொள்ளாமல் இருந்து விடுவீர்களோ என்று எண்ணியிருந்தேன். ஆளும் கட்சியினரின் 'செருக்கை' கார்ட்டூன் மூலம் கட்டிக் காட்டித் தங்கள் நடுநிலையை நிலைநாட்டி விட்டீர்கள்.

கோயம்புத்தூர் — ஏ. ஜெபக்குமார்

□ சகாப்தம் முடிந்து விட்டதா இல்லையா என கட்டுரைகள் வெளியிட்ட கல்கி பெருந்தன்மையோடு சிவாஜியை அணுகி கட்டுரை கேட்டதும் அவரும் பெருந்தன்மையுடன் கட்டுரை தந்ததும் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

பரசலூர் — ஆர். நாகராஜன்

□ 'நினைவில் நின்ற காட்சி' பகுதியில் நடிகர் திலகம் நடித்த படங்கள் மெஜாரிட்டியாக இருப்பதைக் காணும்பொழுது மெய் சிலிர்க்கிறது. அதே சமயம் 'சகாப்தம்' சம்பந்தமாக அவர் என்னதான் 'கல்கி'யையும் வாசகர்களையும் குறை கூறினாலும் 'லாரி டிரைவர் ராஜாக்கண்ணு' போன்ற படங்களைப் பார்க்கும்பொழுதுவேதனையாகத்தான் இருக்கிறது. உண்மையான ரசிகர்கள் நடிகர் திலகத்தின் திறமை இவ்வாறு விழலுக்கிறைத்த நீராவதைக் கண்டிப்பாக விரும்ப மாட்டார்கள்.

விழுப்புரம் — கே. எஸ். குமார்

□ சிறப்பிதழோடு சிரிப்பிதழையும் வழங்கி விட்டீர்கள். உமாபதியின் ஜோக்ஸ் ஆன் பகுதி தவிர டணால் தங்கவேலுவின் நகைச்சுவை வேறு! படம் வரைந்த செல்லம் அவர்களுக்கும் வெற்றியில் பங்குண்டு.

தஞ்சாவூர் — பி. ஜே. ரத்தன்

□ சபாஷ் மீனாவில் கண்ணாடியை உடைப்பது சந்திரபாபு என்று அன்பர் எஸ். கண்ணன் குறிப்பிட்டுள்ளார். அது தவறு. கண்ணாடியை உடைப்பது குலதெய்வம் ராஜகோபால். போடுவது நடிகர் திலகம்.

வேலூர் — சுதா மணிமேகலை

□ 1980ம் வருட அமரர் கல்கி நினைவு சிறுகதைப் போட்டியில் பங்கேற்று சரித்திரக் கதை எழுதி ரூ. 500 பரிசு பெற்ற கிருஷ்ணகுரு, 1981 ஆம் வருட போட்டியிலும் பங்கேற்று, சிறந்த சமூகக் கதை ஒன்றை எழுதி ரூ. 1000 பரிசு பெற்றிருப்பது அவர் இலக்கியத்தின்பால் காண்பிக்கும் தீவிரத்தையும் அவரது எழுத்துலக முன்னேற்றத்தையும் உணர்த்துகிறது. வாழ்த்துக்கள்!

நாகர்கோயில் — க. ந. சுப்பிரமணியன்



AVM

பவுன் மார்க்

தேங்காய் எண்ணை

பரிசுத்தமானது! பிரசித்தமானது

சுவைமிக்க மொறு, மொறு உணவு படைக்கவும், கரு கரு கூந்தல் வளரவும் சிறந்தது AVM பவுன் மார்க் தேங்காய் எண்ணை. சுத்தமும், சுகாதாரமும் கொண்ட தயாரிப்பு.

16, 4, 1.5 கிலோ டின்களிலும், 1 கிலோ, 500 கிராம் அழகிய பிளாஸ்டிக் கேன்களிலும், கையடக்க பிளாஸ்டிக் பாட்டில்களிலும் கிடைக்கின்றன.

தயாரிப்பாளர்கள்:

AVM மாரிமுத்து நாடார் & சன்ஸ்

தூத்துக்குடி-628 001

ADWAVE/AVM/1692

அந்தி நேரத்து உதயங்கள்



வாஸந்தி

7

அவன் தூக்கி வாரிப் போட்டு அவளை நிமிர்ந்து பார்த்தான்.

அவளுடைய திகைப்பு அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. கூடவே இப்படி ஒரு கேள்வியை முன் பின் தெரியாத ஒரு பெண்ணிடம் எப்படிக் கேட்டோம் என்று கூச்சமேற்பட்டது.

தன் கூச்சத்தை மறைக்கப் பார்க்கிறமாதிரி அவன் சற்று மிகையாகச் சிரித்தான்.

''பார்த்தீங்களா? எத்தனை பயந்துட்டீங்க! ஒரு விளையாட்டுப் பேச்சுக்கு நீங்க பயந்தீங்கன்னு மாயா நிஜத்தைக் கண்டு எத்தனை பயப்படணும்?''

திகைப்பில் உயர்ந்திருந்த புருவங்கள் கீழே இறங்கினாலும் அவள் முகத்தில் யோசனைக் கோடுகள் தெரிந்தன. அவள் மெல்லிய குரலில் கேட்டாள்:

''என்ன நடந்தது ஹரி? மாயா என்ன சொன்னாங்க?''

அவன் சொன்னான். மாயாவின் குரல் மாதிரி தனதைச் சன்னமாக்கி—

''உன்னைப் பார்த்தா பாவமா இருக்கு ஹரி. விஷ் யூ ஆல் தி பெஸ்ட்.''

சாந்தி சிரித்தாள்.

''அவங்க சொன்னதிலே ஏதும் தப்பிருக்கிறதா எனக்குத் தெரியல்லியே?''

அவனுக்குச் சுரீரென்று ஆத்திரம் வந்தது. இவளும் இவளது சிரிப்பும்!

''சொன்னதிலே ஏதும் தப்பில்லே. என் முகத்தையே பார்க்காம ஸ்கிரீனுக்கு அந்தண்டை நிற்கிற யாரோ ஆளைப் பார்த்துண்டு மூணாம் மனுஷி மாதிரி சொன்னது தப்பு. சொன்ன கையோட டாட்டா சொல்லிட்டுப் போனது தப்பு.... அவ வர வரைக்கும் அவளை எப்பப் பார்க்கப் போறோம்னு ஆத்திரப்பட்டுட்டிருந்தேன். பாவம் ரொம்பக் கலங்கிப் போவா. எனக்காகத் துடிக்கப் போவா. அவளை எப்படிச் சமாதானப் படுத்தறதுன்னு யோசனை செய்துண்டிருந்தேன்.''

''அவங்க மனசிலே கலக்கம் இல்லாம இல்லே ஹரி.''

''கலக்கம் எதுக்கு? தன்னுடைய எதிர் காலத்தைப் பத்தித்தான் கலக்கம். நினைச்சதெல்லாம் நடக்காமப் போயிடுமேன்னு கலக்கம். எனக்கு இப்படி ஆயிடுத்தேன்னு இல்லே. 'எப்படிப் பட்டது. எங்கே பட்டது, வலி எப்படி இருக்கு. நா உன் பக்கத்திலேயே இருக்கேன். கவலைப்படாதே'ன்னு ஒரு வார்த்தை இல்லே. அதிகம் பரிச்சயம் இல்லாதவா வீட்டுக்குத் துக்கம் விசாரிக்கப் போனா பேந்தப் பேந்த முழிப்போமே அந்த மாதிரிநிற்கிறா.''

மற்ற நோயாளிகளைக் கவனிக்கச் சாந்தி போக வேண்டும் என்று அவனுக்கு உறைத்தாலும், அவன் ஏதோ ஒரு உள்ளுணர்வின் பிடிவாதத்தில் அவளுடன் பேச்சுக் கொடுத்தான். சொல்லத் தெரியாத துக்கத்தில் தொண்டை வறண்டு போயிற்று. எதற்காக அதிகம் பரிச்சயமில்லாத இவளிடம் போய் நமது அந்தரங்கமான வேட்கைகளை வெளிக்கொணர்கிறோம் என்கிற உறுத்தலையும் மீறிக் கொண்டு அவன் வெடித்தான்.

''எனக்கு நினைவு வந்ததும் முதல்லே நினைவுக்கு வந்ததே அவ பேருதான். அத்தனை நெருக்கம் அவகிட்டே எனக்கு. அவளுடைய அப்பா என்னைப் பார்க்கும்போதெல்லாம் மாப்பிள்ளைம்பார். இப்ப என்னைப் பார்க்கவே பயந்துண்டு ஸ்கிரீனுக்கு அந்தண்டை இருந்து கொண்டு பெண்ணுக்கு ஸிக்னல் கொடுக்கிறார்.''

அவன் சட்டென்று பெரிதாகச் சிரித்தான்.

''இதிலே இருக்கிற அசம்பாவிதம் என்ன தெரியுமோ? இந்த நிமிஷத்தைப் பத்திதான் எனக்குக் கவலை. அவருக்கும் அவர் பெண்ணுக்கும் எப்பவோ வரப் போகிற நிமிஷத்துக்காக பயம், கவலை... முதுகை இரண்டாகப் பிளந்துண்டு படுத்திருக்கிறவனுக்கு எந்த மாதிரி எதிர்பார்ப்புகள் இருக்க முடியும்? இதை ஏன் அவங்க புரிஞ்சுக்கல்லே? பிரியம் இருக்கிற மாதிரி, கரிசனம் இருக்கிற மாதிரி கொஞ்ச நாளைக்கு நடிக்கவாவது கூடாதா?''


அவளுடைய கை மிருதுவாக அவன் தோளைத் தொட்டது.

''உங்களை நிதானப்படுத்திக்குங்க ஹரி.''

அவன் சட்டென்று சுய நினைவுக்கு வந்தான். அவனுடைய குரல் சராசரிக்குமேல் எழும்பி மற்றவர்கள் பார்வையையும் கவனத்தையும் ஈர்த்திருந்தது. மெல்லிய குரலில் ''ஸாரி'' என்றான்.

''எனக்கு என்ன ஆச்சன்னு புரியல்லே.''

''எனக்குப் புரியறது'' என்று அவள் மறுபடி புன்னகைத்தாள். ''இந்த மாதிரி ஆக்ஸிடெண்ட் ஆனவங்க



எல்லாம் கத்தற கத்தல்தான் இது.''

''எல்லாருக்கும் என் மாதிரி நிலைமை இருக்காது.''

''மத்தவங்களுக்கு வேறே மாதிரி நிலைமை இருக்கலாம். மொத்தத்திலே எல்லோருக்கும் ஒரு மன அதிர்ச்சி ஏற்படும். 'ட்ருமா'ன்னு கேள்விப்பட்டதில்லே?''

''ட்ருமா தெரியாது. ட்ராமாதான் கண்ணுக்குத் தெரியறது.''

சட்டென்று சாந்தி விறைத்துக் கொண்டு நின்றதை அவன் கவனித்தான். பலவித பூட்ஸ் ஒலிகள் கேட்டன. டாக்டர்கள், மருத்துவ மாணவர்களாய் ஒரு சின்னக் கூட்டம். ஒவ்வொரு படுக்கைக்குப் பக்கத்திலும் சில நிமிஷங்கள் நின்றன.

சாந்தி அவனுடைய படுக்கையை மறுபடி அவசரத்துடன் சீர்செய்தாள். காத்தீடர் சரியாக இருக்கிறதா என்று ஆராய்ந்தாள்.

''இந்த டிபார்ட்மெண்டின் தலைமை டாக்டர் வர்மா'' என்றாள் மென்ன.

டாக்டர் வர்மா அமர்க்களமான உற்சாகத்துடன் கைத்தடியை ஊன்றியபடி அவனைப் பார்த்து, ''ஹல்லோ யங் மேன்'' என்றார். ''வாழ்க்கை எப்படி இருக்கிறது?'' என்றார் ஹிந்தியில்.

அவன் லேசாகச் சிரித்தான்.

''வாழ்வு என்பது இடுப்புக்குக் கீழ்தான் என்று இப்பொழுது புரிகிறது.''

அவனை வழக்கமாகப் பார்க்கும் டாக்டர் சங்கடத்துடன் பெரியவரிடம் அடிக் குரலில் சொன்னார்:

''கம்ப்ளீட் லோ பாரப்ளீஜியா. ஃப்ராக்சர் ஆஃப் தி நைந்த் தொராஸிக் வர்டிப்ரா—ஃபர்ஸ்ட் அண்டு செகண்ட் லம்பார் ஸெக்மெண்ட்ஸ் டாமேஜ்ட்.''

வர்மா கண்ணை மூடிக் கொண்டு கைத்தடியின் மேல் இரண்டு கைகளையும் கவிழ்த்தபடி தலையாட்டிக் கொண்டிருந்தார்.

தொடர்ந்து சில விநாடிகள் வார்த்தைப் பரிமாறல்கள் நடந்தன.

வர்மா சட்டென்று கனவிலிருந்து விழித்துக்கொண்டவர் போல் விழித்துக் கொண்டு அவனைத் தீர்க்கமாகப் பார்த்த பிறகு அகிதமாய்ப் புன்னகை உதிர்த்தார்.

''பழைய செருப்பை ரிப்பேர் பண்ணி... புதுசு மாதிரியே ஆக்கித் தரலாம் என்கிறியே - அது எப்படியப்பா சாத்தியம்?''

''காலைக்கடிச்சால் பணம் கொடு சார். இல்லாட்டிப் போனா வேண்டாம்! அப்புறம் என்ன...?''

- பெ. கலாசாமி



''கொஞ்சம் கூட அசையாமல் படுத்திருக்க வேண்டும் என்ன?''

அலறை அறையலாம் போல் எழுந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அவன் கேட்டான்:

''எத்தனை நாளைக்கு?''

''ஓ, இன்னும் சில நாட்களுக்கு.''

''அப்புறம்?''

''அப்புறம் சரியாகி விடுவீர்கள். அந்தக் கவலை எங்களுக்கு. உங்களுக்கில்லை. இந்த டிபார்ட்மெண்டுக்கு வந்தப்புறம் கையையும் காலையும் புதுசா ஒட்ட வெச்சாவது அனுப்புவோமே தவிர ஸ்ட்ரெச்சர்லே வீட்டுக்கு அனுப்ப மாட்டோம்.''

அடுத்த விநாடி அவர் இங்கு இல்லை. மற்ற படுக்கைகளுக்கு விசிறிகள் புடைசூழச் சென்று கொண்டிருந்தார்.

திடீரென்று அவனுக்கு அங்கு படுத்திருந்த எல்லாரையும் நினைத்து தன்னையும் நினைத்துப் பரிதாபமாக இருந்தது. இங்கு படுத்திருப்பவர்களின் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் மிகப் பைத்தியக்காரத்தனமானவை என்று தோன்றிற்று.

அவன் ஆயாசத்துடன் கண்களை மூடிக் கொண்டான்.

இன்னும் எத்தனை நாட்கள்? அல்லது எத்தனை மாதங்கள்?

மாதங்கள்—

இப்படியே கட்டிலோடு கட்டிலாய்ப் படுத்திருப்பது சாத்தியமா? நேரத்தைத் தோளில் சுமந்து கொண்டு ஓடினவனுக்குச் சாத்தியமா?

வேறு வழியில்லை. மாயாவைப் பார்க்க ஓடவேண்டிய அவசியமும் கூட இல்லை இப்பொழுது.

மறுபடி தொண்டையில் பந்தாக ஏதோ ஒன்று வந்து உட்கார்ந்தது. கண்களில் ததும்பாத நீர் முள்ளாக விளிம்பில் குத்திற்று. அவனுடைய கைக்கருகில் வைக்கப்பட்டிருந்த அழைப்பு மணியை அவன் அழுத்தினான். சிறிது நேரத்தில் சாந்தி வந்து நின்றாள்.

''என்ன வேணும்?''

நீர் வேண்டும் என்று அவன் செய்கை காட்டினான்.

அவள் நீரைக் கொடுத்தபடி மென்மையாகக் கேட்டாள்.

''ஏன் என்னவோ மாதிரி இருக்கீங்க?''

''ஒன்னுமில்லையே. என்னுடைய நிலைமையிலே நா எதுக்கு என்னவோ மாதிரி இருக்கணும்?''

அவள் அவனை யோசனையுடன் பார்த்துவிட்டு முறுவலித்தாள்.

''டாக்டர் வர்மா சொன்னதைக் கேட்டீங்க இல்லே?''

''ப்ளீஸ், எனக்கு எந்தவித சமாதானமும் வேண்டாம். வாயாலே பேசறது ரொம்ப சுலபம்.''

''பொறுப்பில்லாத பேச்சை யாரும் இங்கே பேச மாட்டாங்க ஹரி. டாக்டர் வர்மாவுக்குச் சொந்த அனுபவமும் உண்டு. அவருக்கு ஒரு கால் இல்லே!''

அவன் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான். ''பார்த்தால் நன்றாயிருக்காரே?''

குழந்தைக்கு மிகவும் சிறந்தது தாய்ப்பால்.

நீங்கள் புட்டிப்பால் கொடுக்கும் அவசியம் நேரும்போது கவனமாய் இருங்கள்.

கீழ்க்காணும் 5 முக்கியமான குறிப்புகளைப் பின்பற்றுங்கள்...

1. தொற்று கிருமிகளைத் தவிர்த்திடும் வகையில் பீடிங் பாட்டில், நிப்பிள், மற்றய பாத்திரங்கள் ஆகியவற்றை நன்கு சுத்தம் செய்து நீரிலிட்டுக் கொதிக்கச் செய்யவும். இல்லையெனில் பாலில் எளிதில் கிருமிகள் தோன்றிவிடும்.

2. நீரை பத்து நிமிடம் தொதிக்க வைத்து, உடல் வெப்பத்தைவிட சிறிது அதிகமாகவே ஆற வைத்த பின் பால் பவுடரைக் கலக்கவும்.

3. அதிக நீரை கலந்திடாதீர்கள், அதனால் சத்து குறைந்து விடலாம். டின்னின் மேல் கொடுத்துள்ள பால் புகட்டும் அட்டவணையைப் பின்பற்றவும்.

4. ஒவ்வொரு முறையும் குழந்தைக்குப் புதிதாக பாலைத் தயாரிக்கவும். மீந்துவிட்ட பாலை குழந்தைக்கு கொடுக்காதீர்கள், அதில் கிருமிகள் தோன்றி கெட்டுவிடுகிறது.

5. டின்னின் மேல் கொடுத்துள்ள எல்லா விதிமுறைகளையும் பின்பற்றவும். ஏதாவது சந்தேகம் இருப்பின் டாக்டரிடம் ஆலோசனை கேட்கவும்.

வாங்குவீர் க்ளாக்ஸோ சன்ஷைன்—நம்பகமான குழந்தைப் பாலுணவு

க்ளாக்ஸோ சன்ஷைன் சரிவிகித ரீதியில் சரியான அளவு புரதம், கொழுப்பு, கார்போஹைட்ரேட், வைட்டமின்கள், தாதுப்பொருட்கள், இரும்புச்சத்து போன்றவற்றைக் கொண்டது. இது சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டு, டின்னில் அடைக்கப் படுகிறது. குறிப்பாக குழந்தைகளின் இளம் ஜீரண சக்திக்கு ஏற்றது.



க்ளாக்ஸோ

—தாய்மார்களின் நம்பிக்கைக்குறியது.

குழந்தைக்கு மிகவும் சிறந்தது தாய்ப்பால்

CASGLS-1-203 TAM

"ஆமாம். ஆறு ஒரு கால் மரக்கால். முழங்காலுக்குக் கீழே."

"ஏன்?"

"முட்டி எலும்பில் கான்ஸர் வந்துடுத்து. காலை வெட்டாவிட்டால் உயிருக்கே ஆபத்து என்கிற நிலையிலே வெட்டிட்டாங்க. இப்பப் பாருங்க, முன்னை விட உற்சாகமா வேலை செய்யறா."

"ஐ ஆம் நாட் இம்ப்ரெஸ்ட்" என்று அவன் கண்களை மூடிக் கொண்டான்.

"எனக்கு ரெண்டு காலும் இல்லே. இடுப்பிலேர்ந்தே இல்லே."

"ஐயோ கடவுளே!" என்றான் அவன்.

"கண் தெரியுது. காது கேக்கறது. வாய் பேசறது. கையை அசைக்க முடியறது. எல்லாத்துக்கும் மேலே மூளை வேலை செய்யுது இல்லே? இத்தனை உறுப்புக்களையும் வெச்சுண்டு முகத்தைத் தொங்கப் போட்டுக்கறீங்களே? இதெல்லாம் கூட இல்லாதவங்க இருக்காங்க தெரியுமா?"

அவனுள் சுறுசுறுவென்று கோபம் ஏறிற்று. அவன் திடீரென்று கத்தினான்.

"ஐ டோன்ட் கேர். எனக்கு என் கவலைதான் முக்கியம். மத்தவங்களைப் பத்தி நா எதுக்குக் கவலைப்படணும்?"

மறுபடியும் பார்வைகள் அவன் மேல் பதிந்தன. ஸ்டாஃப் ரூமிலிருந்து சில தலைகள் எட்டிப் பார்த்தன.

அவன் குரலையும் பார்வையையும் இறக்கிக் கொண்டான். "தண்ணி வேணும்."

அவள் பதில் பேசாமல் நீருடன் ஒரு மாத்திரையையும் கொடுத்தாள்.

நெற்றியை லேசாகத் தட்டியபடி, "கொஞ்ச நேரம் எதைப் பற்றியும் யோசனை பண்ணாமல் தூங்குங்க ஹரி" என்று விட்டுச் சென்றாள்.

அவன் மறுபடி கண் விழித்தபோது அந்த நீள அறையின் ஜன்னல் வழியே வெய்யில் இறங்கியிருந்தது. சட்டென்று அவன் கவனம் திரும்பியது. கட்டிலருகில் மோகன் அகர்வால் நின்றிருந்தான். ஹரியின் பார்வையைச் சந்தித்தும் லேசாக ஒரு சங்கடத்துடன் சிரித்தான்.

"ஹாய்!"

"ஹாய்!"

"எப்படி இருக்கே?"

"வெரி ஃபைன். இப்பத்தான் என் ஞாபகம் வந்ததா?"

"மூணு நாளா வரேன். முதல் நாள் உனக்கு பிரக்ஞை இல்லே. இரண்டு நாளா நான் வரும்போது தூங்கிண்டிருக்கே. இன்னிக்கும் தூங்கிண்டிருந்தே."

"இந்த நர்ஸோட காரியம். என்னைப் பார்த்துக்கறது அலுத்துப் போச்சுன்னு தூக்க மாத்திரையைக் கொடுத்துட்டுப்போயிடறா!"

"ஓய்வு உனக்கு ரொம்ப அவசியம் ஹரி."

"பரிகாசம் பண்ணாதே. இப்ப ஓய்வைத் தவிர வேறு என்ன இருக்கு எனக்கு?"

அகர்வாலின் கண்களில் உண்மையில் பச்சாதாபம் தெரிந்தது.

"அந்தப் பாழாப்போன மீட்டிங்குக்கு இருக்காம என்னோட வந்திருந்தேன்னா உனக்கு இப்படி ஆகியிருக்காது..."

ஹரி பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டவன் போல் சிரித்தான்.

"மீட்டிங் மேலே என்ன தப்பு? அந்த நாடகத்தைப் பார்க்க ஓடினேன் பாரு அதிலேதான் வந்தது தப்பு. நா எத்தனை பெரிய முட்டாள்னு இப்பத்தான் புரியறது. அகர்வால் யு நோ ஸம்திங்? எனக்கு ஆக்ஸிடெண்ட் ஆற சமயத்திலே நா யாரைப் பத்தி நினைச்சேன் தெரியுமா? உங்கக்காவைப் பத்தி. அவ பண்ற கர்வாசௌத்தைப் பத்தி...."

"தட்ஸ் ஃபன்னி! இனிமேல் அக்கா கர்வா சௌத் பண்ண மாட்டாள்!"

"ஏன்?"

"உனக்கு ஆக்ஸிடெண்ட் ஆன கிட்டத்தட்ட அதே நேரத்திலே அவளுடைய புருஷன் போயிட்டான். வேறே ஒரு ஆக்ஸிடெண்ட்லே!"

ஹரி அதிர்ந்து போய், அவனைப் பார்த்தான்.

"என்னது? நம்ம எம். டி.யா?"

"ஓ ஸாரி. உங்கிட்டச் சொல்லக்கூடாதுன்னு நினைச்சேன். உளறிட்டேன். ஹரி, அவன் போனதாலே யாருக்கும் நஷ்டமில்லே."

அவனால் ஏதும் பதில் சொல்ல முடியவில்லை. அதிர்ச்சியிலிருந்து மீள்வது கஷ்டமாக இருந்தது.

"அவனுடைய சாவைப் பத்தித் தெரிஞ்சபோது அத்தனை அக்கிரமம் செஞ்சவனுக்கு வேற மாதிரி சாவு ஏற்பட முடியாதுன்னு காரணம் சொல்லிண்டேன். ஆனா நீ என்ன காரணத்துக்காக இந்த மாதிரி மாட்டிண்டே? ஒரு பாவமும் அறியாத அப்பாவி — எனக்குச் சத்தியமாப் புரியல்லே!"

"மாட்டிக்கல்லேன்னு எனக்கு இப்பக் கிடைச்சிருக்கிற ஞானோதயம் கிடைச்சிருக்காது."

அவன் அதரங்களில் புன்னகை நெளிந்தாலும் கண்களில் நீர் நிறைந்தது.

(தொடரும்)

வீட்டில் அனைவரின்
கேசப் பராமரிப்புதானே?
அதற்கு நம்பகமானது,
விசேட ஃபேமிலி ஷாம்பூ
பாமோலிவ்.



பாமோலிவ் ஷாம்பூ:
ரெகுலர். அல்லது
கூடுதலான
போஷாக்கிற்கு எக்.



பாமோலிவ். எல்லா வகைக் கேசத்திற்கும் ஏற்ப விசேட முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அது. வளமையான நவீன ஷாம்பூ. உங்கள் கேசத்தை நன்கு தூய்மை துலங்க வைக்கிறது. குழந்தைகளின் மென்மையான கேசத்திற்கோ மிகவும் ஏற்றது.

அது மட்டுமா? இவ்வகை ஷாம்பூக்களிலே சிக்கனமானது. பாமோலிவ் ஷாம்பூ—குடும்ப பட்ஜெட்டிற்கும் ஏற்றது.

குடும்பத்தினர் கேசப் பராமரிப்புக்கு
சிக்கனமானது- உங்கள் பட்ஜெட்டிற்கும் ஏற்றது

GKBE PS.7 TM

என்று மாறும் இந்த சோகம்?

இப்பொழுதெல்லாம் நம்பிக்கைகளின் தேய்பிறைக் காலம். கடவுள் விஷயத்தில் மட்டுமல்ல. எல்லா விஷயங்களிலும்தான். வேலுமணியும், ராமமூர்த்தியும் சீரியஸாக ஜெபித்துக் கொண்டிருக்க ப்ரேம் வெறுமனே வெறித்திருந்தான்.

கும்பலாய் வந்த சில தாவணிகள் 'கனுக்' பிராண்ட் சிரிப்பு அரட்டைகளை வாசலிலேயே விட்டு விட்டு... சிரத்தையாய் 'வேண்டுதல்கள். காலேஜ் படிக்கையில் 'சைட்' அடித்த ராதாவுக்காக பக்தியாய் வேண்டியதிலிருந்து பயமுறுத்தும் பரீட்சை வரை விண்ணப்பித்து... வேண்டி....

ஆனால் இப்பொழுது?

'வேலை கிடைக்க அருள்புரி அந்தோணியாரே' என்று நாப்பதாவது தடவையாகவா?

கோவிலைவிட்டு வெளி வந்து — மேடு ஏறி. நிதானமாய்ச் சுற்றிக்கொண்டு போய்... காலேஜ். இன்றும் பளீரிட்ட வெயிலில் அதே கம்பீரம். மனம் சிலிர்த்து அடங்கிற்று.

நான்கு வருஷங்கள் இளவரசனாய் நிஜ வெளி உலகத்தைக் கசப்புக்களை மறந்திருந்த இடம். அந்த வசந்தகால நினைவுகள் எழ... மனத்தில் பாரமாய் ஏதோ அழுந்திற்று. சற்று அழுதால் தேவலாம் போல உணர்வு. கண்ணீர்த் திரையினூடே கட்டிடங்கள்.



அந்தச் சொர்க்கத்துக்குப் பிறகு இதோ நரகத்தின் பரிமாணங்களை உணர வைக்கும் பொழுதுகள் தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்றன. சகல சர்வ இடங்களிலும் அலட்சிய அசுரன் ஆர்வமாய் அணைக்கும் பொழுதுகள்.

சிரிப்பும், கும்மாளமுமான இப்போதைய மாணவர்கள் ப்ரேம் அண்ட் கோவை அலட்சியமாய்ப் பார்த்தார்கள்.

"இங்கிலீஷ் டிபார்ட்மெண்ட்தான் வசதி. அங்கே போவோம்." என்றான் வேலுமணி.

அட்டெண்டேஷன் முடிந்தாயிற்று தான். ஆனால் எத்தனை சலிப்பு வார்த்தைகள்! அலட்டல்கள்! ஒரு காலத்தில் இதே டிபார்ட்மெண்ட் ஆட்களை எப்படியெல்லாம் கிண்டல் செய்து.... அதற்கெல்லாம் இதுதான் தண்டனையோ...? ப்ரேமுக்கு ஆத்திரம் பொங்கியது.

யாருமில்லாத கிளாஸுக்குள் போய், சாக்பீஸ் எடுத்து போர்டில் ஆத்திரமாய் எழுதி, அவசரமாய் வெளியே வந்தான். மனத்தில் குரூர திருப்தி. ராமமூர்த்தி கேட்க, சொன்னான். அவர்கள் திருப்தியாய்ப் புன்னகைத்தார்கள்.

நடக்க... நடக்க, ஏகப்பட்ட ப்ளாஷ் பேக்குகளின் இனிமையான தாக்குதல்கள். பயத்தைப் பறக்க விட்டு மாணவிகள் அரட்டை. கிண்டலுடன் மாணவர்கள் புகை மண்டலச் சிரிப்புடன் குதூகலமாய்... அனைத்தையுமே ப்ரேம் அண்ட் கோ பொறுமையாய் வெறித்தார்கள்.

காலேஜை விட்டு இறங்குகையில் மறுபடி கண்ணீர்த் திரை. இனிமையான சொர்க்கம் இன்னும் நிஜமாய், நிதர்சனமாய் இங்கிருக்க... தாங்கள் மட்டும் காலத்தின் வெறித்தனமான கட்டாயத்தால் வெளித்தள்ளப்பட்டதைப் போல ஏக்க உணர்வுகள் மனத்தில் தகித்தன.

"என் பிரேம் நாலு வருஷமாச்சே பி.ஏ. முடிச்சு. நமக்கெல்லாம் வேலை கிடைக்காமப் போயிடுமோ?" என்றான் வேலுமணி பயமாக.

அந்தக் கேள்வியின் பின் தொடர்ந்த பய கசக்கும் நிஜங்கள் வீர்யமாய் அவர்களைத் தாக்க... மௌனித்தார்கள்.

'இளைஞர்களே கவனியுங்கள்.

'யுனிவர்ஸிட்டி என்கிற எந்திரப் பட்டதாரிகளை உற்பத்தி பண்ணிக் கொண்டிருக்க இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளாமல் போகும் நிலைக்குக் காரணம் என்ன? வேலையில்லாத் திண்டாட்டம் என்கிறதான பிரச்னை உருவானதல்ல. உருவாக்கப்பட்டது. சிலரின் சுயநலத்திற்காய்.

'சிந்தியுங்கள். ஒன்றுபடுங்கள். கண்டிப்பாக நீங்கள் ஒன்றுசேர்ந்து செயல்பட்டாக வேண்டும் இதற்கு!'

நேற்று போன கூட்டத்தின் நாற்பது வயது தலைவர் சோடா குடித்து, முஷ்டி மடக்கி ஆவேசமானார் மீண்டும் பிரேமின் மனத்துள்.

மனம் கசந்து போயிற்று.

'எதைச் செய்வது? எதையுமே செய்ய முடியாத இயலாமையில் இருக்கையில் என்ன செய்வது?' சலித்துப் போய், பின் ஜெயமாலினி வரை ஏதோதோ பேசிப் பிரிந்தார்கள்.

ரயில்வே ஸ்டேஷன்.

பிரேம் தன் மாமூல் ஸீட்டில் சாய்ந்தபடி வெறித்திருந்தான்.

'முழுசாய் நாலு வருஷங்கள். பி.ஏ. முடித்து எம்ப்ளாய்மெண்டில் பதிவு பண்ணி. பி. ஏ. படிப்பு இத்தனை மதிப்பிழந்து விட்டதா? நான் காலேஜ் படி ஏறிய பின் மீசை முளைத்தவன்களும், தாவணி போட்டவள்களும், இன்று எனக்குச் சரிசமமாய் பி. ஏ. முடித்து 'வாண்டட்' காலத்தைப் பார்த்துச் சம போட்டிக்கு வந்து... ச்சே!'

விசித்திரச் சிரிப்புடன் கம்பார்ட்மெண்டில் ஏறினான்.

"சார் ரிஜிஸ்டர் பண்ணி நாலு வருஷமாச்சு. ஒரு இண்டர்வியூ கூட வரலை. ஏதாவது பண்ணணும் ஸார் நீங்க.''

சொட்டைத் தலை நிமிர்ந்து எரிச்சலாய் வார்த்தைகளைக் கொட்டியது.

''அதுக்கு நாங்க என்னப்பா பண்றது? ஆமா. எஸ். டி. இல்ல எஸ். ஸி. இப்படி உண்டா?''

''இல்லை சார். எப். ஸி.தான். பேருக்கு ஃபார்வர்ட் கிளாஸ். லைஃப் மிடில் கிளாஸ். இப்படியே இருந்துச்சுன்னு இனி லோ கிளாஸ் ஆயிடுவோம்னு பயமா இருக்கு.''

''நல்லாப் பேசறியே. கதை எழுதிப் போடறது. இப்பத்தான் ஆயிரத்தெட்டுப் பத்திரிகை வருதே'' — கிண்டலுடன் களக், களக் சிரிப்பு.

எழுந்த எரிச்சலைச் சிரமமாய் அடக்கினான்.

''சார் எப்படியா....வது....''

''அதான் முடியாதுன்னுட்டேனே. தமிழ்லதானே சொன்னேன்.''

''அப்ப சுந்தரத்துக்கு இண்டர்வியூ தந்தது எப்படி? லஞ்சமா?''

அவர் முகம் வெளிற: ''கெட் அவுட்.''

சட்டென்று பாய்ந்துகழுத்தைப்பற்ற அவர் அலற. இரண்டு மூன்றுபேர் உள்ளே வந்தனர்.



''எந்த மனுஷனாவது தலையிட்டீங்கன்னு இவன் தீர்ந்தான். ஏண்டா லஞ்சம் வாங்கிப் போன வருஷம் பாஸ் பண்ணினவனுக்குக் குடுத் திருக்கே. எங்க மாதிரி ஆளுங்க கிட்ட 'லா' பேசிறீங்களாடா...''

உலுக்கினான் பிரேம்.

''ஏய்... என்னை விட்டுடு... ப்ளீஸ்.'' என்று ஈனமான குரலில் அவன் கெஞ்ச... பிரேம் சிரித்தான். வாய் விட்டுச் சிரித்தான். திடுமென பளீரென்று அடி விழ...

''ஏய் என்ன ஆச்சு? எதுக்கு என்னைப் பிடிச்சு இப்படிக் குலுக்கறே'' என்று ஒருத்தன் வீறிட...

கற்பனைகளிலிருந்து விடுபட்டு... சட்டென நிஜத்துக்கு வந்தான்.

''ஸாரி...ஸாரி... ஏதோ ஞாபகம்.''

லவ்டேல். இறங்கினான் பிரேம்.

ரயிலுள் நடந்தது.... போன வாரம் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் நடந்த கசப்பின் பிரதிபலிப்போ? மனத்தில் இப்படி எதிர் பாராமல் வெளிப்பட்டு?... ஒரு வேலை நிலைமைகள் இப்படியே தொடர்ந்தால் இன்றைய கற்பனையின் நிகழ்ச்சி நிஜமாகலாம். கற்பனையோ கனவோ ஆனால் மனத்துக்கு வெகு ஆறுதலாக உணர்ந்தான் பிரேம்.

வீடு. வழக்கமான இடத்தில் சாய்ந்து சோர்வாய், சோகமாய் ஜன்னலில் அஸ்தமன வானத்தை வெறிக்கையில் அவன் அம்மா வந்து காப்பியை நீட்டினாள்.

''ஏய் பிரேம். இந்தா காப்பி. கொஞ்சம் தெம்பா இரேன்.''

''இவன் இந்த மாதிரி மூஞ்சியை வச்சுட்டு இருந்தா எவன் லட்சுமி வேலை குடுப்பான்? ஏண்டா ஷேவ் பண்ணித் தொலையறதுக் கென்ன?''

அப்பாவின் வழக்கமான கோபாவேசக் குமுறல்கள் ஆரம்பமாயின.

மனத்தை அடக்கிக் கொண்டு அனைத்தையும் அலட்சியப்படுத்தினான்... படுத்திக் கொண்டிருந்தான.

''பல்லெல்லாம் சொத்தையா இருக்குமே ஒரு அத்தை ..''

''ஆமா...''

''அவள் சொத்தையெல்லாம் உன் பேருக்கு எழுதி வச்சுட்டா ளாம்!'' – பெ. கலாசாமி



வெறுமை. மனசெங்கும் வெறுமை. தினசரி தொடர்கதையாகின்ற விரக்தி. பழகிப் போன, சலித்துப்போன சலிப்பு.

திடுமென 'சில்'லென்ற ஸ்பரிசம். பார்வையைத் திருப்ப... அவன் தங்கை ப்ரியா வாஞ்சையான, பாசப் புன்னகையுடன்.

''ஏண்ணா ஒருமாதிரி இருக்கே? சீக்கிரமா வேலை கெடைச்சிடும் பாரேன். இன்னிக்கு வேளாங்கண்ணிக்கு வேண்டிக்கிட்டேன்.''

கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அவள் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான். அந்த இளம் பிஞ்சுக் கைகளின் ஸ்பரிசம் அவனுக்குச் சொல்ல முடியாத அளவுக்கு ஆறுதலைத் தந்தது.

''அண்ணா... நசீர் அண்ணா வரேன்னுச்சு ராத்திரிக்கு.''

நசீர். மனசு முழுக்க அன்பை நிரப்பிக் கொண்டு பிரேமுக்கு வேலை இன்னும் கிடைக் காததற்காய்க் கவலைப்படும் ஜென்மம். சிநேகிதத்தின் மகத்துவத்துக்கு –உதாரணமாய் இருக்கும் ஆத்மா.

நசீர் வந்தான் சொன்னபடி.

''பிரேம், இந்தத் தடவை உனக்கு வேலை நிச்சயம். ஏன்னா இந்தக் கம்பெனியில் எங்க மாமாவோட....'' என்று நசீர் உற்சாகமாய் அடுக்கிக் கொண்டிருந்ததை, பிரேமைத் தவிர வீட்டில் மற்றவர்கள் எல்லோருமே மகா நம்பிக்கையுடன், ஆர்வமாய்க் கவனித்துக் கொண்டிருந்தார்கள். பிரேம், நசீர் இப்படிச் சொல்வது எத்தனாவது தடவை என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

''ஏய் பிரேம்? என்ன சொல்றே?''

''ம்?'' — நிமிர்ந்தான் பிரேம். சற்று முன் கோபமாய் உறுமிய அப்பா, வெகு சாந்தமாய் வேலை கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகளைப் பற்றி நசீரிடம் கேட்க ஆரம்பித்தார்.

அம்மா நம்பிக்கைகளுடன், அவர்களைக் கவனித்திருக்க...

ப்ரியா, 'நான்அப்பவே சொன்னேனே!' என்பதைப் போல் புன்னகைத்தாள்.

அவனைத் தவிர மற்ற அனைவருக்குமே நம்பிக்கைகள்... நம்பிக்கைகள். வலுக் கட்டாயமாய் ஒரு புன்னகையைப் போலியாய் உதிர்த்து, மனசில் பிசிறடித்த எண்ணங்களை உலுக்கி, உதறிவிட்டு,

''நசீர், அப்ப இந்தத் தடவை ஹார்ட்டரை குடுத்திடலாமே'' என்றான். அவன் போலி உற்சாகத்தில், எல்லாருமே ஏமாந்து முகம் மலரத் திருப்தியானார்கள்.

நசீரிடம், 'போடா (அன்பான) இடியட்' என்றான் பிரேம் மனத்துள்.

விடியற்காலை திடீரென விழிப்பு வந்தது. இருள் மறைந்து கொண்டிருக்க, ஆதவனின் ஆக்கிரமிப்பு அடையாளங்கள் அங்கங்கே. நேற்றைய இரவுச் சம்பவங்கள் ப்ரேமின் மனத்தில் வந்தன. மீண்டும், மீண்டும் வந்தன.

ஆச்சரியமாய் ஒரு நம்பிக்கைக் கிரணம்... மிக மெல்ல...

'நெஜமாவே ஒருவேளை இந்தத் தடவை நசீர் சொன்னமாதிரி வேலை கெடைச்சிடுமோ?'

கடுகு பதில்கள்!

✕ வி. வெங்கடராமன், மின் பாறை.

கே: ஸ்ரீனிவஸ், தத்துவ விஷா ரத், நாளஸ்யத்திலகம் கடுகு அவர்களே! உங்களை எனது ஞானாசிரியராக ஏற்றுக் கொள்ள அனுமதிப்பீர் களா?

ப: மாட்டேன் மகனே! மூன்று அடைமொழி களுக்கு மேல் தெரியாத உன்னை எப்படி ஏற்பது? இன்னும் அதிகமான பாராட்டுப் பட்டங்களை என்றைக்கு எனக்கு அளிக்கிறாயோ அன்று என்னை ஞானாசிரியனாக ஏற்றுக்கொள்ள அனு மதிப்பேன்!



✕ எஸ். ஜே. மாலினி, சென்னை-82

கே: எனது தாழ்மையான கருத்து என்று குறிப்பிடுகிறார்களே, அவர்களுக்கு உயர்வான கருத்து வேறொன்று இருக் குமா?

ப: இப்படியா அர்த்தம் பண் ணிக் கொள்வது? தாழ்மை யான என்னுடைய கருத்து என்றுதான் பொருள். கருத்து தாழ்மையானது அல்ல.

✕ எஸ். பார்த்தசாரதி, குரோம் பேட்டை.

கே: மூலதனம் இல்லாமல் தொழில் நடத்துபவர்கள் எழுத்தாளர் களும் அரசியல்வாதிகளும் தானே?

ப: இல்லை மூளை தனம்தான் இவர்களுக்கு மூல தனம்.

✕ ஏ. கே. நாசர், லெட்சுமாங் குடி.

கே: அடிக்கடி வெவ்வேறு ஊர் களுக்கு மாற்றலாகும் நிலை யில் இருப்பவரின் பிள் ளைகள் அதிகம் பாதிக்கப் படுகிறார்களா?

ப: அவர்களின் படிப்பு பாதிக்கப்படுகிறது. சில சமயம் தந்தையைப் பிரிந்து இருக்கவேண்டி யிருப்பதால், தந்தையின் நேரடி மேற்பார்வையில் வளரும் வாய்ப்பை இழக் கிறார்கள். ஊருக்கு ஊர் உள்ள பழக்க வழக்கங் களும், சூழ்நிலைகளும் அவர்களை அலைக்கழிக் கும். இதன் காரணமாக உயர் படிப்பு, வேலை வாய்ப்பு முதலியவை களில் கூட குந்தகம் ஏற் படுகிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல், அரசாங்க ஊழியர்களும், தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர் களும் மாற்றப் படுகிறார்கள். அடிக்கடி மாற்றல் காரணமாகப் பல குடும்பங்கள் முன்னேற்றமே அடைவதில்லை.



✕ சேவியர் பாஸ்கல், திருச்சி-4

கே: சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாரதி சொன்னார். இப்போது சாதியைச் சொல் என்று பள்ளியில் குழந்தைகளைக் கேட்பது முறையா?

ப: முறையில்லைதான். ஒருகால், பாப்பாக் களுக்கு மட்டும் சாதிகள் இல்லை. சற்று வளர்ந்த பின் சாதிகள் உண்டு என்று பாரதி சொன்னதாகக் கருதுகிறார்களோ என்னவோ!

✕ ந. ராமசாமி, குறிக்காரன் வலை.

கே. இளைஞர்களுக்காகத் தோன்றியுள்ள 'திசைகள்' பற்றி உங்கள் அபிப்பிராயம்?

ப: உங்கள் கேள்வி இந்தச் சமயத்திலா வரவேண்டும்? 'திசைகள்' நின்றுவிட் டதே. ஊக்கத்துடனும், திறமையுடனும் தயாரிக்கப்பட்டு வந்தது 'திசைகள்' அர திர்ஷ்டம், அது நின்று விட்டது! வெரி ஸாரி, மிஸ்டர் மாலன்.

பரிசு பெறுபவர் :

ஏ. கே. நாசர்
14-ஏ, கொரடாச்சேரி ரோடு
லெட்சுமாங்குடி P.O. 614102

டா:ஃபே பிரதான விற்பனை உரிமை
பெருமையுடன் வழிவழியாக
வளர்ந்துவரும் ஸ்தாபனம்.

MF
Massey Ferguson

TAFE

டாஃபே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் இந்திய வேளாண்மைக்கு கடப்பாடு உடையவர்கள். அவர்களின் பரஸ்பர நம்பிக்கையால்தான், இந்தியநாடு முழுவதிலும் சிறந்த முறையில் அனைத்திந்திய பிரதான விற்பனை அமைப்பின் கீழ் விற்பனை மற்றும் சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. அவர்களின் கூட்டு முயற்சியால்தான் பல விற்பனை மையங்கள் ஒரு தலைமுறையையும் தாண்டி இயங்கி வருகின்றன. இதில் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மையங்கள் கால் நூற்றாண்டுக்கான பணிக்கென விருதுகள் பெற்றுள்ளன.

தொழில் ரீதியாக போட்டிகள் நிறைந்த இன்றைய சூழலில் டாஃபே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் வளர்ந்துவரும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகத்தொடர்ந்து போராடி வருகின்றார்கள்.

இந்திய வேளாண்மையை வளப்படுத்துவதைத் தத்துவமாகக் கொண்டுள்ளது—டா:ஃபே.

MF
Massey Ferguson

TAFE

ட்ராக்டர்ஸ் அண்ட் :பார்ம் எக்விப்மெண்ட் லிமிடெட்
சென்னை

MAC/T/45-A/Tam



சிவாஜி & பாரதிராஜா

ஒரு கற்பனை ஷூட்டிங்! —ஜீவா—



இடம்: வாகினி ஸ்டூடியோ.

7 மணிக்கு ஷூட்டிங்.

சிவாஜி 6.59க்கெல்லாம் மேக்கப்போடு வந்து காத்திருக்கிறார். கதாநாயகி இன்னும் வரவில்லை.

சிவாஜி: ஏப்பா பாரதிராஜா! ஹீரோயின் யாரு? புதுசா?

பாரதி: ஆமாண்ணே! புதுசுதான். விஜிதா அப்ஸெராத்தின்னு பேரு. ஒரியானுமா நிலம். சர்ச் பார்க்லே படிக்குது. ப்ளூ டயமண்ட்லே படம் பார்க்கும்போது பிடிச்சேன். நடிக்க வர்றியாண்ணேன். சரின்னுச்சு... அதோ வந்துட்டாளே. ஏம்மா இவ்வளவு லேட்டு?

விஜிதா: வெரி சாரி மிஸ்டர் பாரதிராஜா!

பாரதி (கோபத்துடன்): என்னது? அண்ணேக்கு ''சார்''ன்னு கூப்பிட்டே. இன்னிக்குப் பேரைச் சொல்றே. ஹூம்...பாரதிராஜா இதுக்கெல்லாம் பயந்தவனில்லே. பாவைக எக்ஸ்பிரஸ்லே எப்பவும் அவனுக்கு ஒரு இடம் இருக்குது தெரியுமா? மரியாதை குடுத்து மரியாதை வாங்கு!

சிவாஜி: சே! சே! விடப்பா. பாவம்... இன்னிக்கு என்ன ஸீன் சொல்லு.

பாரதி: மணிவண்ணன்! அண்ணங்கிட்ட ஸ்கிரிப்டைக் கொடுங்க! அண்ணே. நீங்க படிச்சிட்டு வேலை இல்லாத பட்டதாரி. விஜிதா கூட ட்ராக்டர் ஓட்டிட்டு வர்றீங்க. அப்ப கால்வாய்க்கரையிலே பொடிப் பசங்க வரிசையாக நின்னுட்டு ஒண்ணுக்கு அடிக்கிறாங்க.

சிவாஜி: என்னது?

பாரதி: ஆமா... ஆனா காமிரா பின்னாலே தான் இருக்கும். விஜிதா வெட்கத்திலே கண்ணை மூடிக்குது. நீங்க உங்க கையாலே அவ கண்ணைத் திறக்கிறீங்க. இப்ப அவளுக்கு ஒரு புதுக் காட்சி தெரியுது.

சிவாஜி: கனவா?

அனைவரும் (ஒரே குரலில்): எப்படீண்ணே கண்டு பிடிச்சீங்க?

பாரதி: எங்கும் பன்னீரா மழை பெய்யுது. டிராக்டர் பூரா பூமாலை. 25 பெண்களைத் துணை நடிகர்கள் சங்கத்திலிருந்து அனுப்பியிருக்காங்க. வயசுதான் எல்லாருக்கும் 35-40 இருக்கும். பரவாயில்லே. கண்ணன் கிட்டே சொல்லி அவுட் ஆஃப் போகஸ் பண்ணிரலாம். எல்லாரும் வெள்ளை டிரஸ் போட்டிட்டு டிராக்டர் மேலே ஏறி ஆடுறாங்க.



'வசந்த காலத்துப் பூ மழையே'ன்னு பாட்டு. வைரமுத்துதான் எழுதியிருக்கார்.

சிவாஜி: இதெல்லாம் இன்னிக்கேவா?

பாரதி: ஐயையோ! அதெல்லாம் அவுட்டோர். இப்ப நீங்க ட்ராக்டர்லே விகிதா கூட வர்ற ஷாட் மட்டும்தான் எடுக்கப் போறேன். கண்ணன், இங்க வாங்க! (சிவாஜியிடம்) அண்ணே, இது நம்ம காமராமேன் கண்ணன். டைரக்டர் பீம்சிங் சாரோட பையன்.

சிவாஜி: அடடே, கண்ணனா? நான் தூக்கி வளர்த்த பையன்! இப்ப இவ்வளவு பெரிசாயிட்டே. ஹூம் பீம்சிங்... போயிட்டியே அய்யா...(கண் கலங்குகிறார்).!

கண்ணன்: ஐயையோ! சார், அழாதீங்க உங்க ஆசீர்வாதத்திலே நாங்க எல்லாரும் பீல்ட்லே நுழைஞ்சிருக்கோம். எனக்கு ஒரு சின்ன ஆசை. நீங்க இதே மாதிரி ஹீரோவாக நடிக்க, அதை என் பையன் டைரக்ட் செய்யணும்.

சிவாஜி: அடேயப்பா! ஹா! ஹா! ஹா! சரிப்பா சரி! பிள்ளைகள் விருப்பத்தைத் தட்டறதுக்கு நான் யாருப்பா, நான் யாரு? அடேடே! என்—கோட்டு எங்கே?

பாரதி: கோட்டா? அண்ணே, நீங்க இதுல ஒரு ஏழை விவசாயி.

சிவாஜி: ஏம்பா, விளையாடுறியா இப்பெல்லாம் நான் கோட்டில்லாம நடிக்கிறது கிடையாது, தெரியுமா? அது பிள்ளைகள் கட்டளை. ஜெய்ஹிந்த்!

அடுத்த ஷெட்யூல்.

துவரங்காட்டிலிருந்து பூதப்பாண்டி செல்லும் சாலையோரம் வெளிப்புறக் காட்சி.

சிவாஜி: இன்னிக்கி என்னப்பா ஷாட்?


பாரதி: விகிதாவோட அப்பா ஜி. சீனிவாசன். நீங்க லவ் பண்றதைத் தெரிஞ்சுகிட்டு அரிவாளோடு வர்றார். நீங்களும் அவரும் ஒருத்தரை ஒருத்தர் முறைக்கிறீங்க. வசனம் கிடையாது.

சிவாஜி: வசனமே கிடையாதா?

பணம் பணம் பணம் பணம்

வாழ்க்கையிலே பணத்தை விட முக்கியமான விஷயங்கள் பல இருக்கின்றன. ஆனால் ஒரே ஒரு தொல்லை: அத்தனைக்கும் பணம் தேவையாயிருக்கிறது!

— வ. தேனப்பன்



பாரதி: கிடையாது. அதெல்லாம் இளையராஜா பார்த்துப்பார் ரீ-ரிகார்டிங்லே. ஓ.கே! ஸ்டார்ட்!

ஜி. சீனிவாசன் கண்களை உருட்டுகிறார்.

சிவாஜியும் உருட்டுகிறார்.

ஜி. சீயின் கண்கள் பெரிதாகின்றன.

சிவாஜிக்கும் அப்படியே.

ஜி. சீயின் கழுத்து நரம்புகள் புடைக்கின்றன.

சிவாஜியின் கழுத்து நரம்புகள் இல்லாளு ஆடுகின்றன.

ஜி. சீயின் மூக்கு விடைக்கிறது.

சிவாஜியின் கன்னக் கதுப்பு விண் விண் என்று துடிக்கிறது. புருவங்கள் ஏறி இறங்கி முகம் புடைத்து, சகல நரம்புகளும் ஆடுகின்றன.

இந்தப் பத்து நிமிடப் போராட்டத்துக்குப் பின் தாங்க முடியாமல் சீனிவாசன் மயங்கி விடுகிறார். சிவாஜியின் ''விக்'' மட்டும் அதிர்ச்சி தாங்காமல் தெறித்து விழுகிறது. அவர் முகமெங்கும் மேக்கப் வெடித்து சிறல் விழுந்து விடுகிறது.

பாரதி: கட்...கட்...கட்...

ஜி. சீனிவாசனுக்கு முதலுதவியும், சிவாஜிக்கு மேக்கப் டச்சிங்கும் நடக்கிறது.

பாரதி (சிவாஜியிடம்): என்னண்ணே இப்படி முறைச்சிட்டீங்களே! ஆள் தாங்க முடியாம விழுந்துட்டாரே...

சிவாஜி: போப்பா! (சலிப்புடன்) பேசாம சுந்தரராஜனைப் போட்டிருந்தா கலபமா முடிஞ்சிருக்கும்.... சரி கிளைமாக்ஸை எப்படி முடிக்கப் போறே?

பாரதி: அதுண்ணே, நீங்க சீனிவாசனைத் தூக்கி தார் டின்லே வீசுறீங்க. அதைத் தெரியாம அவர் பையனே தாரை டின்னோட காய்ச்சுறான். அவரும் தாரோட தாரா உருகிர்றாரு. அந்தத் தாரை ரோட்டிலே ஊத்திப் போடும்போது, விகிதா ஓடிவந்து சாக்கடை ஓடையிலே விழறா. அவளோட அண்ணன் சூரிக் கத்தியிலே காண்ட்ராக்டர் கவுண்ட மணியைக் குத்திக் கொல்ல, நீங்களும் சாக்கடை ஓடையிலே விழுந்து அவளைக் கல்யாணம் பண்றீங்க... அப்ப போலீஸ் வருது.... அப்புறம்....

சிவாஜி: கொஞ்சம் இருப்பா, ஒண்ணும் புரியலியே.

பாரதி: ஹைய்யா! ஒண்ணும் புரியலையா? அப்ப என்னோட ரசிகர்கள் தியேட்டருக்கு வெளியே ''மக்களே, இந்தப் படம் உங்களுக்குப் புரியவில்லை என்று சொல்லுங்கள், பிடிக்கவில்லை என்று சொல்லாதீர்கள்'' என்று தட்டி எழுதி வெச்சிருவாங்க. அவ்வளவு அபிமானம் என் மேலே.

சிவாஜி: ஓஹோ! அப்படியா? அப்ப என் பிள்ளைகள் என்ன செய்வாங்க?

பாரதி: என்னண்ணே தெரியாதது மாதிரி கேட்கிறீங்க! உங்க கட்-அவுட்டுக்கு மாலையெல்லாம் போட்டு, குழந்தைகளுக்கு மிட்டாயும், தாய்மார்களுக்கு குங்குமச் சிமிழும் கொடுத்து. நீங்க திரையில தோன்றுகிறபோதெல்லாம் பூமாரி பொழிஞ்சு, அமர்க்களப் படுத்த மாட்டாங்களா?

மனோபலா: சார்! அடுத்த ஷாட் ரெடி!

(அனைவரும் விரைகின்றனர்.)

டயானா-சார்லஸ் திருமணம்



பதினாறாவது வயதிலிருந்து டயானாவுக்கு சார்லஸைத் தெரியும். சார்லஸைக் காதலித்தார், ஏன், மானசீகமாகப் பூஜிக்கவே செய்தார். ஆனால் அதை வெளியிடத் தயக்கம். சார்லஸை மட்டுமா, ஒரு தேசத்தையே அல்லவா சமாளிக்க வேண்டும்! மூன்றாண்டுகள் சென்று அந்தத் துணிவு பிறந்தது. டயானா — சார்லஸ் திருமணம் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது. நிச்சயதார்த்தம் நடந்து ஐந்து மாதங்கள் சென்ற பின் ஜூலை 29ல் திருமணம்.

அந்தக் கோலாகலத்தை விநாடிக்கு விநாடி 70கோடி மக்கள் ரசித்தனர் டி.வியில்.

ஊர்வலத்தை நேரில் காண விரும்பியவர்கள் முதல் நாளே வசதியான இடத்தைத் தேர்ந்தெடுத்து முகாமிட ஆரம்பித்தார்கள். பன் — ரொட்டி — பிஸ்கட் சாப்பிட்டுவிட்டு இரவெல்லாம் நடைபாதையில் படுத்திருந்தார்கள். ஆனால் யாருக்குமே தூக்கம் வரவில்லை!

ஸ்காட்லண்டு யார்டு, பிக்பாக்கெட்டுகளை எப்படிச் சமாளிப்பது, குழந்தை காணாமல் போகாதிருக்க என்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் மக்களுக்குப் பல மாதங்களாகவே அறிவுரைகளை வழங்கியபடி இருந்தது.

திருமணத்துக்கு முதல் நாள் இரவு ஹைட் பார்க்கில் ஆர்கெஸ்ட்ரா பின்னணி இசை ஒலிக்க நடந்த வாண வேடிக்கைகளை ஐந்து லட்சம் மக்கள் கண்டு களித்தார்கள். வானம் பதினெட்டு நிமிடங்களுக்கு ஜகஜ்ஜோதியாக விளங்கியது.

வார, நாளிதழ்கள், டி.வி. ரேடியோ முதலியன, பல மாதங்களாகவே டயானா— சார்லஸ் பற்றிய செய்திகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்து வந்தன. திருமண தினம் நெருங்க நெருங்கச் செய்தித் தாள்கள் பித்துப் பிடித்தாற் போலாயின. ஒரு பத்திரிகை டயானாவின் கல்யாண கவுன் பற்றிய விவரங்களை அறிய 35000 பவுண்டு லஞ்சம் தரத் தயாராக இருந்தது! நல்லவேளை அதன் ஜம்பம் சாயவில்லை.

டயானாவின் பாரம்பரியப் பெருமைகள் நுணுகி ஆராய்ந்து வெளியிடப்பட்டன. அவர் உடலில் அரச ரத்தம் ஓடுவது கண்டுபிடிக்கப் பட்டது.

ஜோதிடர்கள் டயானா 82ல் தாயாவார் என்றும் 92ல் அரசியாவார் என்றும் கூறினர்.

இவ்வளவு அமர்க்களங்களும் ஏற்கனவே அனைவரும் அறிந்த ஓர் உண்மையை மீண்டும் நிரூபித்தன. பிரிட்டிஷ் மக்கள் குடியாட்சி உரிமைகளைச் சற்றேனும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்; அதே நேரத்தில் முடியாட்சி பாரம்பரியத்தை வரவேற்பார்கள், அரச குடும்பத்தினிடம் அளவற்ற அன்பும் மரியாதையும் செலுத்துவார்கள்.

மக்களின் இந்த அன்பு வெள்ளத்துக்கிடையில் ஒரு சிலரது, ''இப்படி ஒரு கல்யாணத்துக்குப் பணத்தை வாரி இறைக்க வேண்டியது அவசியம்தானா?'' என்ற முணுமுணுப்பு மங்கி மறைந்தது.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் முன்னெப்போதையும் விடப் பயங்கரமாக விசுவரூபம் எடுத்திருப்பதும் இனக் கலவரங்கள் பற்றிய கசப்பான நினைவுகளும் அயர்லாந்துப் பிரச்னையும் அதையொட்டி உண்ணா நோன்பிருந்து மடிந்தவர்கள் பற்றிய துயர எண்ணங்களும் எல்லாம் தாற்காலிகமாகவேனும் மறந்து போயின.

டயானா ஸெயிண்ட் பால் கதீட்ரலுக்கு வந்தபோது அவர் கவுனைப் பார்த்து வியந்து பிரமித்து நெடுமூச்சு விடாத பெண்மணி இல்லை.

காண்டர்பரி ஆர்ச் பிஷப் திருமண பிரமாணத்தைக் கூற, அதனைத் திருப்பிக் கூறிய சார்லஸ், டயானா இருவருமே உணர்ச்சி வசப்பட்டிருந்ததால் தடுமாறித் தவறிழைத்தார்கள். ஆனால் வாழ்க்கைத் துணைத் தேர்வில் தடுமாறித் தவறேதும் இழைத்து விடவில்லை என்பதில் இவ்விதழ் மேலட்டையில் காணப்படும் இருவருமே நிச்சயமாக இருக்கிறார்கள்.

டயானாவுக்கு வயது இருபதுதான் என்றாலும் சில விஷயங்களில் அவர் வயதுக்கு மீறிய உறுதி காண்பிக்கிறார். உதாரணமாகக் கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன் என்ற சம்பிரதாயச் சொல்லை (Obey) திருமணப் பிரமாணத்திலிருந்து நீக்கிவிட வேண்டும்















என்று நிபந்தனை விதித்தார், இந்த நவயுக நங்கை!

திருமண சமயத்தில் கதீட்ரலில் ஒலித்த இசை சார்லஸ் தாமே தேர்ந்தெடுத்தவை.

திருமணம் முடிந்து பொதுமக்களுக்கு பால்கனியில் நின்று தரிசனம் அளித்தனர் புதுமணத் தம்பதியர். மக்கள் மெய்மறந்து உற்சாகமாகக் கோஷித்தார்கள். உள்ளே சென்றவர்களைத் தொடர்ந்து கரவொலி எழுப்பி மறுபடி வெளியே வரச் செய்தார்கள். இப்படி மூன்று தடவை நடந்த பின் சார்லஸ், டயானாவின் அதரங்களில் முத்தமிட்டு மக்களைப் பரவசத்தில் ஆழ்த்தினார். வாழ்த்தொலியில் விண்ணதிர்ந்தது!

300 அறைகளும் 45 ஏக்கர் தோட்டமும் கொண்ட பக்கிங்ஹாம் அரண்மனையில் குடி புகுந்த டயானா, அங்கே மூட்டை மூட்டையாகப் பரிசுப் பொருள்களும் வாழ்த்து மடல்களும் குவிந்திருக்கக் கண்டார். அவற்றுள் சிறுவர் சிறுமியர் பலர் தாங்களே தயாரித்த கேக் என்றும், தாங்களே தீட்டிய ஓவியம் என்றும் அனுப்பியிருந்த பரிசுகள், மாஜி நர்ஸரி டீச்சரின் உள்ளத்தை நெகிழ்வித்தன.

இளவரசியாகிவிட்ட டயானாவை சார்லஸ் அவருடைய பெற்றோர், பாட்டி ஆகிய நால்வர் தவிர மற்ற அனைவரும் மண்டியிட்டு வணங்கியாக வேண்டும். சார்லஸின் சகோதரி ஆன், சித்தி மார்கரெட் ஆகியோர்கூட விதிவிலக்கல்ல!

சம்பிரதாயமான "ஜஸ்ட் மாரீட்" அறிவிப்பு அட்டை தொங்க, பலூன்கள் கட்டிப் பறக்க, கோச்சில் ஏறி சார்லஸும் டயானாவும் புறப்பட்டார்கள் தேன் நிலவுக்கு. ரயில் நிலையம் நோக்கி கோச் விரைந்தது.

காலந் தப்பாமல் எல்லா நிகழ்ச்சிகளும் விக்னமின்றி நடந்து முடிய வேண்டுமே என்று கவலையோடு உழைத்த ஆயிரக் கணக்கான அதிகாரிகளும் ஊழியர்களும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

"வழக்கமாக ராஜா ராணி கதைகள் திருமணத்தில் நிறைவுறும். 'அப்புறம் அவர்கள் சந்தோஷமாக நீண்ட காலம் வாழ்ந்திருந்தார்கள்' என்று சுலபமாய் முடியும். உங்கள் விஷயம் அப்படியல்ல. உங்கள் மீது மக்கள் பொறுப்பு என்னும் பெரும் சுமையை ஏற்றுகிறார்கள். ஆனால் அந்தப் பளுவை நீங்கள் அதிகம் உணராதபடி மக்கள் உங்களிடம் காட்டும் அன்பு அந்தச் சுமைக்கு இணையானதாக இருக்கும்" என்று திருமணச் சடங்கின் இறுதியில் ஆர்ச் பிஷப் கூறிய கருத்து, அர்த்தமுள்ளது. அசை போட்டு ரசிக்கத் தக்கது.

தகவல் : டி. ஆர். சுப்பிரமணியன்
லட்சுமி கண்ணன்

தொகுப்பு : குட்டி கிருஷ்ணன்

"நாலு பேருக்கு நன்றி!"

மணலைக் கயிறாகத் திரிப்பது எப்படி என்று கற்றுக்கொள்ள வேண்டுமானால் விஷ்ணுப் பிரியாவை அணுகலாம்!


இராசேந்திரனைத் தயாரிப்பாளராய்க் கொண்ட நாடகக் குழுவினர், மணலாகப் பொல பொலவென உதிரக் கூடிய கதையை வைத்துக் கொண்டு எப்படியோ ஒரு நாடகம் உருவாக்கி, அரங்கேற்றி, நம்மை இரண்டு மணி நேரம் அமர்ந்து பார்க்கும்படியும் செய்துவிடுகிறார்கள்!

ரங்காவின் மணல் கோட்டை தட்டினால் தகர்ந்து விழாமல் காக்கும் செமெண்ட் அவருடைய வசனம்தான் என்றாலும் இதுவும் பிளாக்கில்வாங்கிய கலப்பட செமெண்ட் மாதிரி சில கட்டங்களில் பொறுமையைச் சோதிக்கிறது! கூறியது கூறல் குற்றம் தவிர வசனம் சொற்பொழிவாக நீள்வதும் குறைதான்.

ஆனால் இத்தனையையும் ஈடுகட்டிக்கொண்டு போகிற பிளஸ் பாயிண்டுகள்: டைரக்ஷன் திறமை (திரீ சியர்ஸ் ரங்கா!); வசனங்களைப் பேசும் விதம் (delivery); நடிப்புத் திறன். இவை நாடகத்தைத் தொய்வின்றிக் கொண்டு செல்லாவிடில், கதாநாயகன் பாபு இதர நாடக கதா பாத்திரங்களை மட்டுமின்றி ரசிகர்களாகிய நம்மையுமே ஏப்ரல் ஃபூல் ஆக்கி விடுப்பான்! நல்ல வேளை தப்பினோம். இதற்காக நாலு பேருக்கு நன்றி: (1) ஜலகண்டபுரம் சுந்தரேசனாக ஜமாய்க்கும் சேவா ஸ்டேஜ் ஜெயராமன்; (2) சத்திரத்து மானேஜராக வெளுத்து வாங்கும் தயிர்வடை தேசிகன்; (3) கதாநாயகன் பாபுவாகப் பிரகாசிக்கும் ரவிசங்கர்; (4) பாபுவின் தந்தை ஈசுவரனாகக் கம்பீரம் காக்கும் ராமசாமி.

— குட்டிகிருஷ்ணன்





சாதாரண தேங்காய் எண்ணையைக் காட்டிலும் உங்கள்
கூந்தல் வளர்ச்சிக்குகந்தது எது?

கேசவர்த்தினி

கலந்த தேங்காய் எண்ணை!



ஆம்! நீங்கள் அன்றாடம் உபயோகிக்கும் தேங்காய் எண்ணையுடன் சிறிது (சில சொட்டுகள்) கேசவர்த்தினி கலந்து தலையில் தடவிக்கொள்ளுங்கள். உங்கள் கூந்தல் எழில் மிளிர காண்பீர்கள்.

அழகிய அடர்த்தியான கூந்தலின் பரம்பரை ரகசியம் — கேசவர்த்தினி. ஒரு பாட்டில் இன்றே வாங்குங்கள்.



கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்
சென்னை-600 087

OBM 6119 TM



நீயா?

சந்திரநாத்

9

மறுநாள் காலையில்தான் மகேஷ் கிடைத்தான். ''டார்லிங் நான் மகேஷ் பேசுகிறேன்.''

குரலைக் கேட்டதுமே அழுது விட்டாள். ''என் ஞாபகமாவது இருக்கிறதா? போங்க. நான் ஒண்ணும் உங்க கூட இனிப் பேசப் போறதில்லே.'' என்றாள்.

''ஏன்? நான் வாங்கிட்டு வந்த பகோடா நல்லா இல்லையா?''

''நீங்கதான் நல்லா இல்லே.''

''கரெக்ட். இன்னிக்கு ஷேவிங் பண்ணிக்கலே. லோ நல்லா இல்லே. எனக்கே தெரியுது. என்னம்மா பண்றது? டைம் இல்லே. ரொம்ப 'ஹர்ரி புர்ரி'லே இருக்கேன். நாளை மறுநாள் பார். மழ மழ மூஞ்சியுடன் வந்து நிற்கிறேன்.''

''சிரிக்காதீங்க. நானும் ராத்திரி பூரா கவலைப்பட்டுத் தூங்கக்கூடச் செய்யாம தவிச்சுக்கிட்டு இருக்கேன்.''

''ஏய், என்ன இது!''

''ஆமாங்க, நாளைக்கு மறுநாள் நீங்க இந்த லோகத்துலேயே இருப்பீங்களான்னு நான் நடுங்கிக்கிட்டு இருக்கேனுங்க.''

''என்ன பேத்தல் இது?''

''நீங்க இப்ப மதுரைக்குப் புறப்பட்டுக்கிட்டு இருக்கீங்க இல்லே? ஸ்டேஷன்லே இருந்தோ இல்லாட்டி வேற எங்கியோர்ந்தோ போன் பண்றீங்க. இல்லே?''

''கரெக்ட். ஸ்டேஷன்லேர்ந்துதான் பேசறேன்.''

''என் ஜோசியம் கரெக்டா — நம்பறீங்களா என் வார்த்தையை? அப்ப — நான் சொல்றஅடுத்தஜோசியத்தையும்கேளுங்க''

''நீ எப்ப எந்த அருள்வாக்கு அம்முக்குட்டிகிட்ட ஜோசியம் படிச்சே — எனக்குத் தெரியாமே?''

''ஜோக் வேண்டாம். மதுரையிலே நீங்க தங்கப்போற ஹோட்டல் அண்டார்டிக், நாளை ராத்திரி பாம் வெடிச்சுச் சிதறி அழியப் போறது—''

''என்ன?'' — திடுக்கிட்டான்.

''நீங்களும் கமல்நாத்தும் ஹோகயா ஆகிவிடப் போறீங்க.''

''அப்புறம்?''

''நான் ஆரூடம் முழுக்கக் கூறப் போகிறேன்.''

''அவசியமே இல்லே. நான் அண்டார்டிக்கில் தங்காமல் வேறு எங்காவது தங்கிக் கொள்கிறேன்.''

''அப்போ மதுரைக்குப் போறதுன்னே தீர்மானிச்சுட்டீங்களா?''

''நீ இப்பல்லாம் நிறையத் தூங்கறே மஞ்சு — நிறையக் கனவுகள் காண்றே—''

''கனவுலே கரெக்டா அண்டார்டிக் வருமா? மதுரை போறது தெரியுமா? நான் சொல்றதைக் கேளுங்க ப்ளீஸ்.''

''மஞ்சு, இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?''

''கேட்க மாட்டீங்களா என் பேச்சை? எனக்கு வயித்தைப் பிசையறது. ஹனி; என்னமோ பெரிய விபரீதம் நடக்கப் போகுது டார்லிங்!''

''ராத்திரி உங்க அம்மா உனக்குத் 'திரிசடை' ஸ்டோரி சொன்னாங்களா?''

''என்ன திரிசடை?''

''அதான் ராமாயணத்துலே வருதே — அசோகவனத்துலே, ஜானகி கிட்ட வந்து லங்காபுரி பஸ்மமாகி விழப் போறதா சொப்பனம் கண்டதா சொல்றாளே—''

''எங்கம்மா ஓல்ட் டைப் இல்லே. — ரஜனி பத்தித்தான் பேசுவா.''

''ரைட் — வேறென்ன விஷயம்?''

''நான் சொல்றதைக் கேட்க மாட்டீங்களா?''

''இது பிஸினஸ் மாட்டர் மஞ்சு — ஐ ஆம் அண்டர்ஸ்டாண்ட். ஒரு துப்பறிபவன் என்றால் அவன் போகிற இடத்தில் எல்லாம் ஒரு ஆபத்து இருக்கத்தான் செய்யும். — யார் பயமுறுத்தினாங்க. உன்னே, இப்படி?''

''யாரா இருந்தா என்ன? உங்களுக்கு என்மேலே உண்மையான அன்பு இருந்தா நீங்க மதுரை போக வேண்டாம்.''

''அசடே. என்ன இது! பிஸினஸ்லே எல்லாம் 'அன்பை'க் கொண்டாந்து நுழைத்துக்கொண்டு... மதுரையிலே ஒண்ணும் ஆகிடாது. ஒரு ஆளுக்காக ஒரு பெரிய ஹோட்டலே முழுக்கத் தகர்த்துட முடியாது.''

''ஏன் முடியாது?''

''பெரிய வெடிகுண்டாக் கொண்டாந்து பிளேன்லேர்ந்து போடறாங்க. முடியுமா?

ஒரு ரூம்லே வெச்சா சேதம் அதோட நின்னுடும். நாலேஞ்சு அறை சேதமாகலாம். நான் போன உடனே 'ப்ரிகாஷனு' அறை முழுக்கச் சோதனை போட்டுடுவேன்.''

''அப்பப் போறதுன்னே முடிவு செஞ்சுட்டீங்களா?''

''மேடம். கல்லிடைக்குறிச்சி நடுத்தெரு நாகசாமி ஜோசியரைக் கேட்டிருக்கிறியா, நீ?''

''இப்ப எதுக்கு அவரு?''

''இருபத்தெட்டு வருஷத்துக்கு முந்தியே அவர் பட்டை எழுத்தாணியாலே எழுதிக் குடுத்துட்டார். நானும் என் சம்சாரமும் என் எண்பது வயசிலே காசி, ரிஷிகேஷ் எல்லாம் போவோம்னு — எனக்குத் தீர்க்காயுசு.''

''மகராஜனு இருங்கோ.''

''போய்ட்டு வான்னு சொல்லு.''

''போகாம முடியாதா?''

''எப்படி முடியும்?, மஞ்சு?''

''அப்ப ஒரு வாக்குக் குடுத்துட்டுப் போங்க.''

''ஐயையோ, கைகேயியம்மா என்ன கேட்கப் போறிங்க, தெரியலையே.''

''நீங்க கமல்நாத் தங்கற அறையிலே தங்கக் கூடாது. தனி அறை எடுத்துக்குங்க.''

''அவ்வளவுதானே — சரி.''

''பிராமிஸா?''

''பிராமிஸா'' — பேசாதிருந்தான். ''மதுரையிலேருந்து உனக்கு என்ன வாங்கிட்டு வரணும்? நாகப்பட்டினம் ஒரிஜினல் நெய் மிட்டாய்க் கடை ஸ்வீட்டா — சுமங்கலி ஜாங்கிரியா?''

''உங்க உடம்பை, உசிரை, பத்திரமாக் கொண்டாந்து ஒப்படையுங்க. அதுபோதும்.''

''ஷ்யூர், ஷ்யூர்.''

ரயில் கடகடவென்று ஓடிக் கொண்டிருந்தது. பெரிய சாம்பல் நிற ஷெர்வானி



யில், கழுத்திலிருந்து முழங்கால் வரையில் ஒரே பித்தான்களாகத் தொங்க விட்டுக்கொண்டு உட்கார்ந்து, சின்ன நாவலில் மூழ்கியிருந்தார் கமல்நாத்.

ஒரு கொடுவாள் மீசைக்காரன் (பட்டிக்காட்டான் அல்ல, பாண்ட், ஸ்லாக் வீரபத்திரன்தான்) எதிர் வரிசையில், மகேஷ் அருகில் உட்கார்ந்து, ஒரு ஆரஞ்சுப் பழத்தை உரித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று நிமிர்ந்து "எந்த ஊர் போறீங்க?" என்று கேட்டார் கமல்நாத்.

"செங்கல்பட்டுங்க" என்றான் மகேஷ்.

"ஐயா எதுவரை போறீங்களோ?"

"மதுரை வரை. நீங்க?"

"நானும் மதுரை வரையிலதாங்க. — யாவார விஷயமாப் போறேன்."

"என்ன பிஸினெஸ்?"

"பொகையிலேங்க. சுருட்டுக் கம்பெனி நடக்குதுங்க. லண்டன், ஒட்டாவா எல்லாம் போவுதுங்க."

கொடுவாள் ஒரு பீடியைச் செல்லமாக உருவிப் பற்றவைத்தான். 'புஸ்' என்று புகை விட்டான்.

கமல் அவன் தோளைத் தொட்டு, 'சக பயணிகள் அனுமதியின்றிப் புகைக்கக்கூடாது' என்ற அலட்சியப்படுத்தப்பட்ட எச்சரிக்கையைக் காட்டினார். மீசை முணு முணுத்துக்கொண்டே எழுந்து தூரப் போனான்.

கமல் சிரித்தார். தணிந்த குரலில், "சாயங்காலம் வரையில் நம்மாலே சுருட்டைப் பத்திப் பேச முடியுமுங்க" என்றார்.

"நல்லா வேஷம் போடறீங்க" என்றான் மகேஷ்.

கொடுவாள் பீடியை எறிந்து விட்டுத் திரும்பி, மூஞ்சியை 'உம்' என்று வைத்துக் கொண்டு வந்தான். கமல்நாத் சுகமாக ஜன்னலோரம் சாய்ந்து கொண்டு ஒரு ச. தேவி புத்தகத்தில் தெரிந்த கிராக்கியின் துடைகளில் விரலால் ஊர்ந்து கொண்டிருந்தார்.

மதுரை இருளில் முழுக ஆரம்பித்திருந்தது. இட்லிகள் தெருவோரம் மலரத் தொடங்கியிருந்தன. மல்லிகை அரும்பாக மணத்தது.

ஸ்டேஷன் பிளாட்பாரத்திலேயே பிரிந்து கமல் முன்னால் போக அவரைக் கண்காணித்துக் கொண்டு பின்தொடர்ந்து, ஹோட்டல் நிர்மலாவில் நுழைந்து 'கல்லா' முன் நின்றார்கள்.

ரூம் இருந்தது. சாவியைக் கொடுத்தான். தூக்கி வாரிப் போட்டது. — பதின்மூன்றும் நம்பர் ரூம்.

கமல்நாத்தின் முகத்தில் கலக்கம் தெரிந்தது. "பேர் சொல்லுங்க."

"கமல்நாத், மெட்ராஸ்" என்றார். "டபிள் காட் ரூம்தானே?"

"இல்லீங்க. சிங்கிள் ரூம்தான். 'டபிள்' எல்லாம் ஏற்கனவே 'புக்' ஆயிடுச்சு" என்றான் கிளார்க்.

"எனக்கு டபுள் ரூம் வேணுமே."

"சாரிங்க. வேணும்னு 12ம் நம்பர் காலியா இருக்கு. சேர்த்து எடுத்துக்குங்க." என்றான். வாங்கிக் கொண்டார்கள். "அதுவும் உங்க பேரிலேயே போடணுங்களா?" கேட்டான். "அப்படியே போட்டுக்க" என்றார்.

மேலே போனார்கள். தனித் தனி ஆள் மாதிரி போனார்கள். சம்பந்தமற்றவர்கள் போலக் கூட்டத்தில் கலந்து போனார்கள்.

முதல் தளத்திலேயே முப்பது அறைகள் வரிசையாக இருந்தன. பதின்மூன்றைத் திறந்து விட்டான் பையன். மகேஷ் 12க்குள் போனான்.

குளித்தான். டிரஸ் மாற்றிக்கொண்டான். அறையைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தான். கமல்நாத் அறை—வாசலில் நின்றிருந்தார். முகம் ஏகக் கவலையைக் காட்டிற்று. ஒரு பேப்பரைப் படிப்பது போல் பிடித்துக் கொண்டிருந்தார்.

மகேஷ் கிட்டப் போனதும் ஒரு ஷீட்டை நழுவ விட்டார். எடுத்துக் கொடுத்தபோது தணிந்த குரலில் சொன்னார்: "ஸார்—எங்கியும் போயிடாதீங்க. இந்த வராந்தா கோடியிலேயே பெஞ்சிலே உட்கார்ந்து ஏதாவது படிக்கிற மாதிரி இருங்க. யாராவது என் அறைக்கு வந்தா ஒரு கண் வச்சுக்கிடுங்க." என்றார்.

வராந்தா கோடியில் ஒரு பெஞ்சியில் சில பத்திரிகைகள் கிடந்தன. பெரும்பாலான அறைகள் மூடியிருந்தன. வெளியே நட்சத்திரங்கள் தெரிந்தன. மீனாட்சி அம்மன் கோபுரத்தில் விளக்காகச் சிரித்தாள்.

கமல்நாத் உள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொண்டார்.

பத்திரிகைகள் பழசாயின. படித்ததையே படிக்க அலுத்தது. பல முகங்கள் — மூக்குத்தி முகங்களும்கூடத்தான் — தாண்டிச் சென்றன. மணத்து நகர்ந்தன.

வராந்தாக் கடிகாரம் ஒன்பதைக் காட்டிற்று.

கமலைச் சந்திக்க யாரும் வரவில்லை.

ஒன்பதரை நெருங்கியது. கமலே வெளியே வந்தார். வராந்தா படு 'எம்டி'யாக இருந்தது. கையை அசைத்து வரச் சொன்னார். போனான். "சரி, உங்க ரூமுக்குப் போய்ப் படுங்க. அவங்க நாளைக்குத்தான்

"நம்ம கல்யாணம் நடந்த வருடம் ஞாபகமிருக்கிறதா?"

"ஏன் இல்லாமல், 'விரோதி' வருடமாயிற்றே!"

— ஏ. வி. தேவன்





விரைவில் நிவாரணம் பெற சக்தி வாய்ந்த, நம்பகமான அனாஸின் சாப்பிடுங்கள்

சக்தி வாய்ந்தது: உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலிநிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

நம்பகமானது: டாக்டரின் நம்பகமான மருந்தைப்போல பல மருந்துகளின் கலவையே அனாஸின். ஆகையால்தான் லட்சக்கணக்கானவர்கள் அனாஸின் சாப்பிடுகிறார்கள்; சிபாரிசும் செய்கிறார்கள்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளுவினால் ஏற்படும் வலிகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி.



சக்தி வாய்ந்த, நம்பகமான
மேனார்ஸ்
அனாஸின்*

இந்தியாவின் புகழ்பெற்ற வலி நிவாரணி

Regd TM

அளிப்பவர்கள்: ஜெஃப்ரி மேனர்ஸின் அனாஸின் பிரிவினர்.

A33-7/77A

வருவாங்க போலிருக்கு. சாப்பாடு ரூமுக்கு வரும்.'' என்ருர்.

—யாரை எதிர்பார்க்கிருர் இவர்?

''ரூமை ஒரு வாட்டி நல்லாப் பார்த்துட றேனுங்க.''

''பார்க்க என்ன இருக்கு — சரி வாங்க.''

பார்த்தான். சந்தேகமாக ஏதும் தென்படவில்லை. அக்கம் பக்கம் எல்லாம் பார்த்தான். திரும்பி வந்தான். சாப்பாடு வந்திருந்தது. குருமா நாற்றமாய் நாறியது.

சாப்பிட்டுப் படுத்தான். தூக்கம் கண்ணைச் சுழற்றியது. நிலாவின் சின்ன இடையை அருகில் இழுத்து முகம் பதித்துக் கொண்டு ஆனந்தமாகத் தூங்கினன்.

விழிப்பு வந்தபோது—

சுத்தமான, சுகமான பிராண வாயுவுக்குப் பதிலாக வேறு ஏதோ ஒன்று மூக்கை அறுத்தது. அறையில் படலம் படலமாகப் புகை புகுந்து கொண்டிருந்தது ஜன்னல் வழியாக.

ஓ—என்னமோ ஆகிவிட்டது! வெடி குண்டு வெடித்து விட்டதா? ஹோட்டல் ஹோர சுயாவா? — பரபரப்புடன் கட்டிலை விட்டுக் கீழே குதித்தான்.

அறைக்கு வெளியே ஏராளமான மனிதர்கள் அங்கும் இங்கும் ஓடினர்கள். கத்தினர்கள்; கதவுகளை அறைந்தார்கள்.

அவசரமாகக் கதவுப் பக்கம் நகர்ந்து திறந்து கொண்டு வெளியே வந்தான். திடுக்கிட்டான்.

ஹோட்டல் முழுக்க 13ம் நம்பர் அறை முன் கூடி நின்று கதவை இடித்துத் தகர்க்கப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தது. கதவில் சில ஓட்டைகள் காணப்பட்டன. அதன் வழியாகப் புகை பீறிக்கொண்டு வந்தது.

'ஓ! கமல்நாத்ஜி!' — கத்திக் கொண்டே ஓடி எல்லோரையும்விலக்கிக் கொண்டுசென்று கதவைத் தன் சக்தியை எல்லாம் திரட்டி நெட்டித் தள்ள —

அது படீரென்று திறக்க—

உள்ளே கண்ணைப் பறிக்கும் செந்நிற ஒளி கமல்நாத்தின் கட்டிலின் மீது நர்த்தனமாடிக் கொண்டிருப்பதைக் கண்டு திகைக்கையில்—

மனித உடம்பு பொசுங்கும் நாற்றம் வயிற்றைப் புரட்டியது.

மகேஷ்—

மயங்கித் தள்ளாடிச் சாய்ந்தான்.

(தொடரும்)

அவளும் தாயானாள்!

▫ ஆரம்பத்தில் நாயகி பாவாடையை வரிந்து கட்டிக் கொண்டு கம்புச் சண்டை போடும்போதே வசமாய் வந்து மாட்டிக் கொண்டோம் என்று தெரிகிறது. ஒரு நடிகப் பட்டாளமே அறிமுகமாகிறது. சமீபத்தில் நாயக நாயகிகளுக்கு அழகு தேவையில்லை நடிப்புப் போதும் என்று தமிழில் நிரூபித்து வந்தார்கள். இந்தப் படத்தில் நடிப்புக்கூட அவசியமில்லை என்று காட்டி விட்டார்கள்.

கதை என்ன என்று அறிய எவ்வளவு பிரயத்தனப் பட்டும் முடியவில்லை. புரிந்து கொண்டு விடாமல் இருக்க வசனமும் துணை நிற்கிறது. ஒரு கிராமம். ரவுடிக் கூட்டம். கையில் கம்பும் மனத்தில் தெம்பும் உள்ள நாயகி. கயவர் கூட்டம் நாயகியை அடையத் திட்டம் போட — மற்றவர்கள் என்னென்னவோ பேசிக் கொள்கிருர்கள். இதில் சஸ்பென்ஸ் வேறு.

2மணிநேர சுகமான தூக்கத்துக்கு	ரூ.	3—00
கொடுப்பது	ரூ.	2—30
லாபம்	ரூ.	0—70

பேங்க் பணம் — அவனுக்குப் பாதி இவனுக்குப் பாதி - என்று திட்டம் போட்டுத் தேவையில்லாமல் கொலையும் நடந்து .... கேமரா வேறு அநுவசியத்துக்குச் சுற்றுகிறது. பாதி பேச்சு கேட்கவே யில்லை. அந்தவரை தப்பினேம்.

பணம் மட்டுமிருந்தால் தயாரிப்பாளராகலாம், முகத்தில் 5 மில்லி மீட்டர் பவுடரை அப்பிக்கொண்டால் நடிகனுகலாம். கட் சொன்னல் டைரக்டராகலாம். கத்தரி இருந்தால் எடிட்டராகலாம் — இப்படியாக எல்லாத் துறைகளிலும் பரி'சோதனை' பண்ணித் தமிழ் சினிமாவுக்குத் தங்களாலான தொண்டு புரிந்திருக்கிருர்கள். இவர்களை 'பாய்காட்' பண்ணுவதே நாம் செய்யும் தொண்டு.

—நளினி சாஸ்திரி



அற்புதமான ஸுமீத்! இதன் வகையில் இந்தியாவிலேயே முதலாவது. நாடெங்கிலும் மேன்மேலும் அதிக இல்லத்தரசிகளுக்கு வியப்பூட்டி வருகிறது.

ஸுமீத்தில் மட்டுமே, எல்லா வேலைகளுக்கும் பயனுரும், விசேஷமாக வடிவமைக்கப்பட்ட, பல-பயனுள்ள ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஜாடி. அதன்மீது உள்ளே பார்க்கக் கூடிய அக்ரிலிக் மூடி. எனவே ஸுமீத் இயங்குவதைக் கண்ணெதிரில் காணலாம்.


பல்வேறு வேலைகளை விரைவிலும் எளிதிலும் செய்து முடிக்க, இப்போது இதில் 4 அலகு அமைப்பு பாகங்கள்:

ஈரப் பண்ட அரைவைக்காக.
உலர் பண்ட அரைவைக்காக.
கடைய, கலக்க, சாறு பிழிய.
மாமிசத்தை அரிக்க,
காய்கறிகளை நறுக்க.


இவை தவிர, சப்பாத்தி, பூரி மற்றும் அப்பளத்துக்காக மாவை விழுதுபோல் பிசைய விசேஷ இணைப்புப் பாகம். அதோடு கேக் மாவை நன்றாகக் கலவை செய்ய விசேஷ 'ஹுக்'...

இவை மட்டுமா? ஸுமீத்தில் 30 நிமிடங்கள் வரை நிற்காமல் ஓடக்கூடிய ஹெவி ட்யூட்டி மோட்டார்.


அற்புதமான ஸுமீத் ஒன்றுதான் முழுமையான கிட்சன் மெஷின். இதை அடைய எத்தனை நாள் வேண்டுமானாலும் காக்கலாம்.




ஈர அரைவை—வடை, இட்லி, தோசைக்காக உளுத்தம் பருப்பு மற்றும் அரிசியை அரைக்க—3½ நிமிடங்களில்.




உலர் அரைவைக்காக—எல்லா வித மசாலாக்கள்—மிளகாய் வற்றல், மிளகு, மஞ்சள், கொத்துமல்லி விதை ஆகியவற்றை அரைக்க.




பொடிக்க—1 நிமிடத்தில் மாமிசத்தைப் பொடிக்க, காரெட், வெங்காயம், தேங்காய், மற்றும் கொட்டைகளை நறுக்க—விநாடிகளில்.



அரைக்க—2 நிமிடங்களில் தேங்காய் சட்னி அரைக்கலாம். அல்லது விநாடிகளில் கொத்துமல்லி-சட்னி அரைக்கலாம்.



கடைய—லஸ்ஸி/மில்க் ஷேக் ஆகியவற்றை ஒரே நிமிடத்தில் தயாரிக்க அல்லது நிமிடங்களில் மயோன்னைஸ் தயாரிக்க. வீட்டிலேயே வெண்ணை கடையலாம்.



மாவு பிசைய—சப்பாத்தி, பூரி, நான் தயாரிக்க 2 நிமிடங்களில் மாவு பிசையலாம். கேக் மாவை மிகவும் சன்னமாகப் பிசையலாம்—3½ நிமிடங்களில்.

ஸுமீத்®

இது ஒன்றே முழுமையான கிட்சன்மெஷின்

இது தவிர கிடைக்கிறது ஸுமீத் டொமஸ்டிக் (பிசையும் இணைப்பு இல்லாமல் கிடைக்கிறது. அதை தனியாகவும் வாங்கிக் கொள்ளலாம்.)

அற்புதமான ஸுமீத் பரவலாகப் பல்வேறு பணிகளைச் செய்கிறது—மற்ற எல்லா வீட்டுபயோக மிக்ஸர்களை விடச் சிறப்பாக.

எப்போது நாங்கள் இலவசமாக இயக்கிக் காட்டுகிறோம் என்பதைக் கவனித்து வாருங்கள். உங்களுக்கெனவே ஸுமீத சிறப்பாக இயங்குவதைக் காணுங்கள்!

சர்வீஸ் சென்டர்கள் : சென்னை : பிப்ரோகிராபர்ஸ் அண்ட் என்ஜினியர்ஸ், போன் : 445700/442055; விவேக் ஏஜென்ஸீஸ், போன் : 76923/75661; மெஸர்ஸ் விவேக் அண்ட் கோ., போன் : 444129. மெஸர்ஸ் விவேக் அண்ட் கோ., போன் : 663545; வி.ஜீ. பன்னீர்தாஸ் அண்ட் கம்பெனி, போன் :812121/88184 கோயமுத்தூர் : ஜே. என்ஜீனியரிங் கார்ப்பரேஷன், போன் : 24579, மதுரை : ஜே. என்ஜீனியரிங் கார்ப்பரேஷன், போன் : 24028. திருச்சி : ஸ்டாண்டர்ட் எலெக்ட்ரிக் கம்பெனி, போன் : 24343.

OBM/5628 AR/1 TM

வலி

விமலாதித்த மாமல்லன்



அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப் போட்டி 81

"சாயங்காலம் ஊருக்குப் போகிறோம்" என்று அப்பா சொன்னவுடன் அப்புட்டாவுக்கு நிலை கொள்ளவில்லை. கதவுக்குப் பின்னால் இருந்த துணிக் கம்பை எடுத்தான். இரண்டு சட்டைகளைக் கொடியிலிருந்து எடுத்து ஒரு பக்கமாக மடித்து வைத்தான். கால் சட்டைகளைத் தேடினான். கொடியில் ஒன்று காயாமல் இருந்தது. கொடியின் இன்னொரு கோடியில் இருந்த அம்மாவின் புடவையை விலக்கினான். உள்ளே ஒன்று இருந்தது. அதை எடுத்தான். அதற்குப் பட்டன்கள் அறுந்து போய்விட்டிருந்தது. கொஞ்சம் தயக்கத்துக்குப் பின்னர் அதையும் சட்டைகளுடன் வைத்துவிட்டு வெளியில் ஓடினான்.

எதிர் வீட்டுக் கதவு மூடியிருந்தது. திண்ணையில் ஏறி ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். ஜன்னலின் கீழ்க் கதவுகள் மூடியிருந்தன. ஒரு பெண் கொஞ்சம் சிரமத்துடன் புடவை உடுத்திக் கொண்டிருந்தாள். அவள் முகம் கொஞ்சம் வேர்த்திருந்தது. அந்தப் பெண் நிமிர்ந்து பார்த்தாள். சிரித்தபடி 'என்னடா அப்புட்டா' என்றாள்.

''சந்துரு இருக்கானாக்கா?''

''இல்லே வெளியிலதான் இருப்பான்.''

''நாங்க ஊருக்குப் போறோமே.''

''எந்த ஊருக்குடா?''

''எங்கதாத்தா இருக்காரே அந்த ஊருக்கு''

''மெட்ராஸுக்கா?''

அப்புட்டா தலையை ஆட்டினான்.

''எப்பப் போறே?''

''இன்னிக்கு.''

''யார் யார் போறீங்க?''

''அப்பா, அம்மா, நா.''

''எப்ப வருவீங்க?''

''லீவெல்லாம் முடிஞ்சி ஸ்கூல் தெறக்கச்சத்தான். வருவோம்.''

அப்புட்டா ஜன்னல் கம்பிகளில் ஒட்டிக் கொண்டு நின்றிருந்தான். அந்தப் பெண் புடவையைக் கொசுவியபடியே ஜன்னலருகில் வந்து நின்றாள்.

'எனக்கு என்ன வாங்கிட்டு வருவே?'

'சாக்லேட்.'

'அதுதான் இந்த ஊர்லயே கெடைக்குமே. மெட்ராஸிலேருந்து என்ன வாங்கிண்டு வருவே?'

அப்புட்டா கொஞ்ச நேரம் யோசித்தான். அவனுக்குத் தெரிந்த பொருட்களெல்லாம் இந்த ஊரிலேயே கிடைக்கிறதாகத்தான் இருந்தன.

அவன் யோசிப்பதைக் கண்டு சந்தோஷப்பட்டவளாக ஜன்னல் கம்பிகளுக்கிடையே பொருந்தி இருந்த அவன் வயிற்றில் முத்தம் கொடுத்தாள். சந்துருவின் மேல் பொறாமையாக இருந்தது. இவ்வளவு நல்ல அக்கா அவனுக்கு மட்டும் கிடைத்திருப்பது பற்றி.

'அதோ வரான் பாரு சந்துரு.'

அப்புட்டா ஜன்னலை விட்டுத் திண்ணையில் இருந்து இறங்கித் தெருவைப் பார்த்து

அறிமுக எழுத்தாளர்



ரூ 250/- மூன்றாவது பரிசுக் கதை

ஓடினான். சந்துரு கையில் பம்பரத்துடன் நொண்டியடித்தபடி ஓடிவந்து கொண்டிருந்தான்.

'நான் ஊருக்குப் போறேனே!'

'எந்த ஊருக்கு?'

'எங்க தாத்தா ஊருக்கு.'

சந்துருவின் முகத்தில் உற்சாகம் குறைந்து விட்டது.

'எப்ப வருவே?'

'லீவெல்லாம் முடிஞ்சு ஸ்கூல் தெறக்கும் போதுதான் வருவேன்.'

'அப்ப லீவுமுழுக்க அங்கதான் இருப்பியா?'

'ஆமாம். எங்க தாத்தாவோட நான் செத்த காலேஜ், உயிர்க் காலேஜ், பாம்புப் பண்ணை, பீச்சு எல்லாம் போவேனே.'

'பெரிய்ய செத்த காலேஜ் போடா.' வவ்வவ்வே என்று முகத்தை வலித்துக் காட்டிவிட்டு, 'இந்த லீவுல எனக்கு நெறைய கத சொல்றேன்னு தாத்தா சொல்லி இருக்காரே' என்றான்.

'எங்க தாத்தாவும்தான் கத சொல்லுவாரு. பீச்சுக்குக் கூட்டிட்டுப் போயி கத சொல்வாரே.'

'பெரிய்ய பீச்சு. பீத்திக்காதே.'

சந்துரு கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே போய் வேகமாகக் கதவை மூடிக் கொண்டான்.

அப்புட்டா வீட்டுக்கு வந்தான். அப்பா தரையில் படுத்திருந்தார். அம்மா இரண்டு பைகளைச் சுவர் ஓரமாக வைத்திருந்தாள். ஊருக்குப் போவது குறித்து எந்த சந்தோஷமும் அப்பாவிடமும் அம்மாவிடமும் காணப்படாதது அப்புட்டாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

'மூஞ்சலம்பிக்கோ. நாழியாயிடுத்து' என்றாள் அம்மா.

அப்புட்டா முகம் கழுவிக் கொண்டான். டவலைத் தேடினான். கிடைக்கவில்லை. பையில் எடுத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். அம்மா தன் புடவையால் அவன் முகத்தைத் துடைத்து விட்டாள்.

அப்பா எழுந்தார். சொம்பில் இருந்த நீரில் சமையல்கட்டில் முகம் கழுவிக்கொண்ட பின்னர் டவலைத் தேடினார். பையில் எடுத்து வைத்துவிட்டதை அம்மா தெரிவித்தாள். அப்பா கத்துவார் என்று அப்புட்டா எதிர்பார்த்தான். அவர் கத்தவில்லை. முறைத்துப் பார்த்தார். அப்பாவுக்கு இதுபோல் அடிக்கடி அம்மா மேல் கோபம் வருகிறது. அடிக்கிறார். இருந்தாலும் அப்புட்டாவுக்கு அப்பாவை ரொம்பப் பிடிக்கிறது. அது மட்டும் எப்படி என்றே தெரியவில்லை. அப்பா வேஷ்டியிலேயே முகம் துடைத்துக் கொண்டார்.

அம்மா வீட்டைப் பூட்டி சாவியை அப்பாவிடம் கொடுத்தாள். அப்பா ஒரு பையையும் அம்மா ஒரு பையையும் எடுத்துக் கொண்டு தெருவிறங்கினார்கள். அப்புட்டா அப்பாவின் கையைப் பிடித்தபடி எதிர் வீட்டைப் பார்க்காத மாதிரி பார்த்தான். ஜன்னலில் சந்துரு எட்டிப் பார்ப்பது தெரிந்தது. அப்புட்டாவுக்குப் பெருமையாக இருந்தது.

பஸ்ஸில் ஜன்னல் ஓரமாக அப்புட்டா உட்கார்ந்து கொண்டான். அவனுக்குப் பக்கத்தில் அம்மாவும் அப்புறம் அப்பாவும் உட்கார்ந்திருந்தனர். சீட்டின் மேல் நின்று கொண்டால் தெருவை இன்னும் நன்றாகப் பார்க்க முடியும். அதற்கு அப்பா நிச்சயம் சம்மதிக்க மாட்டார்.

'எப்பம்மா தாத்தா வீட்டுக்குப் போவோம்?'

'ராத்திரி ஒன்பது மணிக்கு.'

இருட்டிய பின்தான் ஊர் போய்ச் சேருவோம் என்பது தெரிந்ததும் உற்சாகம் குறைந்து விட்டது. தாத்தாவை வெளிச்சத்தில் பார்க்க முடியாது என்பது கொஞ்சம் வருத்தமாக இருந்தது.

சந்துருவுக்கு ரொம்பத் திமிர். அவனுடைய தாத்தா அவனுடனேயே இருக்கிறார் என்பதில். அவன் தாத்தா மடியில் உட்கார்ந்திருக்கும் போதெல்லாம் அப்புட்டாவை இளக்காரமாகவே பார்ப்பான். அந்த மாதிரி சமயங்களில் எல்லாம் ஊரிலிருக்கிற தாத்தாவுடன் தான் எப்படி இருப்போம் என்று அப்புட்டா நினைத்துப் பார்த்துக்கொள்வான்.

அவன் தாத்தாவுடன் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருப்பான். தெருவில் பொரி கடலையோ சோன்பப்புடியோ போகும். தாத்தா சொல்லிக் கொண்டிருந்த கதையைப் பாதியில் நிறுத்திவிட்டு வாங்கித் தருவார்.

அவனுடைய தாத்தா சந்துருவின் தாத்தாவைப் போல் கருப்பாக இருக்கமாட்டார். செக்கச் செவேலென்று பெரிய மீசையுடன் இருப்பார். காதில் கடுக்கன் போட்டிருப்பார். உயரமாக இருப்பார். அப்புட்டா தாத்தாவை ஒரு சின்னப் புகைப்படத்தில் பார்த்திருக்கிறான். அதில் அவர் ஒரு குட்டிப் பாப்பாவுடன் இருக்கிறார். இந்தக் குட்டிப் பாப்பா நீதான் என்று அம்மா சொன்ன போது அவனால் நம்ப முடியவில்லை. தான் இதுவரை தாத்தாவைப் பார்த்ததாக அவனுக்கு நினைவே இல்லை. அப்புறம் எப்படித் தாத்தா தூக்கி வைத்துக் கொண்டிருக்க முடியும்?

அப்புட்டா அம்மா மடியில் தலை வைத்துத் தூங்கிவிட்டான்.

அப்பா எழுப்பினார். தூக்கக் கலக்கத்துடன் பஸ்ஸிலிருந்து இறங்கினான். கொஞ்ச நேரத்தில் தூக்கம் கலைந்து விட்டது. இருட்டாக இருந்த தெருக்கள் வழியே போக வேண்டி இருந்தது. அப்புட்டாவுக்குக் கால் வலித்தது. அப்பாவைத் தூக்கிக் கொள்ளச் சொன்னான். அப்பா கையிலிருந்த பையை அம்மாவிடம் கொடுத்துவிட்டு அப்புட்டாவைத் தூக்கிக் கொண்டார். கொஞ்ச நேரத்திலேயே அப்புட்டா திரும்பவும் தூங்கி விட்டான்.

காலையில் டபக் டபக் என்ற சத்தம் கேட்டு எழுந்தான். ஒரு பெண் பம்ப் அடித்துக் கொண்டிருந்தாள். தண்ணீர் விட்டு விட்டு விழுந்து கொண்டிருந்தது. அந்த மாதிரிக் குழாயை அவன் இதுவரை பார்த்ததேயில்லை. அம்மா வந்து பல்பொடி கொடுத்தாள். குழாய்க்குப் பக்கத்தில் பல் விளக்குமாறு அந்தப் பெண் சொன்னாள். பல் விளக்கி முடித்ததும் அந்தப் பெண் வந்து முகம் கழுவி அவளுடைய புடைவையிலேயே துடைத்து விட்டாள். அப்புட்டா அவளைக் கொஞ்சம் தயக்கத்துடன் பார்த்தான்.

''என்னடா யாரோன்னு பாக்கறியே உன் அத்தைதான்டா நான்.''

அறையிலிருந்து தாத்தா வெளியில் வந்தார். அந்தப் பெண் மேற்கொண்டு எதுவும் பேசாமல் உள்ளே போய்விட்டாள். தாத்தா புகைப்படத்தில் பார்த்தது போல் அப்படியே இருந்தார். சந்துரு தாத்தாவைப் போல் இந்தத் தாத்தாவுக்குத் தொப்பை எல்லாம் இல்லை. அப்புட்டா அவருக்குப் பக்கத்தில் போனான். அவர் குனிந்து பார்ப்பார் என்று நினைத்தான். அவர் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தார்.

'தாத்தா!'

பார்க்கவில்லை.

அவருடைய வேஷ்டியைப் பிடித்தபடி இன்னொரு முறை 'தாத்தா' என்றான்.

பார்க்கவில்லை.

''நான்தான் தாத்தா அப்புட்டா''.

குனிந்து பார்த்தார்.

''நான்தான் தாத்தா மிஸ்டர் சதாசிவ ஐயர் பிள்ளை.''

சிரிப்பார் என எதிர்பார்த்துச் சிரித்தான். அவர் முகத்தில் பிரதிபலிப்பு இல்லாமல் போகவே அப்புட்டாவின் சிரிப்பு பாதியிலேயே உறைந்து விட்டது. வேஷ்டியை விட்டு விட்டான்.

அறைக்குள் போனான். அத்தை இருந்தாள். இவனைப் பார்த்ததும் 'வா' என்று தலையசைத்தாள். அருகில் போய் உட்கார்ந்து கொண்டான்.

விட்டுப் போன விளம்பர"விட்"டுகள்

— நவின்ராகரம் மணி

பையன்:

''அதோ பாருங்கப்பா, பல்லவன் ரோட்டுல போகுது!''



''அவரு ஒரு நாளைக்கு இல்லாட்டி என்ன கஷ்டமாயிருக்கு?...''



'அத்தை, ஏன் தாத்தா என்னோடே பேச மாட்டேங்கறார்? அவருக்கு என்னைப் பிடிக்கலையா?'

அத்தை அவனை அணைத்துக் கொண்டாள்.

''இல்லேடா கண்ணு ஏதோ யோசனையில் இருந்திருப்பார். அப்புறமா உன்னோடே பேசுவார்.''

இந்தப் பதில் அப்புட்டாவைச் சமாதானப் படுத்தவில்லை.

தாத்தா மட்டும் என்றில்லை. இந்த வீட்டில் யாரும் யாருடனும் பேசிக்கொள்ளாமல் தான் வளைய வருகிறார்கள். அப்புட்டாவுக்கு இந்த வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. தெருவை வேடிக்கை பார்க்கத் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டான். திண்ணை ரொம்பவும் சின்னதாக இருந்தது. சந்துரு தாத்தா அப்பாவைப் பார்த்துக் கத்திக் கொண்டிருந்தார்.

'நான்தான் எவக்குப் புள்ளையே இல்லேன்னு எப்பவோ தலை முழுகியாச்சே. அப்புறம் ஏண்டா வந்தே?'

அப்பா பதில் பேசாமல் தலை குனிந்து இருந்தார்.

''போடா வெளியே, பணம் வேணுமாம் பணம்.''

'போடா' என்றபடி தாத்தா அருகில் வந்ததும் அப்பா நகர்ந்து சென்று அவரருகில் இருந்த பையை எடுத்துக் கொண்டார். அப்புட்டா அப்பாவின் அருகில் சென்று இன்னொரு பையை எடுத்தான். கனமாக இருந்தது. அம்மா உடனே பையை வாங்கிக் கொண்டாள்.

அப்பா கதவை நோக்கி நகர்ந்ததும் அப்புட்டா வேகமாக நடந்து தெருவில் போய்

கொச்சியின் அருகே வசிக்கும் கோபாலன் என்ற 70வயது மாஜி டாக்ஸி டிரைவருக்குப் புதுமையான அனுபவமொன்று கிடைத்திருக்கிறது.

பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரரான விஜய் மர்சென்ட் தம் மனைவி, மகள் அதிதியுடன் கொச்சியில் 1957 இல் இந்தக் கோபாலனுடைய டாக்ஸியை அமர்த்திக்கொண்டு மூன்று வாரங்கள் கேரளாவில் சுற்றுப் பயணம் செய்தார். ஊர் திரும்பும் போது கோபாலனுடைய நன்நடத்தையைப் பாராட்டி 'நீ என்னுடைய டிரைவராக வர விரும்பினால் பம்பாயில் எனக்குக் கடிதம் எழுதினால் போதும். பிற ஏற்பாடுகளை நான் கவனித்துக் கொள்கிறேன்' என்றுகூறி, தம் முகவரியிட்ட கடிதமொன்றைக் கொடுத்துச் சென்றாராம்.



25வருடங்களுக்குப் பிறகு தன் கண்பார்வை மங்கிய நிலையில் தன்னைப்பற்றியும், குடும்ப நிலையையும் விவரித்துச் சமீபத்தில் விஜய் மர்சென்டிற்குக் கடிதம் எழுதியிருக்கிறார் கோபாலன். 'எங்களிருவருக்கும் வயதாகி, பிரயாணம் செய்யமுடியாத நிலையிலிருக்கிறோம். மகள் அதிதி பரதநாட்டியம் கற்று வருகிறாள். இதுவரை அவள் கேரளாவைப் பார்த்ததில்லை. நாட்டிய நிகழ்ச்சிக்காக அங்கு வரும் சந்தர்ப்பத்தில் அவசியம் உன்னைப் பார்க்க வருவாள்' என்று பதில் எழுதியதுடன் பம்பாயிலுள்ள சர் விட்டல்தாஸ் தக்கர்ஸே சாரிடபிள் ட்ரஸ்ட் மூலம் மாதம் நூறுரூபாய் உதவித்தொகைகோபாலனுக்குக் கிடைக்கும்படியும் ஏற்பாடு செய்திருக்கிறார் விஜய் மர்சென்ட்.

- டெக்கான் ஹெரால்டிலிருந்து

அ. குமார்

வீட்டுத் திண்ணையைப் போல் அகலமாக இல்லை. தெரு வெயிலாக இருந்தது. அவனைவே இருந்த ஒரு பையன் ஒரு பெரிய கோணியுடன் இந்த வீட்டுக் குப்பைத் தொட்டியில் எக்கிக் குனிந்து எதையோ எடுத்துக் கோணியில் திணித்துக் கொண்டு இந்த வீட்டைக் கடந்து போனான். அப்புட்டாவின் இன்னொரு கால் சட்டையைப் போலவே இந்தப் பையனின் கால் சட்டையிலும் பட்டன்கள் இருக்கவில்லை. அவன் சென்றுவிட்டதும் தெரு அனாதையாகிவிட்டது. யாருமற்ற தெருவையே பார்த்துக் கொண்டு அப்புட்டா வெகு நேரம் உட்கார்ந்திருந்தான்.

உள்ளே இருந்து பெரிய சத்தம் கேட்டது. திண்ணையிலிருந்து குதித்து உள்ளே வந்தவன் கதவுக்குப் பக்கத்தில் நின்றுவிட்டான். நின்று கொண்டான். வெயில் ஏகமாக ஏறிவிட்டிருந்தது. அப்பாவும் அம்மாவும் நடக்கத் தொடங்கியதும், அப்புட்டா ஓரக் கண்ணால் வீட்டைப் பார்த்தான். கதவருகில் அத்தை நிற்பது தெரிந்தது. அத்தைக்கு டாட்டா காட்டவேண்டும் போல இருந்தது. நிற்க முடியாத அளவுக்குத் தார் ரோடு சூடேறிக் கிடந்தது.

சந்துரு தாத்தாவைப் பற்றி நிச்சயமாகக் கேட்பான். அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று நினைக்க நினைக்க அழுகையாக வந்தது. வெற்றுக் காலுடன் இந்த வெயிலில் நடப்பது கஷ்டமாக இருந்தது. கொஞ்ச நேரத்திலேயே அப்புட்டாவுக்குக் கால் வலிக்கத் தொடங்கி விட்டது. ஆனால் தூக்கிக் கொள்ளச் சொல்லி அப்பாவைக் கேட்கவில்லை.

JOHNSON®

மிக்ஸர் கிரைண்டர்

புதிதாக மாற்றியமைக்கப்பட்டதால் மேன்மையாக இயங்குகிறது: விரைவாகவே குளிர்ச்சியடைகிறது.

தீவிர ஆராய்ச்சி மற்றும் கடும் உழைப்பின் விளைவாக ஜான்ஸன் அளிக்கும் புதிய, மேன் படுத்தப்பட்ட மிக்சர்-கிரைண்டர் எல்லா வேலைகளையும் சிறப்பின் சிகரமாகச் செய்கிறது.



குளிர்ச்சியூட்டும் புது அம்சங்கள் பாரீர்!

முழுமையான செயலாற்றலுக்காக தனிச்சிறப்பு வாய்ந்த பிளேடுகள்



இரு கிண்ணங்களிலும் அமைக்கப்பட்ட புதிய பிளேடுகள் மேலும், கீழும் மற்றும் சுழன்றும் இயங்குவதால் முழுமையான செயலாற்றல் கிடைக்கிறது. கட்டிகளோ, தானியங்களோ இருக்க வாய்ப்பில்லை.

மேல்பாகத்தில் இடைவெளி இருப்பதால் துரித குளிர்ச்சி



சூடான காற்று துரிதமாக மேல்பாக இடைவெளியிலிருந்து வெளியேறுவதால் மோட்டார் சூடாகாமல் 45 நிமிடங்கள் தடையின்றி இயங்க முடிகிறது. சாதாரணமாக மோட்டார் எரிந்து விடும் அபாயமில்லை.

புதிய கலவை கிண்ணம் தாராளமான காற்றோட்டத்திற்கென.




கலவைகிண்ணத்தின் வளைந்த உட்பாகம் பிளேட் இயங்குவதற்கு வாகாக அமைக்கப்பட்டிருக்கிறது. சீரான கலவை கிடைப்பதோடு சரியான அளவுதான் இதில் அடங்கும்.

எவர்சில்வர் கிண்ணத்தில் சீரியமுறையில் அமைக்கப்பட்ட கைப்பிடி



சீரிய முறையில் அமைக்கப்பட்ட கைப்பிடி எவர்சில்வர் கிண்ணத்தைக் கையாள எளிதாகவும், சௌகரியமாகவும் இருக்கிறது.

சுகாதாரத்திற்கென இரு கிண்ணங்கள்; பாதுகாப்புக்கென இரு பிளேடுகள்



இரு தனி கிண்ணங்கள் இருப்பதால் கலவை செய்தவுடன் கழுவும் தொல்லையில்லை. வேறு கிண்ணத்தில் அரைக்கலாம். சிரமம் குறைவு. மில்க் ஷேக்குகளில் மசாலா மணம் கலப்பதில்லை. உறுதியாக இணைக்கப்பட்ட பிளேடுகள் முழுமையாக பாதுகாப்பு அளிக்கின்றன. இயங்கும்போது பிளேடுகள் பறந்து செல்லும் அபாயமில்லை.

ஜான்ஸன் மிக்ஸர் கிரைண்டரின் முதன்மையான சிறப்பு அம்சங்களும் இதிலே உள்ளன.

- துப்புரவாகச் சுத்தம் செய்ய எளிதாகக் கழற்றக்கூடிய பாகங்கள்
- செம்மையாக வேகத்தை மாற்ற மேன்மையான இன்சர் விசை.
- ஒரு வருட உத்திரவாதம் மற்றும் சிறப்பான பின் விற்பனை பணி.

JOHNSON

ஆற்றலிலும், இயக்கத்திலும் இணையிலாச் சிறப்பு கொண்டது.

Parade/BE/8122

சுவர்ணமுகி

ஸ்ரீவேணுகோபாலன்

கன்னூரக் கண்டய்யன் கட்டழகைச்
சேவித்தேன்;
என்னூறதெல்லாம் நினைந்தே
யெண்ணினேன்.
-முத்து வீரப்பபிள்ளை
மான்விடு தூது', (15 ஆம் நூற்றாண்டு)

20

சுவர்ணமுகி அந்தச் சத்தத்தைத் தனது எத்தனையோ பிரமைகளில் ஒன்றாக நினைத்தாள்.

ஆனால் குளம்பு ஒலியைத் தொடர்ந்து சின்னச் சின்ன பாத சிராய்வுகள் கேட்க,

போர்வையை உரித்துவிட்டு எழுந்தாள்.

வாயிலைப் பார்த்தாள். நிலா அரைத் தூக்கமாகக் கிடந்தது. சின் சின் என்று எங்கும் பூச்சிச் சிணுக்குகள். காட்டுக்குள் அவ்வப்போது பிராணிகளின் இனங்கள்!

வாயிலுக்கு வந்தாள்.

வெளியே ஒரு சொப்பனம் பூத்திருந்தது. எங்கும் மாயமான மிருது வெளிச்சம். இயற்கையே மயக்கம் கண்டது போல் காட்சி! உலகம் ஜடமாக ஸ்தம்பித்திருந்தது. உயிரற்ற வெறும் வரை சித்திரம்!

அவளது குடில் பாறை மேல் இருந்தது. கீழே இறங்கக் கரடுகளாகப் படிகள்.

அந்தப் படிகளின் முடிவுக்கு அப்பால் மண் தரையில் அவள் பார்த்ததும் ஒரு கணம் மூச்சு நின்றது. அது என்ன உருவம்?

பிரமையா, கனவா, ஆவியா, பிம்பமா, ஜாலமா?

கண்களைக் கசக்கினாள். பார்த்தாள். குபீர் என்று நெஞ்சை அடைத்து உணர்ச்சி.

உருவம்தான், நிஜ உருவம்தான்!

அது அந்த வீரனா?

திருப்பதி அருகில் குதிரை ஏறி வந்து அவளைச் சந்தித்த இளைஞனா?

திரும்பவும் கண்களைக் கசக்கினாள். மீண்டும் பார்த்தாள். அவள் பார்ப்பது ஆவி இல்லையே?

முன்னால் ஓர் அடி எடுத்து வைத்தாள்.

பார்வையைத் தீவிரமாக்கிப் பார்த்தாள். அவன் மட்டுமல்ல. அவனருகில் சற்று விலகி ஒரு குதிரையும் நின்றது.

நின்றது மட்டுமல்ல! வாலையும் ஒரு முறை சுழற்றி அவள் கண் முன்னால் அடித்தது.

இதற்கு மேல் தாளாது போக, அவள் வாய் திறந்து, ''யார் நீங்கள்?'' என்று கேட்டாள்.

அந்தப் பிரதேசத்தில் இருந்த சொப்பனத் தன்மையே அவள் பேச்சால் கலைந்தது.

இளைஞன் உடனே பதில் சொல்லவில்லை.

இரண்டு படிகள் ஏறி வந்து நின்றான். ''இளவரசி!'' என்றான்.

அவள் இதயம் வெளிப்புறம் குதித்தது. கண்களில் நீர் முட்டியது. அது அவன்தான்! அவன் குரல்தான்!

இருந்தாலும், ''யார் நீங்கள்?'' என்றாள் சிறிது அழுத்தமுடன்.

அவன் கேட்டதும், அவளது உறுதி சிறிது சிதறியது.

அந்தப் பழைய நாகலாபுரம் சம்பவத்தை நினைத்தாள். இரண்டு வருடங்களுக்கு முன்னால் நடந்தது. அந்தச் சூரியப் பொட்டு விழாவுக்குத் திரள் திரளாக ஜனங்கள் வருவார்கள். காணாதவர்களை யெல்லாம் காணலாம். திருவிழாபோதுதான் அபூர்வ உறவுக்காரர்கள்கூடச் சந்திப்பார்கள்.

அவள் அப்போது கோயிலின் முன் மண்டபத்தில் நின்றான். வரிசையாகப் பல்லக்குகள் உயர் குலப் பெண்டிரையும் ஆடவரையும் கீழே இறக்கிச் சென்ற வண்ணம் இருந்தன.

அந்தப் பல்லக்குகளில் ரங்கப்பாவுக்காக அவன் காத்திருக்க,

கடைசியில் அவர்கள் வீட்டு இரு முத்துப் பல்லக்குகள் வந்தன. ''வழி, வழி'' என்று இரைச்சல்! ஒரு ஜன அலை மடிந்து ஓடியது.

முதல் பல்லக்கை அவன் அணுக, அதன் திரையை விலக்கிக் கொண்டு ஒரு இளம் பெண் இறங்கினாள்.

ஒரு கணம் அவன் முக வெளிச்சம் பளீர் என்று மினுக்கியது.

ஒரு மின் ஒளி பாய்ந்தது என்றே அவன் நினைத்தான்.



அப்படி நிலவுப் பாலாக முகம். இரு கண்களில் இரு விளிம்பு கட்டிய கடல்கள். மெல்லிய அதரத்தில் மாதுளம் பகமை.

இறங்கியவள் துள்ளி, மேலாடை எடுத்துத் தன்னைப் போர்த்திக்கொள்ள,

ஒரு ஒளி அணைந்தது போல் அவன் உணர்ந்தான்.

எனினும் அந்தச் சன்னமான போர்வை வழியே அவளது அழகு மெல்லிய ஜரிகை இழைகளாக இங்குமங்கும் பொட்டுத் தெறித்துக் கசிந்து கொண்டிருந்தது.

அந்த இளைஞன் தன் பிரமிப்பிலிருந்து மீள வெகு நாழிகை ஆகியது.

பின்னர் இரவில் ஏனோ அந்தக் காட்சி அடிக்கடி அவன் மனத்தில் தோன்றி மறைய, உள்ளத்தில் ஊமையாக வலி எழுந்தது.

'இவளிடம் என்ன மாய சக்தி இருக்கிறது!' என்று நினைத்தான். அபூர்வமான அழகு! அபூர்வமானமுகவெட்டு. உடல்முழுதும் அவளது வசந்த கால பரிணமிப்புகள். எல்லாம் சேர்ந்து என் மார்பைப் பிடித்து அழுத்துகின்றனவே' என நினைத்தான்.

அன்று மட்டுமல்ல. பல இரவுகள் அவன் உறங்க முடியவில்லை. அவள் நினைவுகள் ஒரு சுகமான கனமாக அவனை அழுத்தியது. இன்பமும் இருந்தது. வேதனையும் இருந்தது.

இதன் பிறகு ராஜ்ய காரியங்களும் குடும்ப வேலைகளும் அவனை வெவ்வேறு திசைகளில் இழுத்துச் செல்ல,

அதிசயமாக, அவளது நினைவும் அவனுடனேயே தொடர்ந்து வருவதை உணரத் தொடங்கினான்.

தொடரும் நினைவுகள் அவனைச் சும்மா இருக்க விடவில்லை.

அடிக்கடி தனிமையில் நின்று பெருமூச்சு விட்டான்.

வெறும் சூன்யத்தைப் பார்த்துப் பிரமையோடு விழித்தான்.

சில சமயம் இன்னதென்று சொல்ல முடியாத ஏக்கம் அவன் இதயத்தில் புகுந்து ஒரே வேதனையைக் கொடுத்துவிட்டுச் சென்றது.

இது என்ன அதிசயம்! என்று எத்தனை முறை அவன் நினைத்திருக்கிறான்!

எப்போதும் வேதனையே தரும் ஒரு நினைவை அவன் ஏன் மனதார நேசிக்கிறான்?



அவனது காரியங்கள் மிகுந்த அன்றாட வாழ்க்கையில், பல முறை அந்த நினைவு அவனை விட்டு விலகிச் சிறிது மறைந்த போதிலும்,

பின்னர் எப்போதாவது அவன் ஏமாந்து இளைப்பாறும் நேரத்தில் இரண்டு மடங்கு வேகத்துடன் அந்த நினைவு வந்து அவனை ஆக்கிரமித்துவிடும்.

சீக்கிரத்தில் அந்த நினைவு அவன் மனத்தில் ரகசியமாகத் தாலாட்டும் நினைவாக மாறிவிட,

அவனுக்கு அந்தப் பெண் வாழும் நாராயண வனமே சுவர்க்க லோகமாக, பூங்காவாகத் தோன்றியது. ரங்கப்பாவின் வீடு புனிதத் திருமாளிகையாகத் தோன்றியது.

எவ்வளவோ ஆர்வப்பட்டும் அந்தப் பெண்ணை மறுமுறை அவன் பார்க்கவே இல்லை.

இன்று இந்தக் காட்டு மத்தியில் ஒரு குடிலின் முன்புறத்தில் நடுநிசி வேளையில் அவளைப் பார்க்கும்போது,

அவளை அந்தப் பழைய தொடர்போடு நினைவுபடுத்தி நினைக்கும்போது,

''நீங்கள் யார்?'' என்று அவள் கேட்கிறாளே, மனம் என்னமாகக் கொந்தளித்தது?

''கடவுளே! இவள் அதே பெண்ணாக இருக்க வேண்டுமே!'' என்று உள்ளம் எவ்வளவு உருக்கமாகப் பிரார்த்தனை செய்தது.

''இளவரசி!'' என்றான் அவன். ''என்னைத் தெரியவில்லையா? திருப்பதியிலிருந்து நீங்கள் வரும் வழியில் சந்தித்தேனே!'' ஆவலோடு கேட்டான் அவன்.

சுவர்ணமுகியின் முகம் பாகு போல் இளகியது. பல்லை இறுக்கி, மனத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு என்ன பேசுவது என்று அவள் யோசிக்கும்போது.

''இளவரசி! ரத்தக் களறியாக அப்போது வந்தேன். செடி என்று உங்களைக் கூறிக் கொண்டதையும் நம்பினேன். நான் அப்போது ஒரு ஜீவ நிலையில் இல்லை. அநேகமாக இறந்திருந்தேன். உலகமோ, அதிலிருக்கும் ஆட்களோ எனக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. நான் மரணதேவனை நேருக்கு நேர் பார்த்துக் கொண்டிருந்தேன்.''

''ஓகோ!'' என்றாள் சுவர்ணமுகி. ''அப்புறம் தப்பி விட்டீர்களாக்கும்!''

ஒரு அங்கலாய்ப்பில் தனது ஆவலை வடித்து விட்டாள்.

உண்மையில் அவன் எப்படித் தப்பினான், அவள் கண் முன்னே நின்ற அதே வீரன், என்பதை அவன் வாய் மூலமே கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு என்ன ஆசை அவளுக்கு?

''ஆமாம், இளவரசி! முள் மரத்தடியில் என்னைக் கிடத்தி விட்டுப் போனீர்கள்! நான் இறந்திருப்பேன். ஆனால் என்னை வாழ வைத்தது என் துரோகியான நண்பன்'' என்றான் கோபமாக.

''யார் அது?''

''இப்போது தங்கள் துயரங்களுக்குக் காரணமாக இருக்கிறானே அவனேதான்! தோதா! நீங்கள் போன பிறகு அவன் அந்த மரத்தடிக்கு வந்து என்னைப் பார்த்தான்.''

''உதவி செய்தாரா?''

''இல்லை. என்னை அங்கேயே பரிதவிக்க விட்டு, கெக்கலித்து வார்த்தை சொல்லி ஓடி விட்டான். அப்போதுதான் அவனது நயவஞ்சகத்தனம் தெரிந்தது. அவனது வஞ்சம் தெரிந்த அதே கணத்திலேயே நான் வாழ நினைத்தேன். உயிர் எப்படியும் பெற வேண்டும் என்று துடியாகத் துடித்தேன். கடவுள் எனக்கு அருள் புரிந்தார். அங்கே வந்த கன்னட பைராகிகள் என்னைக் காப்பாற்றினார்கள்.''

சுவர்ணமுகி அவனை மெல்லிதாகப் பார்த்தாள். அவள் உள்ளத்தில் ஆயிரம் கேள்விகள்! எனினும், தனது ராஜ பரம்பரையின் பண்புகள் காரணமாக, தன் உள் ஆர்வங்களை அடக்கிக் கொண்டு, ''இங்கே எப்படி வந்தீர்கள்?'' என்று மட்டும் கேட்டாள்.

அர்ச்சுனன் தனக்கு நேர்ந்ததையெல்லாம் கூறி, கடைசியில் துப்பு விசாரித்துக்கொண்டு அந்தக் காடு வரை வந்து விட்டதைக் கூறினான். தனது சின்னப் படையை அரண்யத்துக்கு வெளியே ஒரு மாளிகையில் நிறுத்தி வைத்துவிட்டு அவன் மட்டும் தைரியமாகக் காட்டுக்குள் புகுந்து வந்ததைக் கூறினான்.

''இளவரசி! தோதா இங்கே எங்கேயாவது சமீபத்தில் இருப்பான். நிச்சயம் இங்கே உங்களைத் தேடி வருவான். அதற்குள் நீங்கள் போய்விடுவது நல்லது. எனக்கு அனுமதி கொடுத்தால் என் படையையும் பல்லக்கையும் அழைத்து வருவேன். காலையில் நீங்கள் கிளம்பிவிடலாம்!'' என்றான்.

''ஐயா, பொறுங்கள்! காலை வரை இங்கே இளைப்பாறுங்கள்! பிறகு போகலாம்'' என்றாள் அவள்.

''இல்லை இளவரசி! நேரமில்லை. உடனே நீங்கள் இந்த இடத்தை விட்டுப் புறப்பட்டாக வேண்டும். இல்லாவிடில் ஆபத்து! நரசய்ய தளவாய் தோதாவை நம்பாமல் அவரே ஒரு படையுடன் இந்தக் காட்டை நோக்கி வருவதாக எனக்குச் செய்தி வந்தது. காலைவரையில் பொறுக்க முடியாது'' என்றான் அவன்.

''நல்லது!'' என்றாள் சுவர்ணமுகி. ''பத்திரமாகப் போய் வாருங்கள்!''

''சீக்கிரம் வருவேன். அதுவரை எங்கேயும் போக வேண்டாம். இங்கேயே இருங்கள்'' என்று கூறிப் படிகளில் விரைவாக இறங்கினான்.

''வருகிறேன்'' என்று கூறிக் குதிரை மேல் தொத்தி ஏறினான்.

சுவர்ணமுகி அவனைத் தன் மெழுகான கண்களோடு பார்த்தாள்.

சற்று எட்டத்தில் அவன் போனதும் அவனைக்கூப்பிட வேண்டும் போலத்தோன்றியது.

சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

கீழே பாறைகளின் இடுக்குகளில் குதிரையும் அவனும் நிழல்களாகப் போனார்கள்.

சீக்கிரம் நிழல்கள் மறைந்துவிட, மிக மெல்லிய குளம்பு ஒலிகள் அவள் காதுகளில் நுட்பமாக வந்து விழுந்தன.

பொழுது விடிந்து வானம் மினு மினுப்பாகிக் கொண்டிருந்தபோது.

முதலில் அவள் காதுகளில் வகைப்படுத்த முடியாத கோஷம் ஒன்று விழுந்தது.

திடுக்கிட்டு எழுந்தாள்.

அது உண்மையா என்று நினைக்கும்போது ஒரு ஆரவாரமே தெளிவாக அவள் காதுகளில் விழ ஆரம்பித்தது.

அவளுக்கு ஒரு திகைப்பு ஏற்பட்டது.

என்ன நடக்கிறது?

காட்டில் ஏதாவது கலவரமாகி அல்லது சமுத்திரம் ஏதாவது பொங்கி வருகிறதா?

தடதடவென்று காலடிச் சத்தம். கொந்தி ஓடிவந்தாள். ''அம்மா ராஜ படை வருகிறது. ஒளிஞ்சுக்கோ!'' என்றாள்.

''ஏன்?'' என்று கலவரத்துடன் கேட்டாள் சுவர்ணமுகி.

''அழகான பெண்ணுக்கெல்லாம் ஆபத்து. நரசய்யா தளவாய் வரார். எல்லாப் பெண்களும் ஒளிஞ்சுக்கிறாங்க பார், நீயும் போ'' என்றாள் அவள்.

சுவர்ணமுகி கலக்கத்துடன் குடிலை விட்டு வந்து படிகளில் இறங்க ஆரம்பித்தாள்.

(தொடரும்)


நீங்களே கணக்கிட்டு பாருங்கள்!

300 கிராம்
ரூ. 3·20

ஒரு சாதாரண டிட்டர்ஜண்ட் சலவை கட்டியை விட எடையோ இரண்டு மடங்கு விலையோ சிலகாசுகள்தான் அதிகம்

டோட்டல்

நீல டிட்டர்ஜண்ட் சலவை பார்



சுலபமான
சலவைக்கு
5 சிறிய பகுதிகள்

உண்மையான முதல்
டிட்டர்ஜண்ட் பார்!
டோட்டல், நீல டிட்டர்ஜண்ட்
சலவைக் கட்டியின் அதிக
வெண்மையையும், சலவை
பார் சோப்பின் சௌகரியத்தையும்
கொடுக்கிறது.
சிக்கனமாக சலவை செய்ய இதை 5 சிறிய
பகுதிகளாக்கி உபயோகிக்கலாம்.
எடையோ இரண்டு மடங்கு
விலையோ சில காசுகள்தான் அதிகம்!
நீங்கள் 125 கிராம் எடையுள்ள சாதாரண டிட்டர்ஜண்ட
கட்டியை என்ன விலைக்கு வாங்குகிறீர்கள்?
300 கிராமின் விலை ரூ. 3.20 என்றால் 250 கிராம் டோட்டலின்
விலை ரூ. 2.67 தான். அதாவது ஒரு சாதாரண சலவைக்
கட்டியைவிட எடையோ இரண்டு மடங்கு,
விலையோ சில காசுகள் தான் அதிகம்.

தமிழ் நாடு, பீஹார் மற்றும் ஆந்திர பிரதேஷ் மாநிலங்களில் மட்டும் கிடைக்கும்.

MCA-TDB-51-Tam

கர்நாடக சோப்ஸ் அண்டு டிட்டர்ஜெண்ட் லிமிடெட் அளிக்கும் தரமான தயாரிப்பு
விற்பனை செய்பவர்கள்: மைசூர் சேலஸ் இண்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.



சூடர்மணி
பனியன்கள்
மிடுக்கான தோற்றம் தரும் எடுப்பான உள்ளாடைகளே
ISI
தர நிர்ணயம் பெற்ற
நீடித்து உழைக்கும் பாதுகாப்பான
பனியன், ஜட்டிகள், காலர்சட்ட &
பேன்ஸி கலர் பனியன்கள்
சூடர்மணி நிட்டிங்ஸ்



அழகிய மென்னுடல்
மேனிக்கு...
மெடிமிக்ஸ்
ஆயுர்வேத டாய்லட் சோப்பு
• முகப்பரு • வேர்க்குரு • கரும்புள்ளி • சிரங்கு
• தேமல் • வண்ணான் படை • சொறி • கரப்பான்
MEDIMIX
MEDIMIX AYURVEDIC TOILET SOAP
art ads
ஈறுகளின் நலந்தீர்க்கும் பற்களின் உறுதிக்கும்
மெடிமிக்ஸ்
ஆயுர்வேதப் பற்பொடி
• வாய் துர்நாற்றத்தை போக்குகிறது
• பல்வலியை போக்கி பற்களை பழுதாகாமல் தடுக்கிறது
MEDIMIX
CHOLAYIL PHARMACEUTICALS

திருநெல்வேலியில் வழக்கறிஞராகஇருந்த ஏ. கே. கோபால பிள்ளை என்ற மலையாள அறிஞர் டி. கே. சி.யோடு நெருங்கிப் பழகியதில்லை. என்றாலும் ரசிகமணியின் பெருமைகளை நன்கு உணர்ந்தவர். வெறும் படிப்பினால் வருகிற திறமையில்லை, டிகேசியின் திறமை, கவிதையை அனுபவிக்கிற கலையிலே அவர் ஒரு பிறவி மேதை என்று கோபால பிள்ளை அடிக்கடி சொல்லுவார். டிகேசியைச் சந்தித்துப் பழகத் தொடங்கியதும் இந்த மதிப்பும் வியப்பும் மேலும் அதிகமாயின. கடிதப் போக்குவரத்தும் தொடர்ந்தது.

இதோ கோபால பிள்ளைக்கு ரசிகமணி எழுதிய ஒரு கடிதம்:



எது கவி?

ரசிகமணி ரசித்த மணிகள்

மீ.ப.சோமு

திருக்குற்றாலம், 26-2-45

அருமை நண்பர் கோபால பிள்ளை அவர்களுக்கு, நமஸ்காரம்.

இந்தத் தடவை இங்கிருந்து திருநெல்வேலிக்குப் புறப்பட்டபோது நல்ல நல்ல சகுனங்களாகத்தான் வந்திருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். ஏனென்றால் தங்களோடு இரண்டு மணி நேரம் அளவளாவ முடிந்ததல்லவா? பொதுவாக ரஸங்களையும், பாவங்களையும் நம்மவர் அனுபவிப்பதில்லை. ஏன் — மாட்டவே மாட்டேன் என்கிறார்கள். சிலர், கூடவே கூடாது, எதிர்ப் பிரசாரமே செய்ய வேண்டும் என்று சொல்ல முன்வந்திருக்கிறார்கள். காரணம் என்ன? கவியைக் காணவில்லை அவர்கள்! அப்படியே கவியில் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது அவர்களுக்கு. இந்த நிலையில் ரஸங்களிலேயே ஊறிக் கிடக்கிற தங்களுடன் அளவளாவ நேரம் வாய்த்ததென்றால் அதிர்ஷ்டந்தானே?

"கவி என்பது கருத்துக்களைக் கொண்டு எழுதுவது அல்ல. வார்த்தைகளைக் கொண்டாக்கும் எழுதுவது" என்று தாங்கள் பிரஞ்சு ஆசிரியர் சொன்னதை எடுத்துச் சொன்னீர்கள். இந்த உண்மையை ஒப்புக்கொள்ளவோ, அனுபவிக்கவோ எளிதில் யாருக்கும் தைரியம் வராது. தங்களுக்கு அந்த உண்மையில் மோகமே ஏற்பட்டு விட்டது. அதில் எனக்கு எவ்வளவோ சந்தோஷம்.

மேலும் சொன்னீர்கள், "நீங்கள்தான் இந்த விஷயத்தை வற்புறுத்தி வருகிறீர்கள்" என்று. என்னைப் பாராட்டியும் பேசினீர்கள்.

தங்களுடன் ஏதோ அற்ப சொற்பந்தான் எனக்குப் பழக்கம். வேறு மற்றுப் பல நண்பர்களோடு வியாழ வட்டமாக நெருங்கிப் பழகி வந்ததில்க் குறைவில்லை. அவர்களுக்கு நான் சொல்லுவது விளங்கவில்லை. அதிகப் பிரசங்கித்தனந்தான் என்று என் அபிப்பிராயங்களைத் தள்ளிவிட்டார்கள். Venus of Milo வைப் பார்த்தால் சுண்ணாம்பாக நீற்றினால் வெற்றிலை போட உதவும் என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் தங்களுக்கு நான் பிரசாரம் பண்ணி வருவதெல்லாம் தளபாடமாய் இருக்கிறது.

பிரெஞ்சு ஆசிரியர் சொன்ன உண்மையை கவி ஒன்று கொண்டு நிரூபித்துவிட்டீர்கள்.

"இரவானது கருமேனி கொண்ட பெண் போல் இருக்கிறது. வானத்தைப் பார்த்தாலும் இருள்தான். அதாவது அந்த அம்மாளின் கூந்தலும் கருப்புத்தான். அவளிடத்தில் இப்போது சோபிதம் இல்லை. அதோ, சந்திரன் உதிக்கிறான். சந்திர கிரணங்கள் இரவோடு ஒன்றாகக் கலந்துவிடும். அதாவது நாயகன் நாயகியைத் தழுவிக் கொள்வது போலிருக்கும். ஆகவே இந்த விஷயத்தை எப்படிச் சொல்லலாம் — இரவாகிய பெண்ணுக்குச் சந்திரனாகிய கணவன் ஒருவன் வந்து விட்டான்."

இது கருத்துக்களைக் கொண்டு எழுதியது. கவி அல்லவே அல்ல. வார்த்தைகளை உபயோகப்படுத்தித்தான் இருக்கிறது. எதற்காக? கருத்துக்கள் இருக்கின்றன என்று சொல்லித் தீர்த்து விடத்தான்!

ஆனால், சந்திரன் உதித்ததைப் பார்த்ததும், ஒருவனுக்கு ஆனந்த வெறி உண்டாயிற்றே, அதை வெளியிடுகிறதா, மேலே சொன்ன வார்த்தைகள்? வெளியிடவேயில்லை. அதற்குப் பதிலாக அந்த ஆனந்த வெறியை வார்த்தைக் குழம்புக்குள் — தார் எண்ணெய் மாதிரி குழம்பு — முழுகடிக்கவே பார்க்கிறது. இப்படி வார்த்தைகள் வந்து உணர்ச்சிகளை 'தொம்ஸம்' செய்கிறதைப் பார்ப்பதிலேயே ரஸம் இருக்கிறது என்று சொன்னால், அவர்களோடு நாம் எப்படிக் கட்டி அழுகிறது? வார்த்தைகள் வேறு ஒரு ஜோலியும் வைத்துக் கொள்ளாமல் உணர்ச்சிகளை மாத்திரம் வெளியிடும்போது கவி

பிறக்கிறது! தாங்கள் சொன்ன மலையாளக் கவி கவிதான். ஏன்? வார்த்தைகள் உணர்ச்சியை மாத்திரம் வெளியிடுகின்றன. (இரவுப் பெண்ணுக்கு நாயகன் சந்திரன் கிழக்கில் உதித்து வருகிறான்).

தான தன்ன தான தன்ன
''கருத்த பெண்ணே
கருங் குழலி
நினக் கொருத்தன்
கிழக் குதிச்சு.''

வார்த்தைகள் தாளம் போட்டுக்கொண்டு கும்மாளி போடுகின்றன. உணர்ச்சி தத்ரூபமாக வெளியாகிறது. எதை மறந்தாலும் கும்மாளியை மறக்க முடியாதுதானே! உணர்ச்சியை மறக்க முடியாது. கவி—கவி தான். கவி விளங்கவில்லை, நமக்கு வரமாட்டேனென்கிறது என்ற காரணத்தால் அது வேண்டாம், வசனத்தைத்தான் கட்டி அழுது கொண்டிருப்போம் என்று சொல்லுகிறதா?

அன்று தங்களோடு சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்ததில் ஒரு பிரத்தியேகமான திருப்தி எனக்கு. தமிழ்க் கவி என்றால் எளிமைக்கு லக்ஷியம் என்று அடிக்கடி சொல்லுவேன். தமிழ் ஸ்காலர்களாகிய நண்பர்களோ அப்படிச் சொல்வதெல்லாம் 'சௌடால்தனம்' என்று சொல்லி என்னை ஏளனம் பண்ணுவார்கள். அர்த்தம் என்ன? அந்தப் பிரகிருதிகளுக்குத் தமிழ் விளங்கவில்லை என்பதுதான்.

தாங்களோ, தமிழ் இலக்கியத்தோடு அதிகப் பயிற்சி இல்லாமலே, தமிழ்க் கவிகளிலுள்ள (கருத்தையல்ல) உணர்ச்சியையும், ரூபத்தையும் குறை வைக்காமல் அனுபவிக்கிறீர்கள். போதாதா அது, தமிழின் எளிமையை எடுத்துக் காட்டுவதற்கு?

தங்கள்
டி. கே. சிதம்பரநாதன்

---

47 நாட்கள்



மீண்டும் சிவசங்கரியின் நாவல் ஒன்று படமாகியிருக்கிறது. சுவாரஸ்யத்தோடு வெளிவந்து பரபரப்புக்குள்ளான கதை. திரையில் இந்த இரண்டுமே இல்லாமல் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழனு நீ — தாலிக்குப் பெருமை — பெண்மையின் உயர்வு போன்ற 'பந்தா'வான பஞ்சாங்க வசனங்கள் எழுதி சினிமாவுக்குத் தான் புதிது என்று நிரூபணமாகிறார் சிவசங்கரி.

ஆதிச்சபுரம் அப்பாவிப் பெண் விசாலிக்கு அதிர்ஷ்டத்தில் வாய்க்கிறது பாரீஸ் மாப்பிள்ளை. அங்கு போன பின்தான் தெரிகிறது அவன் வக்ரமும் விகாரமும் சேர்ந்த ஜனப் பிறவி என்று. ஏற்கனவே ஒரு பெண் டாக்டருடன் தொடர்புடைய கணவனுடன் ஒத்துப்போக மறுக்க, சித்ரவதைப் படலம் ஆரம்பமாகிறது. எப்படியாவது தப்பிவிட வேண்டும் என்று துடிக்கிறாள் விசாலி.

படுக்கையில் இடதுபுறம் சாய்ந்து படுத்தபடியே பல ப்ரேம்களில் வரும் ஜெயப்பிரதா சரிவர எக்ஸ்பிரஷன் கொடுத்தாலும் பதிலுக்குச் சரிவர ரியாக்ஷன் கொடுக்க முடியாமல் சிரஞ்சீவி தவிக்கும்போது சலிப்பில் கண்ணை மூடுகிறோம். மூடினால், சரிதாவும் டில்லி கணேஷும் பின்னணியில் ஆர்ப்பாட்டம் செய்து தெலுங்கு டப்பிங் படமோ என்ற சந்தேகத்தை வரவழைக்கிறார்கள். போதாக் குறைக்குத் துணை நடிகர்கள் அனைவரும் தெலுங்கு நடிகர்கள்.

நேராய்ச் சொல்ல வேண்டிய கதையில் வீணாய் அறிவுஜீவி போல் பேசும் ஒரு நடிகை கேரக்டரை (சரிதாதான்) நுழைத்து ப்ளாஷ்பேக்கில் குழப்பி, திரைக் கதையைச் சொந்தம் கொண்டாடுகிறார் பாலசந்தர்.

நீண்ட பாரீஸ் வீதிகளையும், சிருங்கார சிற்ப வேலைப்பாடுகளையும் காட்சிக்கேற்ற வண்ணமும், அழகழகான புறநகர்க் காட்சிகளையும் படம் பிடித்திருப்பதில் லோகநாதனின் திறமை பளிச்சிடுகிறது. தனித் தனியான காட்சி அமைப்புக்களை கதையோடு சரிவர சேர்த்திருக்கும் கிட்டுவும் பாராட்டுக்குரியவர். பின்னணியில் சப்தமே இல்லாமல் மறைந்திருக்கிறார் எம். எஸ். வி.

சண்டை சச்சரவு ஏதுமின்றி அயோக்கிய புருஷனிடமிருந்து அப்பாவி விசாலியை மீட்கிறார் ஜெண்டில் மேனாய் வரும் டாக்டர் சரத்பாபு. விசாலி தப்பிப் போவதில் நியாயமாய் இருக்க வேண்டிய த்ரில்லைக் கோட்டை விடும் டைரக்டர் மீது கோபம் வருவதுதான் மிச்சம்.

—சிந்துஜீவா

விளையாட்டுதான்
குழந்தைகளுக்கு அனைத்தும் –
ஆயினும் பெற்றோர்கள் இம்மகிழ்ச்சியில்
மட்டுமே திளைத்துவிட முடியுமா? அவர்களை



நல்ல முறையில் வளர்த்து ஆளாக்க இப்போது
முதற்கொண்டே திட்டமிட்டுச் சேமிக்க வேண்டும்!

லக்ஷ்மி விலாஸ்
பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: கரூர் 639 001
நிர்வாக அலுவலகம்: சென்னை 600 086

என். வி. ஸ்ரீநிவாசன்
சேர்மன்

'கனிவான சேவைக்கும்,
பாதுகாப்புக்கும்
லக்ஷ்மி விலாஸ் பாங்கில்
சேமிக்கத் தொடங்குவீர்'.


அன்னியச் செலவாணியில் வர்த்தகம் செய்ய அங்கீகாரம் பெற்ற வங்கி

பல் டாக்டர்கள் கூறுகிறார்கள்

பற்கள், ஈறுகளின் முறையான பராமரிப்பிற்கு, பற்களை பிரஷ் செய்வது போன்றே ஈறுகளைத் தேய்த்துக் கொடுப்பதும் அவசியமாகும்

போர்ஹென்ஸ் டபிள் ஆக்ஷன் டூத்பிரஷ் உபயோகியுங்கள்

இது உங்கள் பற்களை பிரஷ் செய்யும்போதே ஈறுகளையும் தேய்த்துக் கொடுப்பதற்கேற்ப விசேட முறையில் உருவாக்கப்பட்டது



போர்ஹென்ஸ்

டூத்பிரஷ்

குடும்பத்தினர் எல்லோருக்கும்
அடல்ட் (மீடியம், சாஃப்ட்),
ஜூனியர், பேபி

Regd. T.M: Geoffrey Manners & Co. Ltd.

256F-303 TAM

டொனேஷன்

சாரதா இரண்டு நாட்களாக ஆபீசுக்கு வரவில்லை அதைப் பற்றி யாரும் கவலைப் படவும் இல்லை. உடல்நிலை சரியாக இல்லை என்று லீவு போட்டிருந்தாள்.

இரண்டு நாட்கள் லீவு முடிந்ததும் அவள் காரியாலயம் வரவில்லை. இன்னொரு லீவு விண்ணப்பம்தான் வந்தது. மெடிகல் சர்ட்டிபிகேட்டோடு, இன்னும் ஒரு வாரத்துக்கு லீவு கேட்டிருந்தாள்.

முகம், கை, கால்கள் வீங்கியிருப்பதாகவும் சிறுநீர் கழிக்க முடியாமல் இருப்பதாகவும் பரிசோதனைக்காக ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அந்த லீவு விண்ணப்பத்தில் குறிக்கப்பட்டிருந்தது.

சாரதா எங்கள் காரியாலயத்தில் ஒரு டைப்பிஸ்ட். எட்டுப் பேரில் அவள் ஒருத்தி. அந்த எட்டுப் பேருக்கும் நான் சூப்பர்வைசர் மாதிரி. நானும் டைப்பிஸ்ட்தான். ஆனால் டைப்பே அடிக்காத டைப்பிஸ்ட்! என் வேலை தட்டெழுத்துக்காகக் காரியாலயத்தின் பல இலாகாக்களிலிருந்து வரும் கையெழுத்துப் பிரதிகளை இந்த எட்டு டைப்பிஸ்ட்டுகளுக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டியது; அவர்கள் டைப் செய்து கொடுத்ததைச் சரிபார்த்து அந்தந்த இலாக்காக்களுக்குச் சேர்ப்பிக்க வேண்டியது.

எட்டுப் பேரில் நான்கு பேர் பெண்கள். சாரதாதான் அந்த நான்கு பேரிலும் இளையவள். வயதில் மட்டுமல்ல, சர்வீசிலும் அவள்தான் ஜூனியர். மூன்று வருடங்களுக்கு முன்தான் சேர்ந்தாள். அப்போது அவளுக்கு வயது இருபத்தி மூன்று. அதாவது இப்போது இருபத்தாறு.

வேலையில் சேர்ந்தபோதும் அவளுக்குக் கல்யாணம் ஆகியிருக்கவில்லை. அதன் பிறகும் இதுவரையில் கல்யாணம் நடக்கவில்லை. கல்யாணத்துக்காகத்தான் அவள் வேலை செய்து சம்பாதிப்பதாகவும் பணம் சேர்த்து வைத்துக் கொண்டிருப்பதாகவும் பேசிக் கொண்டார்கள்.

நான்கு பெண் டைப்பிஸ்ட்டுகளிலும் எல்லோரையும் விட சாரதாதான் அழகானவள்.

எனக்கும் அவளுக்கும் சென்ற ஒரு வருஷமாகப் பேச்சு வார்த்தை கிடையாது. அதற்குக் காரணம் விசித்திரமானது.

ஒரு நாள் மத்தியானம் சுமார் மூன்று மணிக்கு சாரதா என்னிடம் வந்து தனக்குக் கொஞ்சம் வெளியே போய்விட்டு வர வேண்டிய வேலை இருப்பதாகவும் ஒரு அரை மணி நேரம் பெர்மிஷன் வேண்டும் என்றும் கேட்டாள். நானும் அனுமதித்தேன்.

ஆனால் அவள் நாலரை மணிக்குத்தான் திரும்பி வந்தாள்.

''ஸாரி மிஸ்டர் ரகுநாத்! நேரமாயிட்டுது'' என்றாள்

''அந்தக் கதையெல்லாம் வேண்டாம். உனக்குக் கொடுத்திருக்கும் வேலையை முடிச்சுட்டுத்தான் நீ வீட்டுக்குப் போகணும்'' என்றேன், கண்டிப்பாக.

''அப்ப நான் வேலையை முடிக்கிறவரை யிலும் நீங்களும் இருந்தாக வேண்டுமே?'' என்றாள்.

''ஐ டோண்ட் மைண்ட் இட்'' என்றேன்.

ஐந்தேமுக்கால்மணிக்கு சாரதா வேலையை முடித்து எல்லாவற்றையும் என்னிடம் ஒப்படைத்துவிட்டு, ''போகலாமா?'' என்று ஆக்ரோஷத்தை உள்ளடக்கிக் கேட்டாள்.


''எனக்கு ஆட்சேபனை இல்லை. போவதும், போகாததும் உன் இஷ்டம்'' என்றேன்.

எதற்காக அப்படிப் பதில் சொன்னேன் என்று எனக்கே தெரியவில்லை.

சாரதா என்னை முறைத்துப் பார்த்து விட்டுப் புறப்பட்டுச் சென்றாள்.

ஐந்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது. சாரதா படபடப்புடன் திரும்பி வருவதைப் பார்த்தேன்.

''இதெல்லாம் முன் யோசனையுடன் நீங்க போட்ட திட்டமா? நீங்க இவ்வளவு



ஹேமா ஆனந்ததீர்த்தன்

அயோக்கியத்தனமா நடந்துப்பீங்கன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லே!''

''விஷயம் என்னன்னு சொல்லாம...!''

''வெளியே கதவு பூட்டியிருக்கு'' என்று சாரதா கூறியதும் நான் அதிர்ந்து போய் விட்டேன்.

''அப்படியா? எனக்கும் இந்தத் தவறுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது சாரதா! என்னை நம்பு. இது வாட்ச் மேனுடைய முட்டாள்தனம்'' என்று அவளுக்குச் சமாதானம் கூறிவிட்டு, ஜன்னலில் ஏறி நின்று தொண்டை கிழியக் கத்தி, வாட்ச்மேனை வரவழைத்துக் கதவைத் திறக்கச் செய்து, அவனை நன்றாகத் திட்டி, சாரதாவை வெளியில் அனுப்பினேன். நானும் வெளியே வந்தேன். ஆனால் நான் எவ்வளவு சொல்லியும் சாரதாவுக்கு என்மீது நம்பிக்கை விழவில்லை.

அதற்கு மறுநாளிலிருந்து எங்களிடையே பேச்சு வார்த்தை நின்று விட்டது. என்னைப் பற்றிப் பலவிதமான அவதூறுகளும் கிளம்பி ஆபீஸில் பரவிவிட்டது.


சாரதா என்னோடு பேசுவதை நிறுத்திய பிறகுதான் எனக்கு அது எவ்வளவு பெரிய இழப்பு என்பது புரியத் தொடங்கியது.

ஆபீசில் பலர் ஆஸ்பத்திரி சென்று அவளைப் பார்த்துவிட்டு வந்தனர். எனக்குப் போய் அவளைப் பார்க்க வேண்டும் என்று இருந்தபோதிலும் அதற்குத் துணிச்சல் வரவில்லை.

தரகர்: ''மாப்பிள்ளைப் பையன் ஒரு அல்ட்ரா – மாடர்ன் டைப்! அதனாலே.... பெண்ணும் கட்டுப் பெட்டியா இல்லாம இருக்கணும்னு எதிர்பார்க்கிறார்...''

பெண்ணின் தந்தை: ''பிளே– பாய் பத்திரிகைக்கு ஆண்டுச் சந்தா போதாதான்னேன், பிடிவாதமா ஆயுள் சந்தாவே கட்டியிருக்கிறேன்! போதுமா?''

–பெ. கலாசாமி



இன்னும் இரண்டு நாட்களில் என் காதுகளில் விழுந்த செய்தி பயங்கரமானதாக இருந்தது. சாரதாவின் இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்து போய் விட்டிருக்கின்றனவாம்! இப்பொழுது டயாலிஸிஸ் மூலமாகச் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கிறார்களாம்! ஆனால் இருபத்தாறே வயதான பெண்ணுக்கு இந்த முறையில் இரண்டு நாளைக்கொரு முறை சிகிச்சை அளித்துச் சிறுநீரை வெளியேற்றுவதென்பதும், இப்படி அவள் உயிர் பிழைத்திருப்பதென்பதும் வெகு நாட்களுக்கு நடக்காது. ஒவ்வொரு முறை டயாலிஸிஸ் அளிப்பதற்கும் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் செலவாகும்.

ஐந்தாறு முறை டயாலிஸிஸ் சிகிச்சை அளித்த பிறகு ஆஸ்பத்திரியில் இந்தச் சிகிச்சையை இனி நீடிப்பது கஷ்டம்; இவள் பிழைக்க வேண்டுமானால் பழுதடைந்திருக்கும் சிறுநீரகங்கள் இரண்டையும் அகற்றி விட்டு வேறு யாருடைய சிறுநீரகம் ஒன்றையாவது எடுத்துப் பொருத்த வேண்டும் என்றும் அப்படிச் சிறுநீரகம் தானம் செய்பவர்கள் யாரையாவது கண்டு பிடிக்க வேண்டும் என்றும் சொல்லி விட்டார்களாம்.

இந்தச் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு ஏராளமான செலவாகுமென்பதால் ஆபீசில் இதற்காக எல்லோரிடமும் நன்கொடை வசூலிக்கத் தொடங்கினார்கள். ஒவ்வொருவரும் நூறு இருநூறு என்று தாராளமாகவே கொடுத்து உதவினார்கள்.

இந்தச் சமயத்தில்தான் என் குடும்பநிலைமை என்னால் இந்த நன்கொடைக்காக ஒரு நூறு ரூபாய்கூடக் கொடுக்க முடியாத அவஸ்தையில் சிக்கியிருந்தது.

உறவினர்களில் யாரும் தம் சிறுநீரகத்தை அவளுக்குத் தர முன்வரவில்லையாம். அப்பா, அம்மா, அண்ணாக்கள், அக்காக்கள் என்று ஏழெட்டுப் பேர் இருந்தும் ஒருவரும் அதற்குத் தயாராக இருக்கவில்லையாம். எனவே யாராவது பணத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு சிறுநீரக தானம் செய்ய முன் வந்தால்தான் உண்டு. அப்படி இரண்டு மூன்று பேர் வந்தார்களாம். ஆனால் அவர்கள் பெருந் தொகை ஈடாகக் கேட்கிறார்களாம். கிட்டத்தட்ட எழுபத்தையாயிரம் ரூபாய். எனவே கலெக்ஷன் செய்யப்பட்ட தொகையில் இவ்வளவு பெருந் தொகை கொடுத்துச் சிறுநீரகம் வாங்க முடியாது. சாரதாவின் உயிர் இப்போது ஊசலாடிக்கொண்டிருந்தது.

எனக்குச் சாரதாவின் உறவினர்களைப்பற்றி நினைக்கும்போது ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு எழுந்தது.

'இவ்வளவு ஆத்திரப்படுகிறாயே அவர்கள் மேல். நீ இதற்குத் துணிவாயா?' என்ற கேள்வி எழுந்தது எங்கோ ஒரு மூலையில்.

'டொனேஷன் நூறு ரூபாய் கொடுக்க முடியவில்லை என்று வருத்தப்பட்டாயே? பல நூறுகள் மதிப்புக் கொண்ட டொனேஷன் கொடுக்க உனக்கு இது வாய்ப்பு. உபயோகப் படுத்திக்கொள். செய்வாயா?' என்ற தூண்டுதல்.

ஆகவே நேரே ஓடினேன் ஆஸ்பத்திரிக்கு. சம்பந்தப்பட்ட டாக்டரிடம் என் விருப்

கண்ணதாசனுக்கு என்ன உடம்பு?

அமெரிக்கா செல்வதற்கு முன் கவிஞர் சென்னை பொது மருத்துவ மனையில் ஒரு மாத காலத்துக்கு மேல் தங்கிச் சிகிச்சை பெற்று வந்தார். அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் திருவேங்கடமும் தற்சமயம் அமெரிக்காவில் கண்ணதாசனுடன் இருக்கிறார். அமெரிக்கா போவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று காரணம் கூறி ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் டிஸ்சார்ஜ் செய்வதற்கு முன் கண்ணதாசனே டிஸ்சார்ஜ் செய்யப்பட விரும்பியதால் வீட்டுக்குப் போக அனுமதித்தார்கள். இருமல், கபம் இவைதாம் அப்போதைய பிரச்னைகள். 'பிராங்கோஸ் கோப்பி செய்ய வேண்டும் என்று சொன்னார்களாம். இதன் மூலம் வாய் வழியாக ஒரு குழாயை நுழைத்து சுவாசப் பைக்குள் இருப்பவற்றைத் தெளிவாக வெளியே இருந்தே பார்க்க முடியும். ஆனால் பொறுக்க முடியாத வலி இருக்கும்.

'அமெரிக்கா போக வேண்டும் என்ற எண்ணம் உடல்நிலையினால்தான் முதலில் உருவானது' என்று கவிஞரின் வீட்டில் கூறினார்கள். அதற்கு ஏற்றாற்போல் தமிழ் மகா நாடும் நடக்கவே அதிலும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிக் கிடைக்கும் வருவாயை உடல் நலத்தைச் சரிசெய்துகொள்ளப் பயன்படுத்த எண்ணி யிருக்கிறார்.

''என்னுடைய சுவாசப் பையில் ஏதோ கட்டி இருப்பதாக மருத்துவர்கள் சந்தேகிக்கிறார்கள். அதைப் பார்த்து விடுவதற்காகத் தான் அமெரிக்கா போகிறேன்'' என்று கவிஞரே ஒரு சமயம் போவதற்கு முன் கூறினாராம்.

கவிஞரோடு நெருங்கிப் பழகியவரும், அவருக்கு 1948லிருந்து மருத்துவம் பார்த்துக் கொண்டு வருபவருமான டாக்டர் யூ. சீனிவாஸ ராவ் சில விஷயங்களைக் கூறினார்:

''கவிஞர் கண்ணதாசனுக்கு மிகுதியான சர்க்கரை நோய் உண்டு. ரத்த அழுத்தம், கல்லீரல் பிரச்னைகளும் இருந்தன. சர்க்கரை வியாதி உள்ள அவருக்குப் போளி என்றால் மிகவும் பிடிக்கும். ஒவ்வொரு வருடமும் அவரது பிறந்த நாளன்று போளிகளை எடுத்துச் சென்று ''ஒன்றுக்கு மேல் சாப்பிடக் கூடாது'' என்ற உத்தரவுடன் கொடுத்து விட்டு வருவேன். அவருக்கு என்மீது மிகுந்த நம்பிக்கையும் அன்பும் உண்டு. மருந்தை உட்கொள்ளுவதற்கு முன்பு சந்தேகம் வந்து விட்டால் எனக்கு ஃபோன் செய்து கேட்ட பிறகுதான் சாப்பிடுவார். திடீரென்று இப்படியானது ஏன் என்று யோசித்துப் பார்த்தால் மூன்று காரணங்கள் தோன்றுகின்றன. ஒன்று சர்க்கரைச் சத்து ரத்தத்தில் அதிகமாகி நினைவிழந்திருக்கலாம். அல்லது மூளையில் உள்ள சிறு சிறு ரத்த நாளங்கள் ரத்த அழுத்தம் அதிகமானதால் வெடித்திருக்கலாம். அல்லது மூன்றாவதாக யுரேமியா. — சிறுநீரகங்கள் சரியாகப் பணியாற்ற முடியாமல் போகும் போது ரத்தத்தில் யூரியா சத்து அதிகரித்து விடும். இந்த மூன்றில் ஏதாவது ஒன்று நேர்ந்திருந்தால் அபாய நிலைமை என அறிவிப்பார்கள். இவற்றில் எது என்பது டாக்டர் திருவேங்கடம் திரும்பி வரும்போதுதான் தெரியும்."



இதற்கிடையில் நாம் கண்ணதாசன் பூரண ஆரோக்கியம் பெறப் பிரார்த்திப்போம்.

பேட்டி: சலன்

பத்தைச் சொன்னேன். உடனே ரத்தப் பரிசோதனை செய்து பார்த்தார்கள். என் ரத்தமும் சாரதாவின் ரத்தமும் குரூப் பொருந்தியிருந்தன. எனவே 'டிரான்ஸ்ப்ளான்டேஷன்' செய்யலாம். வேலூருக்குப் போக வேண்டும் என்றார்கள். சரி என்றேன். ஏற்பாடுகள் தொடங்கின.

சாரதாவின் முன் நின்றேன்.

''கேள்விப்பட்டேன். எனக்கு ரொம்ப சந்தோஷம். உங்களை நான் தவறாகப் புரிந்து கொண்டு இவ்வளவு நாளும் உங்களுடன் பேசாமல் இருந்ததற்காக மன்னியுங்கள். ஆனால் உங்கள் தானத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. நீங்கள் செய்வது பைத்தியக்காரத்தனம். என் நெருங்கிய பந்துக்களே செய்ய முன் வராத தியாகத்தை நீங்க ஏன் செய்ய வேண்டும்? நாளைக்கு இதனாலே உங்களுக்கு ஏதாவது நேரிட்டால் உங்க அப்பா அம்மாவும் மற்ற பந்துக்களும் என்னைத்தானே திட்டுவாங்க? வேண்டாம். என் விதி இப்படின்னு நான் போறேன்' என்று கூறிச் சாரதா கண்ணீர் விட்டாள்.

''சாரதா! உன் நெருங்கிய பந்துக்களே செய்யாத தியாகம் நான் செய்யறதாச் சொல்றியே, எப்படியானும் அவங்களை விட நெருங்கிய பந்துவா என்னை நீ ஏன் ஏத்துக்கக் கூடாது?''

சாரதாவின் கண்களில் ஒரு மலர்ச்சி!

''நீங்க சொல்றது....?''

''ஆமாம், சாரதா கடவுள் அருளாலே இந்த ஆபரேஷன் சக்ஸஸ்புல்லா முடிஞ்சு நாம் ரெண்டு பேரும் பிழைச்சு எழுந்தால் நாம் ஏன் கல்யாணம் பண்ணிண்டு சௌக்கியமா இருக்கக் கூடாது?''

''ரகுநாத்! இவ்வளவு பெரிய மனசு உள்ள உங்களை எவ்வளவு சின்னவரா நான் நினைச்சுட்டேன் மறுபடியும் கேக்கறேன்; என்னை மன்னிச்சுடுங்க!''

''மன்னிக்காமலா இப்படி....'' என்று அவள் கைகளைப் பற்றினேன்.


ஒரு சுற்று வந்தபோது...



✖ குமரி அனந்தன்



✖ மனோகரன்



✖ விஜயசாரதி



✖ டாக்டர் சமரசம்

● நாஞ்சில் மனோகரன் வீட்டுக்குப் போன் செய்து 'அவர் இருக்கிறாரா?' என்று கேட்டபோது, 'அவர் மருத்துவ மனையில் இருக்கிறார்' என்று பதில் வந்தது. தனியார் மருத்துவ மனையில் தங்கியிருந்த மனோகரனுடன் தொடர்பு கொண்டபோது, போனை எடுத்தவர் அவர் உதவியாளர். 'சந்திக்க வேண்டும்' என்று கூறியபோது, மறுநாள் வரச் சொல்லிவிட்டார். ''ஐந்து நிமிடம் போதும்'' என்று சொன்னவுடன், வரச்சொல்லி விட்டார் மனோகரன். கையில் லேட்டஸ்டாக வெளியான இர்விங் வேலஸின் நாவலை வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். ''என்ன திடீரென்று மருத்துவமனைக்கு வந்து விட்டீர்கள்? உடம்புக்கு ஏதாவது....'' என்று கேட்டபோது ''மெடிகல் செக்கப்பிற்கு வந்தேன்'' என்றார் மனோகரன். (அவருக்கு இருதய நோய் உண்டாம்.) ஐந்து நிமிடம் அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்தவர், சரளமாக ஆங்கிலத்தில் ஒன்றரை மணி நேரம் பேசினார். இடையில் அவர் உதவியாளர் இரண்டு முறை கொடுத்த பப்பிள் கம்மைச் சுவைத்தவாறு பல off the record விஷயங்களைக் கூறினார். எல்லாமே Anti MGR!

● பழைய எம். எல். ஏ. விடுதியின் வராந்தாவில் 20, 25 பேர்கள் கூட்டமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். பேசிக் கொண்டிருந்த பல குரல்களிடையே ஒரு குரல் மட்டும் தனித்து, தெரிந்த குரலாக ஒலித்துக் கொண்டிருந்தது. நெருங்கிச் சென்று பார்த்தால், குமரி அனந்தன். சுற்றி இருந்தவர்கள் அவர் தொகுதியைச் சேர்ந்தவர்களாம். ஒவ்வொருவருக்கும் ஒரு பகுதியைப் பொறுப்பாகக் கொடுத்து வாரத்துக்கு ஒரு முறை அவர்களை வரச் சொல்லிக் குறைகளைத் தெரிந்து கொள்வாராம் அனந்தன். தொகுதி வேலைகளை மறந்து சொந்த வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்கள் இருக்கும் இந்த நாட்களில் குமரி அனந்தன் ஒரு exception! Congrats.


● ''ஒரு பத்திரிகையில், நான் மந்திரியாவேன் என்று ஜோசியம் சொன்னாலும் சொன்னார்கள்; வாழ்த்துத் தந்திகளும், பாராட்டுக் கடிதங்களுமாக வந்து கொண்டிருக்கின்றன. நேரில் வருபவர்களோ ''ஸார் எங்களை மறந்துடாதீங்க'' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கோ என்ன சொல்வது என்றே தெரியவில்லை'' என்றார் அண்ணா

இ.மு.க. எம். எல். ஏ.வான டாக்டர் சமரசம். ரொம்ப Complicated Case தான்!

● தமிழக அமைச்சரவையில், மிகவும் இளையவரான விஜயசாரதிக்கு இன்னும் திருமணமாகவில்லை. கட்சி மேடைகளில் பேசுவதென்றால் இவருக்கு மிகவும் நடுக்கமாம். கூடிய வரை கட்சி மேடைகளைத் தவிர்த்துக்கொண்டிருக்கும் இவரின் இப்போதைய பிரச்னை: 'அரிஜன நலத் துறை'யை ''ஆதித்திராவிடர் நலத்துறை'' என்று பெயர் மாற்றியதற்கு குறை கூறிக் கொண்டிருப்பவர்களை எப்படி மடக்கலாம் என்பதுதான். Job Tough indeed!

● Last but not least சட்ட மன்ற விடுதியில் உறுப்பினர் இருக்கிறாரோ இல்லையோ, ஒவ்வொரு அறையிலும் அரை டஜன் நபர்களுக்குக் குறைவாக இல்லை. இரவு நெடு நேரம் விளக்கை எரியவிட்டு அரட்டை அடித்துக்கொண்டிருப்பதும், இஷ்டத்துக்கு போனை உபயோகப்படுத்திக் கொண்டிருப்பதும் இவர்களது பொழுதுபோக்குகள். அறையில் இடம் போதாமல் இரவில் வராந்தாவில் படுத்துக் கொள்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது மக்கள் வரிப் பணத்தை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

— கௌசல்யா



குயில் பாட்டிலே மற்றோரிடத்திலும் இசையின் அருமை பெருமைகளைச் சுவைபட விளக்குகின்றார்.

'படைப்புக் கடவுளே, நான்முகனே' என்று பிரம்மதேவனை அழைத்து, அவனுடைய படைப்புத் திறனைப் பலவாறு பாடுகின்றார், பிறகு சொல்கிறார்:

...ஆறுது நின்றன்
அதிசயங்கள் யாவினுமே
காணுமுதம் படைத்த
காட்சிமிக விந்தையடா!

''கேட்கும் ஒலியிலெல்லாம் நந்தலாலா — நின்றன்
கீதம் இசைக்குதடா நந்தலாலா'' என்கின்றார்.

''நந்தலாலா'' என்று அவர் கூறுவது, தான்வழிபடுகின்ற தெய்வமான கண்ணனைத் தான்.

இசையரங்குகளில் சில வித்வான்கள் தாளத்தையே பிரதான மாக்கி, பாட்டை இரண்டாந்தரமாகச் செய்து விடுகின்றனர். பாட்டுக் கச்சேரி தாளக் கச்சேரியாக மாறி விடுகின்றது. பாரதியார் இதனை வெறுத்தார். அந்த வெறுப்பை அவர் வாக்காலேயே அறிய முயல்வோம்:

''பாட்டுக்குத் தாளமே யொழிய தாளத்துக்குப் பாட்டில்லை என்ற விஷயத்தைப் பாடுவோர் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். சிலவிதக் கூத்துக்களிலே, தாளத்துக்குப் பாட்டுப் பாடுதல் பொருத்தம். அங்கே கூட, முழுதும் தாள நயத்தையே கருதி இசை நயத்தை நாசம் செய்துவிடக் கூடாது.

''அப்படியிருக்கப் பாட்டுக் கச்சேரி என்று பெயர் வைத்துக் கொண்டு அங்கே இசையின் இன்பங்களைக் கொன்று தாள முழக்கத்தையே பிரதானமாக்குதல் தகாது. அதிலும், கீர்த்தனங்களைப் பாடும்போது, இசையின்பங்களைக் காட்டுதல் முதல் காரியமாகவும், தாளத்தை உபகரணமாகவும் கொள்ள வேண்டும்,''

பாரதி கேட்ட பரம்பொருளின் பாட்டு

காட்டு நெடுவானம்
கடலெல்லாம் விந்தையெனில்
பாட்டினைப்போ லாச்சரியம்
பாரின்மிசை யில்லையடா!
பூதங்களொத்துப்
புதுமை தரல் விந்தையெனில்,
நாதங்கள் சேரும்
நயத்தினுக்கு நேராமோ?
ஆசை தருங் கோடி
அதிசயங்கள் கண்டதிலே
ஓசை தரு மின்பம்
உவமையிலா இன்பமன்றோ?''

பிரம்மனுடைய படைப்புக்களிலே ஒன்றாக சங்கீதத்தை எடுத்துக் கொண்டு, அதைவிடச் சிறந்த படைப்பு வேறில்லை என்று தேசியக் கவிஞர் தீர்ப்புக் கூறுகின்றார்.

''பூதங்கள்'' என்னும் சொல், நிலம்-நீர்-நெருப்பு - காற்று - வான் ஆகியவற்றைக் குறிப்பிடுவதாகும். இந்தப் பூதங்களின் சேர்க்கைதான் பிரபஞ்சம் என்பர் விஞ்ஞானிகள். ''இதைவிடப் பெரிய விந்தை நாதங்கள் சேர்ந்து எழுப்பும் இசை நயம்'' என்றும் கூறுகின்றார்.

பாரதியார் கவிஞராக மட்டுமல்லாமல், காணும் பொருளனைத்தும் கடவுளின் வடிவம் என்னும் கொள்கையுடைய ஞானியாக இசையை அனுகுகிறார். 'நந்தலாலா' என்னும் பாட்டினிலே.

இது, ''சங்கீத 'விஷயம்'' என்னும் கட்டுரை யொன்றிலே பாரதியார் கூறியிருப்பதாகும். இதோ இன்னொரு பாரதி வாக்கு:

''ஜந்துக்களிலே மனிதர்களுக்கும் பறவைகளுக்கும்தான் பாடத் தெரியும். மற்ற மிருகங்களுக்குப் பாட்டு வராது. பறவைகள் வானத்திலே பறப்பதால் அவற்றின் மனநிலை சங்கீதத்துக்கு இசைகின்றது போலும்! மனிதன் உடம்பினாலே பறக்கா விட்டாலும் உள்ளத்தைத் திசை வெளியிலே பறக்கும்படி செய்கிறான். அப்போது இயற்கையிலே பாட்டுத் தோன்றுகிறது.''

இந்தப் பூமண்டலத்தில் எழுகின்ற ஓசை ஒலி எல்லாம் உயிர்க் குலத்திடமிருந்து பிறக்கின்ற நாத கீதங்கள் எல்லாம் சாட்சாத் பரம்பொருளின் பாட்டாகவே பாரதியாரின் செவிகளுக்குப் பட்டன.

இயற்கைக் கவிஞன் பாரதி வானத்திலிருந்து பெய்யும் மழையிலிருந்து எழும் ஒலியைக்கூட சங்கீதமாகவே கருதி அனுபவிக்கிறான். வசன நடைக் கவிதை ஒன்றிலே, ''மழை பாடுகின்றது. அது பல கோடி தந்திகளுடைய இசைக் கருவி'' என்று வருணிக்கிறான். அவன் வெறும் இலக்கண — இலக்கியப் புலவன் மட்டுமல்ல. இயற்கை அறிஞன்.

ம.பொ.சி

(மயிலை இலக்கிய வட்டம் பாரதிய வித்யா பவனச் சொற்பொழிவிலிருந்து)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor : K. Rajendran

REGISTERED No. M 4092
Registered as a Newspaper in Sri Lanka